வாழ நினைத்தால்
வாழலாம்
அமுதவல்லி கல்யாணசுந்தரம்

வாழ நினைத்தால் வாழலாம்

அமுதவல்லி கல்யாணசுந்தரம்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: வாழ நினைத்தால் வாழலாம்
ஆசிரியர்	: அமுதவல்லி கல்யாணசுந்தரம்
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதற் பதிப்பு	: டிசம்பர், 2015
தாள்	: 11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 204
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: அருணோதயம் 5/3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

விலை: ரூ.100.00

கணினி அச்சு	: வேலன் லேசர், சென்னை-18.
அச்சிட்டோர்	: ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14.

வாழ நினைத்தால் வாழலாம்

வாழ நினைத்தால் வாழலாம்

1

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

வறண்ட நிலப்பரப்பின் நடுவே இரண்டு குளங்களும் அதற்கு நடுவில் பெரிய குன்றுமாக பாலைவனச் சோலையாக மலர்ந்து இருந்த அரசரடி குப்பம் கிராமத்தில் இருந்த அந்த புராதன சிவன் கோவிலில், சந்தியா கால பூஜை நடைபெற்றுக் கொண்டு இருந்த வேளையில் இறைவனின் நாமம் ஒலித்துக் கொண்டு இருந்தது.

ஊருக்கு ஒரு குளம் இருப்பதே பெரிய விஷயம். ஆனால் இங்கே ஒன்றுக்கு இரண்டாக, அதுவும் அருகருகே அமர்ந்து இருந்தது. மிகப் பெரிய விஷயம். அந்த இரண்டு குளங்களுக்கு நடுவே அமைந்து இருந்த குன்றுக்கு ஒரு வரலாற்று பின்னணி உண்டு.

அந்தப் பெரிய மணல் குன்றின் அருகே அமர்ந்து இருந்தான் பதினைந்து வயதான சிறுவன் பிரபாகர்.

அவன் கண்களில் வேகம்! கோபம்! இயலாமை! என்று உணர்ச்சிகள் மாறி மாறித் தோன்றி மறைந்து கொண்டு இருக்க நடுவில் கண்ணீரும் எட்டிப் பார்த்தது. நடிகனாக வேண்டும், என்ற அவனின் லட்சியம் நிறைவேறாதா?

நாடகங்களில் சின்னச் சின்ன வேடத்தில் நடித்துக் கொண்டு இருக்கும் அம்மாவுக்கே இது பிடிக்க வில்லை என்றால் அவன் என்ன செய்வது?

பதின்ம வயதில் இருக்கும் அவனுக்கு தன் ஆசை மட்டுமே பிரதானமாகத் தெரிந்தது. அம்மா சொல் லும் நன்மை தீமை பகுத்தறியும் வயதை அவன் இன்னும் எட்டவில்லை. இன்று பிற்பகல் நிகழ்ந்த வாக்குவாதத்தில் அம்மா அவனை கை நீட்டிவிட அவன் கோபமும் உச்சத்திற்குப் போனது.

தோளுக்கு மேல் வளர்ந்த மகனை கை நீட்டி அடிப் பதா? தனியாக நின்று தன்னை வளர்த்த தாயின் முகத்தில் இனி விழிக்கவும் போவதில்லை என்று சபதம் எடுத்துவிட்டு இங்கே வந்தான். அடுத்து என்ன செய்வது என்பது புரியவில்லை.

மூடிய கண்களைத் தாண்டி கண்ணீர் பெருகி வழிந்தபோது அதை யாரோ துடைப்பதை உணர்ந்து கண் விழித்துப் பார்த்தான். எதிரே நின்று இருந்தது ஒரு சிறுமி. அவனை விட வயதில் சிறியவள்!

''யாரு நீ? என்ன ஆச்சு? ஏன் இங்கே தனியாக அமர்ந்து அழுது கொண்டு இருக்கிறாய்?'' என்று

விசாரிக்க அவள் கரத்தை தட்டி விட்டவன் வேகத் துடன் நிமிர்ந்தான்.

பெண்! அதிலும் தன்னைவிட வயதில் சிறியவள் தன்னை அனுதாபத்துடன் விசாரிப்பதா? முன் பின் அறியாதவள் தான் அழுவதைப் பார்த்து விட்டாளே என்ற தன்மான உணர்வு தலை தூக்கியது. கண்களை அழுத்தமாகத் துடைத்துக் கொண்டான்.

''என்னை யார் என்று கேட்கிறாயே? நீ யார்? எங்கே இருந்து வருகிறாய்? உனக்கென்ன வேண்டும்?'' என்று கம்பீரத்துடன் விசாரிக்க அவளுக்கு வியப்பாக இருந்தது.

''அட நிமிஷத்தில் அழுகை மாறி கோபம் வந்து விட்டதே? எப்படி இப்படி வினாடிக்குள் உன் முக பாவனையை மாற்றிக் கொள்ள முடிந்தது?''

''கேள்விக்கு பதில் சொல்லாமல், எதிர்க் கேள்வி கேட்காதே. கேட்ட கேள்விக்கு பதில் சொல். யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?''

''என் பெயர் திவ்யா. ஊர் சென்னை. இங்கே நானும் அப்பாவும் கோவிலுக்கு வந்தோம். நீ கேட்ட கேள்விக்கு எல்லாம் நான் பதில் சொல்லி விட்டேன். இப்ப நீ நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வாயா?''

''உங்க வீட்டில் பெரியவங்களை எல்லாம் இப்படி தான் மரியாதை இல்லாமல் பேசுவாயா?'' என்று மிரட்டலாகக் கேட்க அவள் முறைத்தாள்.

''பெரியவர்கள் யாரும் எங்க வீட்டில் இப்படி அழுது நான் பார்த்தது இல்லை'' என்று பதிலுக்கு

வேகத்துடன் சொல்ல அவன் முகத்தில் ஒரு சின்ன வியப்பு பரவியது. பதிலுக்கு பதில் கொடுக்கிறாளே? புத்திசாலிதான் என்ற எண்ணம் தோன்றியது.

''இன்னும் நான் கேட்ட கேள்விக்கு பதில் வரவில்லை'' என்றவள் இம்முறை ஒருமையிலான வார்த்தைகள் வராமல் பொதுப்படையாக விசாரிக்க அவன் முகத்தில் சின்ன புன்னகை மலர்ந்தது.

''ஓ! என்ன கேள்வி கேட்டாய்?''

''உனக்கு என்ன அம்னீசியாவா?'' என்று கிண்டலாக அந்தச் சிறுமி கேட்டதும், அவன் முகத்தில் ஏற்கனவே வந்து இருந்த புன்னகை மின்னலாக மறைந்தது.

''ஏன்? அதை தெரிந்து கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்? நீ என்ன டாக்டரா?''

''நான் டாக்டர் இல்லை. ஆனால் போகிற வழியில் இப்படி ஒருவர் அழுது கொண்டு இருக்கும்போது அதைப் பார்த்தும் பார்க்காதது போல நகர்ந்து செல்ல நான் குருடி இல்லை. என் அப்பா என்னை அப்படி வளர்க்கவில்லை.''

''ம்ம், ஒத்துக்கொள்கிறேன். நீ ரொம்ப நல்ல பெண் தான். இப்ப உனக்கு என்ன தெரிய வேண்டும்?''

''நீங்க உங்க முட்டியில் தலை வைத்து அழுத தற்கான காரணம்...''

''ப்ச்! அது என் சொந்த விஷயம். அதை நான் பிறரிடம் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. நீ இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?

கோவிலை பார்த்து விட்டால் கிளம்ப வேண்டியது தானே?''

''ம்ம், வந்த வேலை பாதி தான் முடிந்து இருக்கிறது. கோவிலைப் பார்த்தோம், ஆனால் கோவிலைப் பற்றிய விஷயம் யாரும் சொல்லவில்லை. லீவு முடிந்து பள்ளிக்கூடம் திறந்ததும் விடுமுறையில் சென்ற இடங்களைப் பற்றிக் கட்டுரை எழுதச் சொல் வாங்க. அதற்காகத் தான் இங்கே யாராவது உள்ளூர் காரங்க இருக்காங்களா என்று பார்க்க வந்தேன்'' என்று சொன்னதும் அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''என்னைப் பார்த்தால் உனக்கு உள்ளூர்காரன் மாதிரி தெரியலையா?''

''ம்ம்... தெரிந்தது... ஆனால்..'' என்று இழுத்தாள்.

''நீ அழுது கொண்டு இருந்தாயே, உன்னால் கதை சொல்ல முடியுமா? முதலில் இந்த ஊரின், கோவிலின் வரலாறு உனக்குத் தெரியுமா?'' என்ற கேள்வி அவள் இழுப்பில் தொக்கி நின்றது. கேளாத அவள் கேள்வி அவனைச் சீண்டிவிட்டது.

''இந்த ஊரின் வரலாறு, கோவில் தல புராணம் எல்லாம் எனக்குத் தெரியும். நானே சொல்லட்டுமா?''

''நீயா?'' என்று சந்தேகத்துடன் இழுக்கும்போதே அவளைத் தேடி அவள் தந்தை வந்து விட்டார்.

''திவ்யா, இங்கே என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாய்?''

''இதோ இந்த பையனிடம் சாரி, இவரிடம் ஊர் பற்றிய வரலாறு சொல்லக் கூடத் தெரியுமா என்று

விசாரித்துக் கொண்டு இருந்தேன்...'' என்று சொல்ல முன்னால் வந்து கரம் குவித்து வணக்கம் தெரிவித் தான் பிரபாகர்.

''வணக்கம் சார், நீங்க வெளியூரில் இருந்து வந்து இருப்பதாக உங்கள் மகள் சொன்னாள். இந்த கோவில் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருப்பதாகச் சொன்னாள். உங்களுக்கு எங்க ஊர் கோவில் பற்றிய வரலாற்றை நானே சொல்லட்டுமா?'' என்று கைகளை விரித்து முன் புறம் குனிந்து பாவனையுடன் கேட்க அவனின் அந்தத் தோரணை சுப்ரமணியன் மனசை கவர்ந்தது.

''நீ சின்ன பையனாக இருக்கிறாய்? உனக்கு இந்த ஊரின் வரலாற்று கதை எல்லாம் தெரியுமா?''

''எனக்குத் தெரியுமா இல்லையா என்பதை கேட்டு முடித்த பிறகு சொல்லுங்க'' என்று நம்பிக்கையுடன் சவால் விட, அவர் புன்னகையுடன் பார்த்தார். அவன் தன்னம்பிக்கையை குலைக்க விரும்பவில்லை.

''ஓ! அப்படியா, ரொம்ப சந்தோஷம். உனக்கு தெரிந்த கதையைச் சொல்லு கேட்போம்.''

''சொன்னால் எனக்கு என்ன தருவீங்க?''

''அட! இது வேறயா? உனக்கு என்ன வேண்டும் என்று நீயே சொல்லு...''

''எனக்கு... எனக்கு... நூறு ரூபாய் வேண்டும்...''

''நூறு ரூபாயா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்க அவன் திகைப்புடன் பார்த்தான்.

''அது உங்களுக்கு அதிகம் என்றால் ஐம்பது ரூபாய் கொடுங்க...'' என்று சொல்ல அவர் வியப்புடன் பார்த்தார். என்ன இவன் இப்படிப் பேசுகிறான்? இவனுக்கு அப்படி என்ன அவசரமான பணத் தேவை?

''அப்பா, அவனுக்கு ரொம்ப அவசரமா அந்தப் பணம் தேவை போல. நான் வரும்போது அழுது கொண்டு இருந்தான். அதனால் பேரம் பேசாமல் ஐம்பது ரூபாயைக் கொடுத்து விடுங்க'', என்று அப்பா வின் காதில் திவ்யா ரகசியம் பேச அவர் வியப்பு அகலாமலே தலை அசைத்து ஆமோதித்தார்.

''சரிப்பா, நீ கேட்ட ஐம்பது ரூபாயை இப்போதே தருகிறேன். வைத்துக்கொள்'' என்று பர்சில் இருந்து பணம் எடுத்துக் கொடுக்க மறுப்பாக தலை அசைத் தான் பிரபாகர்.

''நீங்க சும்மா பணம் கொடுக்க வேண்டாம். நான் வேலை செய்த பிறகு, அதன் தரத்தைப் பார்த்து பணம் கொடுத்தால் போதும்'' என்று தலையை நிமிர்த்திச் சொல்ல சுப்ரமணியனின் வியப்பு கூடியது. தேவை இருக்கும் போதும் நிமிர்ந்து நின்ற அவன் தன்மானம் பிடித்தது.

''உன் பேர் என்ன?''

''பிரபாகர்...''

''அழகான பெயர். நீ இந்த கோவிலைப் பற்றிச் சொல்லு. நீ சொன்ன விளக்கம் எவ்வளவு அழகா இருக்கோ, அவ்வளவு அதிகமா பணம் உனக்கு தரு கிறேன் போதுமா?'' என்று சொல்ல அவன் உற்சாக மாகச் சொல்ல ஆரம்பித்தான்.

அது அவனுக்கு அறிமுகம் ஆன கதை! பல நூறு முறைகள் கோவிலுக்கு வரும் பிரயாணிகளிடம் ஐயர் எடுத்துச் சொல்லும்போது கேட்ட கதை! ஒவ்வொரு முறை கேட்கும் போதும் அவனுக்கு பிரமிப்பை ஏற்படுத்தும் கதை! ஆளும் அரச குடும்பத்தின் மீது குடிமக்கள் வைத்து இருக்கும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பார்த்து வியந்த கதை! அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

''எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஊரை செங்களராஜன் என்ற குறுநில மன்னன் ஆண்டு வந்தான்...'' என்று அவன் நேர்த்தியாக கதை சொல்ல ஆரம்பித்த ஐந்தாவது வினாடியில், திவ்யா கை காட்டி நிறுத்தினாள்.

''ஒரு நிமிஷம்! உங்களை விட பெரியவர், அதிலும் நாடாளும் மன்னர். அவரை இப்படி தான் மரியாதை இல்லாமல் அவன் இவன் என்று பேசுவதா?'' என்று கேட்க திவ்யாவின் கேள்வி சுப்ரமணியனுக்கு வியப்பை அளித்தாலும் பிரபாகருக்கு அது பொட்டில் அடித்த மாதிரி இருந்தது. இவள் விவகாரமானவள். இவளிடம் கவனமாக இருக்க வேண்டும் என்று மனத்தில் எண்ணிக் கொண்டான்.

''நீ சொல்வது சரிதான். இனிமேல் மரியாதையாகச் சொல்கிறேன்...'' என்று சொல்ல தன்னைவிடச் சிறியவளாக இருந்தாலும், சுட்டிக் காட்டிய தவற்றைத் திருத்திக் கொள்ளும் அந்தக் குணம் சுப்ரமணியன் மனத்தில் பதிந்தது.

''செங்களராஜா திருவண்ணாமலையில் உறையும் அண்ணாமலையார் மேல் மிகுந்த பக்தி கொண்டவர். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை தீபத்தை முன்னிட்டு, இங்கே இருந்து தன் மனைவி அமைச்சர் பரிவாரங்களுடன் பாத யாத்திரையாக திருவண்ணாமலை சென்று தரிசனம் செய்வதை வழக்கமாகக் கொண்டு இருந்த ராஜ பரம்பரை அது. ஆண்டாண்டு காலமாக விடாமல் கடைப்பிடித்து வந்த பழக்கத்தில் அந்த ஆண்டு ஒரு சுணக்கம் ஏற்பட்டது'' என்று சின்ன இடைவெளி விட்டு அவர்கள் இருவரின் முகத்தையும் ஆராய்ந்தான். சிறுமியின் முகத்தில் கதை கேட்கும் ஆர்வம் இருந்தாலும் அவள் தந்தையின் முகத்தில், தன்னை ஆராயும் பார்வை இருப்பதைப் புரிந்து கொண்டான்.

''உங்களுக்கு நான் சொல்லும் கதையில் நம்பிக்கை இல்லையா?'' என்று கேட்க அவர் புன்னகை செய்தார்.

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?''

''நீங்க கதையைக் கேட்பதை விட என்னையே பார்த்துக் கொண்டு இருப்பது மாதிரி இருக்கு'' என்று குற்றம் சாட்டும் குரலில் சொல்ல அவர் சிரித்தார்.

''சின்ன வயதில் நீ இப்படி பாவனையுடன் கை தேர்ந்த நடிகன் மாதிரி ஏற்ற இறக்கத்துடன் பேசுகிறாயே? உனக்கு எப்படி இவ்வளவு திறமை வந்தது என்று யோசித்துக் கொண்டு இருந்தேனே தவிர நீ சொல்வதை நம்பாமல் இல்லை...'' என்று சொல்ல அவன் முகத்தில் பெருமை வந்தது.

''நான் நல்லா பேசுகிறேனா?'' என்று ஆர்வத்துடன் கேட்க அவர் சிரிப்புடன் ஆமோதித்தார்.

'நீ நன்றாகப் பேசுகிறாய். ஆனால் அதற்காக நான் பார்க்கவில்லை. அதை விட உன் முகம் எனக்கு மிகவும் பார்த்துப் பழகியது போல இருக்கிறது என்று சொல்ல வாய் வரை வந்த வார்த்தைகளை விழுங்கி னார்.

''ம்ம்ம், சூப்பரா பேசுகிறாய், கதையை மேலே சொல்லு. அந்த வருஷம் என்ன பிரச்னை ஏற்பட்டது?''

''பிரச்னை என்று சொல்ல முடியாது. நல்ல விஷயம்தான். அந்த ஆண்டு வந்த கார்த்திகை தீப தரிசனத்திற்கு சில நாட்கள் முன்பு அந்த ராணி கர்ப்பிணியாக இருந்த விஷயம் ராஜாவுக்குத் தெரிய வந்தது. முதலில் அளவில்லாத சந்தோஷம் அடைந் தாலும், கருவுற்ற ராணியை நூறு கிலோ மீட்டர் தூரம் நடத்திக் கூட்டிச் செல்ல அவரின் உடல் நிலை ஒத்து வருமா என்ற கவலை அவருக்கு ஏற்பட்டது'' என்று கவலை தோய்ந்த குரலில் பிரபாகர் சொல்ல அதை திவ்யாவால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

''ராணி ஏன் நடந்து போக வேண்டும்? குதிரை, யானை, பல்லக்கு என்று அந்த காலத்தில் நிறைய இருக்குமே?'' என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

''குதிரை யானை பல்லக்கு எல்லாம் இருக்கும். ஆனால் அவங்க அதில் போகாததற்கு இரண்டு காரணம். முதல் காரணம், அவர்கள் ராஜ பரம்பரை யாக இருந்தாலும் இறைவனை வணங்க கால் நடையாகப் போக வேண்டும் என்ற வேண்டுதல் வைத்து இருந்தார்கள். இரண்டாவது நீண்ட நாட் களுக்குப் பிறகு ராணி கருவுற்று இருந்ததால், அவருக்கோ, அல்லது வயிற்றில் வளரும் கருவுக்கோ, மருத்துவ வசதி இல்லாத இந்த தொலை தூர பயணத்தில் ஏதாவது ஆகி விட்டால் என்ன செய்வது என்ற அச்சம். அதனால் தான் ராஜா யோசித்தார்'' என்று விளக்கம் சொன்ன பிரபாகரை பெருமையுடன் தோளில் தட்டிக் கொடுத்தார் சுப்ரமணியன்.

''நல்லாவே விளக்கம் சொல்கிறாய். மேலே சொல்லு. ராணி என்ன பண்ணினாங்க?''

''பல யோசனைகளுக்குப் பிறகு மன்னன் ராணியை அவரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு காரணங் களுக்காக ஊரிலேயே விட்டுச் செல்லலாம் என்று முடிவெடுத்து விட்டார். ஆனால் ராணிக்கு அதில் மிகுந்த மன வருத்தம். திருவண்ணாமலை தீபத்தை தரிசிக்காமல் விடுவது, தன் பிறப்பிற்கான சாபக் கேடு என்று எண்ணினார். அவர் அப்படி ஒரு சிவபக்தை. கணவரின் கட்டளையை மீறவும் மனம் இல்லை. அதே சமயம் தீப தரிசனத்தையும் காண வேண்டும். என்ன செய்வது என்று ஒரே குழப்பம். அமைச்சர் பெருமக்களுடன் ஆலோசனை நடத்தினார் ராணி. அப்ப தான் அவங்களுக்கு அந்த யோசனை வந்தது. உடனே ராணி ரொம்ப உற்சாகமாகி விட்டார்'' என்று சந்தோஷமாக சொன்னான் பிரபாகர். அந்த ராணியின் மனநிலையை உள் வாங்கி தத்ரூபமாகப் பேசுவதைப் போல இருந்தது அவன் பேச்சு.

''ராணிக்கு என்ன ஐடியா வந்தது? இப்ப கிரிக்கெட் போட்டிகள் எல்லாம் ஒளிபரப்புவது போல் தொலைக்காட்சியில் அந்த காலத்திலேயே லைவ் ரிலே பண்ணினாங்களா?'' என்று ஆர்வத்துடன் திவ்யா விசாரிக்க அவன் புன்னகையுடன் தலை அசைத்தான்.

''கிட்டத்தட்ட அப்படி தான். திருவண்ணாமலைக்கு இணையான மணல் குன்று ஒன்றினை உயரமாக அமைத்து, அதன் மீது ஏறி நின்று பார்த்தால் தீபம் தெரியும். அதை அரசியார் பார்க்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது...''

''இங்கே இருந்து எப்படியும் திருவண்ணாமலை நூறு கிலோ மீட்டர் தூரம் இருக்குமே? குறைந்த காலத்திற்குள், அவ்வளவு பெரிய குன்று அமைப்பது எளிதான காரியம் இல்லையே? ராணி எப்படி இதைச் சாதித்தாங்க?'' என்று வியப்புடன் சுப்ரமணியன் விசாரிக்க அவன் ஓரக்கண்ணால் திவ்யாவை பார்த்த படி பதில் சொன்னான்.

''பெண்கள் ஒன்றை நினைத்து விட்டால் அதைச் செய்து முடிக்காமல் இருந்து விடுவார்களா? அழுது புரண்டு, சண்டை போட்டு எப்படியாகிலும் தாங்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வார்கள். அதிலும் இவர் அரசி. அவர் நினைத்தது எப்படி நடக்காமல் இருக்கும்?'' என்று குத்தலாகச் சொல்ல அவள் கோப முகம் காட்டினாள்.

''அப்பா கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்க. இந்த ஜாடை பேச்சு, பொதுவான பேச்சு எல்லாம் வேண்டாம்'' என்று ஒற்றை விரலைக் காட்டி மிரட்ட, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

''அமைதி. அமைதி. திவ்யாவுக்கு என்ன கோபம்? பொறுமையா இரும்மா. நீ சொல்லுப்பா'' என்று இருவரையும் சமாதானப்படுத்தினார்.

''திருவண்ணாமலைக்கு இணையான உயரத்தில் செயற்கையாக கல் திட்டு அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டார்கள். செங்களராஜன் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களைச் சேர்ந்த ஆண் களும் பெண்களும் தலைநகரான அரசரடி குப்பத் திற்கு வரலாம். மணல் குன்று அமைக்க பாடுபடும் மக்களுக்கு, ஒரு மர கூடை மண்ணுக்கு ஒரு படி தானியம் தரப்படும். அவ்வாறு அமைக்கப்படும் மணல் குன்றின் மீது நின்று அரசியார் தீபத்தைக் காண்பார் என்றும் முரசு அறிவிக்கப்பட்டது.''

''அப்படி அறிவித்த உடன் மக்கள் கிளம்பி வந்து விட்டார்களா?'' என்று அவன் சொன்னதை நம்ப முடியாமல் திருப்பி கேட்டாள் திவ்யா.

''பின்னே? அரசியின் மசக்கை கால ஆசையை நிறைவேற்ற மக்கள் அனைவருமே கிளம்பி விட்டனர். தட்டு, கூடை, மண்வெட்டி, கடப்பாரை ஆகிய வற்றை எடுத்துக் கொண்டு கிளம்பினர். அவர்கள் வெட்டிக் கொட்டிய மணல் தான் அந்த குன்று. மணல் வெட்டிய பள்ளங்கள் தான் இரண்டு குளங்கள். இன்றும் கார்த்திகை திருநாளின்போது, மேளதாளங்கள் முழங்க, பொம்மை அரசியார், தனது பரிவாரங்களுடன் அந்த மணல் குன்றில் ஏறி,

தீபத்தை தரிசிப்பதாக ஐதீகம். இப்போது இடையில் உள்ள தூரத்தில் பெரிய பெரிய கட்டிடங்கள் வந்து விட்டதால், தீபம் தெரியாத போதும், ஊர் பெரியவர்கள் அந்த சடங்கிற்கு பிறகே சொக்க பானை கொளுத்துகின்றனர்'' என்று அவன் கதையை முடிக்க சுப்ரமணியனுக்கு அவனைப் பார்க்கப் பெருமையாக இருந்தது.

சொந்த ஊர் பற்றிய சரித்திரத்தை அவன் அறிந்து வைத்து இருந்ததே பெரிய விஷயம் என்றால், அதை அவன் பாவனையுடன் கதையில் ஒன்றி அவன் சொன்ன விதம் அதை விட பிரமாதமாக இருந்தது. அவரின் பெருமித பாவனையை உணர்ந்து அவன் மேலும் உற்சாகத்துடன் கதை சொன்னான்.

''இந்த மணல் குன்றின் மீது நின்று பார்த்தால் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் சிதம்பரத்தின் நான்கு பிரதான கோபுரங்களும், அதில் விளக்குகளும் தெரியும். பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருவதிகை விரட்டீசுவரர் கோவிலின் கோபுரமும் தெரியும். அரசியின் ஆசையை ஊரே கூடி ஒன்றாக நின்று நிறைவேற்றி வைத்தார்கள். ஆனால் இன்று இந்த ஊரில் பிறந்து வளர்ந்த என் நியாயமான ஆசையை நிறைவேற்றி வைக்க என் தாயே தயாராக இல்லை'' என்று தன் போக்கில் சொல்லி முடித்து பெருமூச்சு விட்டவன் அதன் பிறகே தான் உளறியதை உணர்ந்தான்.

2

'அரசியின் விருப்பத்தை அன்று ஊரே கூடி நிறைவேற்றி வைத்தது. இன்று என் ஆசையை என் அம்மாவே நிறைவேற்றி வைக்க மாட்டேன் என்கிறார்கள்' என்று ஒரு வேகத்தில் சொல்லி முடித்து விட்ட பிரபாகர் அதன் பிறகே நாக்கை கடித்துப் பேச்சை நிறுத்தினான். ஆனால் அவன் பேச்சை நிறுத்துவதற்கு முன்பே அந்தத் தகவல் அவர்கள் இருவரையும் சென்று அடைந்து இருந்தது.

''பிரபா, என்ன உன் ஆசை? உங்க அம்மா ஏன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை?'' என்று கருணை பொங்கிய கனிவான குரலில் கேட்டு, அவன் உச்சியை வருடினார் சுப்ரமணியன்.

''ப்ச்! அதை விடுங்க. இன்னும் இந்தக் கோவிலைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரிய வேண்டுமா?'' என்று பேச்சை மாற்ற அவர் அமைதியாக அவனையே பார்த்தார்.

''உன் ஆசை நியாயமாக இருந்தால் அதை வெளியே சொல்ல நீ தயங்க வேண்டியது இல்லை. சட்டத்துக்குப் புறம்பான நிழல் காரியம் செய்ய வேண்டி இருந்தால் தான், அதை பிறரிடம் சொல்லாமல் மறைக்கத் தோன்றும்'' என்று இறுகிய முகத்துடன் அவர் கேட்க அந்தத் தூண்டில் சரியாக வேலை செய்தது.

''சும்மா வாய்க்கு வந்தபடி பேச வேண்டாம் சார். வழியில் இருக்கும் முன் பின் தெரியாதவர்கள் கண் கலங்குவதைப் பார்த்தும் பார்க்காமல் போக முடியாது.

எங்க அப்பா என்னை அப்படி வளர்க்கவில்லை என்று கொஞ்ச நேரம் முன்பு உங்க பெண் சொன்னாள். அதே மாதிரி தான் நானும். எங்க அம்மாவும் என்னை அப்படி வளர்க்கவில்லை. நேர்மை இல்லாத எந்தக் காரியத்தையும் நான் செய்ய மாட்டேன்...''

''உங்க அம்மா மீது இவ்வளவு நம்பிக்கை இருக்கும்போது, அதிலும் நீ செய்ய நினைக்கும் காரியம் நேர்மையானதாக இருக்கும் பட்சத்தில், நீ சொல்வதை அவங்க மறுக்க காரணம் என்ன?''

''நேர்மை இல்லாத காரியம் இல்லை. ஆனால்...'' என்று பிரபாகர் மேலே பேச முடியாமல் இழுத்து நிறுத்த, அவனுக்கு அவகாசம் கொடுத்தார். சில கணங்கள் தடுமாற்றத்துக்குப் பிறகு, அவனே மீண்டும் ஆரம்பித்தான்.

''நான் நடிகனாக வரவேண்டும் என்று ஆசைப் படுகிறேன். அது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை'' என்று எங்கோ பார்த்தபடி வேகமாக சொல்லி முடிக்க, அவர் அவனை ஆச்சரியமாகப் பார்த்தார்.

''நடிக்கணுமா?'' என்ற அவரின் ஒற்றை வார்த்தை கேள்வி அவனை மேலும் உசுப்பேற்றியது. கோபத்துடன் திரும்பி அவரை முறைத்தான்.

''ஏன் நடிக்கக் கூடாதா? நடிப்பை தொழிலாக ஏற்பது கொலை கொள்ளை மாதிரி பஞ்சமா பாதகங்களில் ஒன்றா? அதை நான் செய்யக் கூடாதா?'' என்று ஆத்திரத்துடன் கேள்விகளை அடுக்க அவர் அவசரமாக மறுப்பை பதிவு செய்ய முயன்றார்.

''இல்லை அப்படி இல்லை...'' என்று வேகமாக சொன்னவரின் கண்களில் இருபது வயது பெண்ணின் முகம் தோன்றி மறைந்தது.

இதே வேகம், இதே கேள்வி, கேட்டது ஆதரவின்றி தன் வீட்டில் வளர்ந்த ஒரு பெண். தூரத்து உறவு முறை. கேட்டது தன் தந்தையிடம். நடந்தது இருபது ஆண்டுகளுக்கு முன்பு! அவளைப் படிக்க வைத்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்று தன் தந்தை ஆசை கொண்டு இருக்க அவளுக்கு அதில் துளியும் விருப்பம் இல்லை. படிப்பு அவளுக்கு வேப்பங்காயாகக் கசந்தது. இவன் பூங்குழலியின் வாரிசாக இருக்கக் கூடுமா? அவருக்குள்ளே பரபரப்பு கூடியது. அவள் எங்கே இருக்கக் கூடும்? இதே ஊரிலா? எப்படி இத்தனை நாள் தன் கண்ணில் படவில்லை? அவர் தான் நினைவில் மூழ்கி இருக்க, அவன் பொருமல் தொடர்ந்து கொண்டு இருந்தது.

''நடிப்பை தொழிலாக ஏற்பது கொலை கொள்ளை இல்லை என்று எல்லாரும் ஒத்துக் கொள்வீங்க. ஆனால் எல்லோருமே எங்க அம்மா போலவே சொல்லி வைத்த மாதிரி ஒரே குரலில் வேண்டாம் என்று மட்டும் சொல்வீங்க. அதற்கு எந்தக் காரணமும் தேவை இல்லை போலிருக்கு'' என்று ஆத்திரத்துடன் சொல்ல அவர் அவசரமாக மறுத்துப் பேசினார்.

''இல்லை பிரபா, நான் நடிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் உங்க அம்மா ஏன் வேண்டாம் என்று சொல்றாங்க?'' என்று ஆர்வமாக

விசாரித்தவர் இப்போது அவனை கூர்மையுடன் ஆராய்ந்தார்.

ஆதரவின்றி தான் வீட்டில் வளர்ந்த பெண் என்பதால், சிறு வயதிலேயே அவன் வீட்டு வேலைகளை செய்து பழகி இருக்க, தன் நண்பர்களுக்கு, வீட்டில் இருக்கும் தின்பண்டங்கள் வரை முறை இன்றி கிடைக்க அவள் ஒரு கருவியாக இருந்தாள். அம்மா அப்பாவிடம் விளக்கம் சொல்ல முடியாத வேளையிலும் இவளிடம் உரிமையுடன் பிடுங்கி தின்றதுண்டு. அவள் இப்போது எங்கே எப்படி இருக்கிறாள்? தெரிந்து கொள்ளும் ஆர்வம் தோன்றியது.

''எங்க அம்மா, அப்பா இல்லாமல் என்னைத் தனியாக சிரமப்பட்டு வளர்க்கிறாங்க. நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக நான் என் விருப்பத்தை தூக்கி எறிய வேண்டுமா? நடிப்புத் துறை வேண்டாம் என்று சொல்ல முடியுமா?

''உங்க அப்பா இல்லையா?'' என்று அதிர்ச்சியுடன் கேட்க அவரை பிரபாகர், திவ்யா இருவருமே வித்தியாசமாகப் பார்த்தனர்.

''இருபது வருஷம் முன்னால் நிறை மாத கர்ப்பிணி பெண்ணை தனியே ரயில் நிலையத்தில் தவிக்க விட்டு, விபத்தில் இறந்து போனவரைப் பற்றி நாங்களே கண்டு கொள்வதில்லை. உங்களுக்கு ஏன் அவரைப் பற்றி இவ்வளவு கவலையும் அதிர்ச்சியும் வருகிறது?''

''என்னப்பா சொல்கிறாய்? உங்க அப்பா இப்போது உயிருடன் இல்லையா?''

''அப்பா என்ன இது? தேவை இல்லாமல் அவங்க குடும்ப விவகாரத்தை இழுத்து வைத்து பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். வீட்டில் தாத்தா தனியாக இருப்பார் என்பதை மறந்து விட்டீர்களா? வாங்க போகலாம்...'' என்று அவசரமாக இடையிட்டாள் திவ்யா.

''இரும்மா போகலாம். பிரபா நமக்கு கோவிலைப் பற்றி விளக்கம் சொன்னதற்கு பணம் தர வேண்டாமா?'' என்று விளக்கம் சொல்ல முற்பட்ட சுப்ரமணியனை இடை மறித்தான் பிரபாகர்.

''நான் பணம் தர வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தேவை இல்லாததைப் பற்றி பேச வேண்டாம் என்று சொல்கிறேன்.''

''உங்க அப்பா பற்றி பேச உனக்குப் பிடிக்கவில்லை என்றால் பேச வேண்டாம். ஆனால் உங்க அம்மா சொல்வதை நீ கேட்கலாமே? அவங்க உன்னுடைய நல்லதுக்காக தான் சொல்வாங்க. நடிக்க வேண்டும் என்ற ஆசையைத் தப்பாகச் சொல்ல முடியாது தான். ஆனால் தன் மகன் இப்படிச் சொல்வதை சினிமா துறையில் இருக்கும் பெற்றோர்கள் கூட ஆவலுடன் வரவேற்பார்கள் என்று சொல்ல முடியாது. அப்படி இருக்கும் போது, தன் மகன், டாக்டராகவோ, என்ஜினியராகவோ, வக்கீலாகவோ பணிபுரிந்து சமூகத்தில் பெரிய அந்தஸ்து பெற வேண்டும் என்று நினைக்கும் தாய் அதை மறுத்துப் பேசியதிலும் தப்பு இல்லை'' என்று அவர் விளக்கம் சொல்ல முயன்றபோது அவன் கோபத்துடன் பொரிந்தான்.

''பார்த்தீர்களா? நீங்க கூட என் ஆசையைச் சொன்னதும் ராமாயணம் மகாபாரதம் மாதிரி கதை சொல்ல ஆரம்பித்து விட்டீர்கள். ஆளாளுக்கு இலவச சேவை மாதிரி வண்டி வண்டியாக அட்வைஸ் சொல்கிறீர்கள். ஏன் சார் நடிகனாக வேண்டும் என்று ஆசைப்படுவது தப்பா?'' என்று வேகத்துடன் கேட்டுக் கொண்டு இருக்கும்போதே,

''அப்பா, நான் கிளம்புகிறேன். நீங்க மெதுவா கதை பேசி விட்டு வாங்க'' என்று சொல்லி விட்டு திவ்யா நகர ஆரம்பித்தாள்.

''ப்ச்! எனக்கு அட்வைஸ் பண்ணுவதை விட்டு விட்டு உங்க பெண்ணுடன் துணைக்கு போங்க சார். போவதற்கு முன்னாடி நான் இந்த ஊரைப் பற்றிச் சொன்னது உங்களுக்கு எவ்வளவு தூரம் பிடித்ததோ, அவ்வளவு பணம் தருவதாகச் சொன்னீர்களே? என் வேலைக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டுப் போங்க. உங்க பொண்ணுக்கு என் மீது என்ன கோபமோ?'' என்று சொல்ல வேகமாக நகர்ந்தவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.

''அப்பா எனக்கு இவர் மீது எந்தக் கோபமும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் இவருக்கு நான் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று தான் விரும்புகிறேன். இவரது வேலைக்குரிய ஊதியத்தை தாமதம் செய்யாமல் கொடுத்து விடுங்க'' என்று சொல்ல அவர் புன்னகையுடன் பர்ஸைத் திறந்து நூறு ரூபாயை எடுத்து நீட்டினார்.

''இந்த ஊரின் வரலாற்றை மிக பிரமாதமாகச் சொன்னதற்காக வைத்துக் கொள். நீ வாழ்க்கையில் வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று சொல்லி பணத்தை நீட்ட அவன் ஒரு கணம் தயங்கினான்.

''பத்து நிமிடங்கள் பேசியதற்கு நூறு ரூபாயா?''

''உன் திறமைக்கு இன்னும் அதிகம் கொடுக்க லாம்'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, மகள் முதுகில் சுரண்டுவதை உணர்ந்தார். சற்று தள்ளி வந்து குனிந்தார்.

''என்னம்மா?''

''அவருக்கு நடிகன் ஆவது தான் லட்சியம் என்றால், அதற்கு நாமும் உதவி பண்ணலாமே?''

''எப்படிம்மா?''

''நாளை மறுநாள் நம்ம ஊர் முருகன் கோவிலில் திருவிழா நடக்கப் போகிறது இல்லையா? அங்கே கூத்து நடக்குமே, அதில் சொல்லி, அவருக்கு ஒரு சான்ஸ் வாங்கித் தரலாமே?''

''நாடகத்தில் நடிக்க அவனுக்கு இஷ்டம் இருக் குமோ இல்லையோ?''

''இஷ்டம் இருக்காது என்று நாமே ஏன் முடிவு பண்ண வேண்டும்? அவரைக் கேளுங்கள்...'' என்று உந்த அவர் தயக்கத்துடன் வந்து விசாரித்தார்.

''ஓ! எஸ், கட்டாயம் நடிக்கிறேன் சார்...'' என்று ஆர்வத்துடன் உறுதியாகச் சொன்னான். கூடவே இந்த வாய்ப்பை தனக்கு வழங்க சிபாரிசு செய்தது,

'அவள்' என்பதும் அவன் மனத்தில் பதியவே செய்தது.

''குட், அப்ப இதை அட்வான்சாக வைத்துக் கொள்'' என்று சொல்லி மேலும் ஐநூறு ரூபாயை அவர் கொடுத்த போது அவன் பிரமிப்புடன் வாங்கிக் கொண்டான். கண்கள் அப்பாவின் பின்னால் நின்று இருந்த அந்தச் சிறுமியின் மீது கனிவாக படிந்து வருடியது.

''நாளைக்கே நீ பெரிய ஸ்டார் ஆகி விட்டால் லட்சம் லட்சமாக சம்பாதிக்கும் போது எங்களை மறந்து விடக் கூடாது'' என்று சிரிப்புடன் சொல்லிக் கொடுக்க அந்த வாக்கியம் அவனை ஊக்கப் படுத்தியது.

அவர் சொன்ன வார்த்தைகள் அவன் நினைவில் சுழன்று மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டு இருக்க அவரும் அவர் பெண்ணும் விடை பெற்றுக் கிளம்பியது அவன் மனத்தில் பதியவே இல்லை. அந்த வேளையில் அங்கே வந்து சேர்ந்தார் அவர்.

''பிரபா, உன்னை எங்கே எல்லாம் தேடுவது? உன்னைக் காணாமல் நான் பயந்து போய் விட்டேன் தெரியுமா? பொழுது சாயும் நேரத்தில் தனியாக நின்று இங்கே என்ன செய்து கொண்டு இருக் கிறாய்?'' என்று பதறிய தாயின் பெயர் பூங்குழலி!

ஊர் திருவிழாக்களில் அங்கொன்றும் இங்கொன்று மாக நடந்து வரும் தெருக்கூத்திலும், நலிந்து வரும் நாடக துறையிலும், திறமையைக் காட்டி வயிறு வளர்த்து வரும் திறமைசாலி.

தோளுக்கு மேல் வளர்ந்து விட்ட மகனை கை நீட்டி விட்ட குற்ற உணர்வும், அவனைக் காணாமல் தவித்த நான்கு மணி நேர தவிப்பும், தனியாக மகனை ஆளாக்கப் படும் பாடும் அந்தத் தாயின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

அக்கறையுடன் விசாரித்த தாயின் முன்னால், சில நிமிடங்கள் முன்பு தான் பரிசாக பெற்ற அறுநூறு ரூபாயை அவர் கண் முன்னால் பெருமையாக ஆட்டிக் காட்டினான்.

''எதுக்கு இப்ப என்னிடமே ட்ராமா போடுறீங்க? எல்லாம் இங்கே தான் இருக்கிறேன். அதுவும் நன்றாக இருக்கிறேன்...''

''என்ன பிரபா இப்படிக் கேட்டு விட்டாய். நான் உன்னிடம் என் நடிக்க வேண்டும்? மத்தியானத்தில் இருந்து உன்னைக் காணாமல் எப்படித் தவித்து விட்டேன் தெரியுமா? உன்னை இங்கே பத்திரமாகப் பார்த்த பிறகு தான் எனக்கு உயிரே வந்தது...''

''உன்னால் ஒரு ரூபாய் சுயமா சம்பாதிக்க முடியுமா என்று மத்தியானம் கேட்டீங்களே? இப்ப நீங்க சவால் விட்ட மூன்று மணி நேரத்தில் நான் அறுநூறு ரூபாய் சம்பாதித்து விட்டேன். இப்ப என்ன சொல்வீங்க?'' என்று சவால்விட அவர் பதறினார்.

''டேய்! ஏதுடா இந்த பணம்? எப்படிக் கிடைத்தது? என்ன செய்தாய்? உண்மையைச் சொல்லு'' என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்க அவன் விலகிக் கொண்டான்.

''சும்மா சத்தம் போடாதீங்க. இதை நான் யாரிடமும் திருடவோ, யாசகம் பெறவோ இல்லை. இது நான் உழைத்துச் சம்பாதித்த பணம். அதுவும், நீங்க வேண்டாம் என்று சொன்னீங்களே? உங்களுக்குப் பிடிக்காத அந்த வேலை செய்து சம்பாதித்த பணம்.''

''நீ பொய் சொல்கிறாய், நான் நம்ப மாட்டேன்.''

''நம்ப வேண்டாம். நீங்க உங்க சௌகரியம் போல சந்தேகப்படுங்க. அதற்காக உண்மை பொய் ஆகி விடாது. இதை கொடுத்தவர், அதோ போகிறாரே, அவர் தான். வேண்டுமானால் அவரையே போய் கேட்டுக் கொள்ளுங்க...'' என்று சவால் விட, அவர் அவன் கை காட்டிய திசையில் பார்த்தார்.

ஒரு பெரியவரும் சிறுமியும் சென்று கொண்டு இருப்பது கண்ணில் பட்டது. அங்கே போய் கொண்டு இருந்தது அவரா? அவரின் பார்வை உறைந்து நிற்க, அவன் பேச்சை தொடர்ந்தான்.

''ம்ம், இன்னொரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனே? அவர் உங்களைப் போல நடிப்பது கௌரவக் குறைச்சலான விஷயம் என்று சொல்ல வில்லை. இன்னும் சொல்லப் போனால், எனக்கு அவர் ஒரு மேடை வாய்ப்பு ஏற்படுத்தித் தந்து இருக்கிறார்...'' என்று சொல்ல அவர் நம்பாமல் பார்த்தார்.

''என்னடா உளறுகிறாய்?''

''அவங்க சென்னையில் இருந்தாலும் பரிட்சை லீவுக்கு சொந்த கிராமத்திற்கு வந்து இருக்காங்க. இங்க பக்கத்தில் முள்ளி பள்ளம் கிராமம் தான். அங்கே,

முருகன் கோவில் இருக்கு இல்லையா? பங்குனி உத்திரத்தை முன்னிட்டு திருவிழா எடுக்கறாங்க போல. அங்கே மேடையில் எனக்கு பல குரலில் பேச ஒரு வாய்ப்பு வாங்கித் தருகிறேன் என்று சொல்லி விட்டுப் போய் இருக்கிறார். அதற்கான அச்சாரம் தான் இது. போதுமா?'' என்று பெருமையாகச் சொல்ல, திகைத்து நின்றார் பூங்குழலி.

நடிப்பது கொலைக் குற்றம் என்று ஒதுக்கிய பரம்பரையில் வந்தவரா அப்படி சொன்னது? இந்தத் தலை கீழ் கால முறை மாற்றத்துக்குக் காரணம்...?

3

சிறு வயதில் இருந்தே பிரபாகருக்கு நடிப்பின் மீது தீராத ஆர்வம். அந்த ஆர்வம் ரத்தத்தில் ஊறி இருக்க வேண்டும். தாயின் ஆர்வமும் திறமையும் அவனுக்கும் இருந்த போதும், அதை பூங்குழலி விரும்பவே இல்லை. அந்த ஆர்வத்தை அதே தொழிலில் இருக்கும் தாய் மதிக்க மறுக்க, அதை வெளிப்படுத்த ஒரு மேடை அமைத்துக் கொடுத்த சுப்ரமணியன் வெளியே கிடைத்த ஒரு வாய்பபைக் கொடுத்த சுப்ரமணியன் அவனுக்கு தெய்வமாக தோன்றியதில் வியப்பெதுவும் இல்லை.

சுப்ரமணியன் மீது மட்டும் இல்லாமல், அவரை அந்தச் செயல் செய்யத் தூண்டிய திவ்யா மீதும் பதின்ம வயதில் இருந்த பிரபாகருக்கு நன்றி உணர்வு பெருகியது. கிடைத்த முதல் வாய்ப்பை,

வெற்றிகரமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

விழா குழுவினர் சன்மானம் கொடுக்க இயலாது என்று சொல்லி விட்ட பின்பும், தான் அச்சாரமாக கொடுத்த பணத்தை சுப்ரமணியன் திருப்பி வாங்கிக் கொள்ளவில்லை. சன்மானம் இல்லை என்றாலும் மேடை கிடைத்த சந்தோஷத்திலேயே நடிப்பாற்றலை வெளிப்படுத்திக் கொண்டு இருந்தான் பிரபாகர்.

'வானம் பொழிகிறது பூமி விளைகிறது. உனக் கேன் கொடுக்க வேண்டும் கிஸ்தி? எதற்கு கேட் கிறாய் வரி? என்ன செய்தாய் நீ? எங்களோடு வய லுக்கு வந்தாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா? அங்கே கொஞ்சி விளையாடும் எம் குல பெண்டிற்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா? மாமனா மச்சானா? மானம் கெட்டவனே...''

வீர பாண்டிய கட்டபொம்மனாக தன்னை உருவகித்துக் கொண்டு, எதிரில் இல்லாத ஜாக்ஸன் துரையை, அந்த கிராமத்து திருவிழா மேடையில் பிரபாகர் வார்த்தைகளாலும் பாவனையாலும் உற்சாக மாகக் கிழித்துக் காயப் போட்டுக் கொண்டு இருந்தான்.

அந்த சிறிய வயதில், வீர வசனத்தை உணர்வுப் பூர்வமாகப் பேசிக் கொண்டு இருக்க, சிவாஜி ரசிகர்களான அந்த கிராமத்தின் முதியோர்கள் எல்லாம் விசில் அடித்து, கரகோஷம் செய்து, தங்களின் பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டு இருந்தனர். அந்த கை தட்டல் ஒலியையும் விசில் சத்தத்தையும் மீறிக் கொண்டு மீறி ஒரு பரபரப்பு அங்கே பரவியது.

கோவிலில் இருந்து வந்த அர்ச்சகரும் ஊர் நாட்டாமையும் கூட்டத்தில் தோன்றிய சலசலப்பை அடக்கினர். ஆர்வத்துடன் நடிக்க வந்தவனின் முயற்சி பாதியிலேயே நிற்க அவன் முகம் வாடிப் போனது. அவனின் நடிப்புத் திறமையைக் காட்ட முடியாமல் போன வருத்தத்தை, அடுத்து நாட்டாமை சொன்ன செய்தி மேடையின் அருகே முதல் வரிசையில் இருந்த சுப்ரமணியன் மட்டும் இல்லாமல் அவரின் தந்தையின் முகத்திலும் தீராத வருத்தத்தை ஏற்படுத்த அதைப் பார்த்த பிரபாகரின் மனம் வாடியது.

உற்சவ மூர்த்தியான முருகன் சிலையில் கை ஒன்று உடைந்து விட்டது என்ற செய்தி பரவியதால் தான் அங்கே கூட்டத்தில் சலசலப்பு. என்ன செய்வது என்ற விவாதம் நடந்து கொண்டு இருந்தது. ஆளா ளுக்குப் பேச ஆரம்பித்தனர்.

ஊரில் அக்கிரமம் பெருகி விட்டது. நியாய அநியா யத்தை யார் பார்க்கிறா? அதனால் தான் இப்படி ஆனது என்று சாபம் விட்டார் ஒருவர்.

'திருவிழா நடக்கும் சமயத்தில் இந்த மாதிரி நடந்தது சாமி குத்தம் ஆகி விடும். ஊருக்கு என்ன கெட்டது நடக்கப் போகிறதோ?' என்று கலக்கி விட்டார் ஒருவர்.

'திருவிழா ஆரம்பிப்பதற்குள், சாமி சிலையை மாற்றியே தீரவேண்டும்' என்று மற்றொருவர் சூளு ரைத்தார்.

''அது எப்படி முடியும்? ஒரு வாரத்திற்குள் புதிய சிலைக்கு ஆர்டர் கொடுத்துப் பெறுவது என்பது சாத்தியமே இல்லை'' என்று குறுக்கு சால் ஓட்டினர் சிலர்.

ஊனப்பட்ட சிலையை வைத்து ஊர்வலம் நடத்தக் கூடாது என்று சிலரும், பாரம்பரியம் மிக்க சிலையை மாற்றக்கூடாது என்று சிலரும் பேச, ஊர் நாட்டாமை கடைசியாக வாயை திறந்தார்.

பலவாறாகப் பலர் பேசிய பின்பு, ''சிலையை மாற்றியே தீர வேண்டும். ஊர் நன்மைக்காக இதைச் செய்து தான் ஆக வேண்டும்'' என்ற ஊர் தலைவரின் இறுதி வார்த்தை சுப்ரமணியனுக்கும் அவரின் தந்தைக்கும் பிடிக்கவில்லை.

உற்சவ மூர்த்தியான அந்த முருகப் பெருமானை அவர் அருகே இருந்து ஆராதித்து இருக்கிறார். பல நாட்கள் கோவில் பிரகாரத்தில், படுத்துத் தூங்கி இருக்கிறார். அந்த சிலையுடன் பேசி விளையாடி இருக்கிறார்.

தாயாய் தந்தையாய் உற்ற தோழனாய் பாவித்து நெருங்கிப் பழகி இருக்கிறார். திருமணமாகி மூன்று வருடங்களில், தன் மனைவியை இதே ஊரில், இடி தாக்கி இழந்தபோதுகூட இந்த தெய்வத்தின் மீது இருந்த நம்பிக்கை மறையவில்லை.

உயிர் உள்ள கடவுளாகவே கருதப்பட்ட அந்த சிலையை மாற்ற முடிவெடுத்ததை நினைக்கும்பொழுது அவருக்கு ஆத்திரம் பொங்கியது. ஆனால் ஊராரின் நம்பிக்கை வேறாக இருந்தால், தனி மனிதனாக

என்ன செய்வது என்ற வேதனை வந்தது. அவரைப் போலவே அவரின் தந்தையும் தவிப்புடன் நின்று இருந்தார். இருவரின் தவிப்பையும் கோபத்தையும் பார்த்த பிரபாகருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றினாலும் என்ன செய்வது என்று புரியவில்லை.

தான் விரும்பிய துறையில் தனக்கு ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று விரும்பி, அதற்கான ஒரு வழியைக் காட்டிய சுப்ரமணியன் கண்ணில் தோன்றிய வருத்தத்தைப் போக்க விரும்பி, தவிப்புடன் சுற்றுப் புறத்தை ஆராய்ந்த பிரபாகருக்கு கண்ணில் மின்னல் தோன்றியது. கையில் கட்டுடன் வந்த சிறுவனும், அவனைப் பார்த்து விசாரித்த ஒரு பெரியவரும் அவனுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டினார்கள்.

''என்ன ஆச்சு உம்ம பேரன் கையில் கட்டு?'' என்று விசாரித்தார் ஊர் பெரியவர் ஒருவர்.

''விளையாடும்போது கீழே விழுந்து விட்டான். கை எலும்பு முறிவு ஏற்பட்டு விட்டது. புத்தூருக்கு அழைத்துப் போய் கட்டுப் போட்டு அழைத்து வந்து இருக்கிறேன்'' என்று வருத்தத்துடன் சொன்னார் நாட்டாமை.

அந்த நிமிஷம் பிரபாகருக்குள் பொறி பறந்தது. எங்கே இருந்து அவ்வளவு வேகம் வந்ததோ? சாமி வந்தது போல கைகளை உயர்த்தி, தலையைக் குலுக்கி, வேகமாக உரத்த குரலில் அதிகாரமாக கட்டளையிட்டான்.

''இந்த பையன் ஊருக்குள் இருக்கக் கூடாது. உடனே அவனை தூக்கி வெளியே போடுங்க'' என்று ஆவேசமாகச் சொல்ல அனைவரும் திடுக்கிட்டனர்.

''இந்தப் பொடிப் பயலுக்கு வாய்க் கொழுப்பைப் பார்த்தாயா? இவனை எல்லாம் யார் விட்டது? மீசை முளைப்பதற்கு முன்னாலே நாட்டாமை பண்ண ஆசையைப் பாரு. இவனை இதற்கு முன்னால் இங்கே பார்த்ததே இல்லையே? யார் இவன்? ஊருக்குப் புதுசா இருக்கிறானே? இவனுக்கு இங்கே என்ன வேலை?'' என்று பலவிதமான கேள்விக் கணைகள் கூட்டத்தில் இருந்து பாய்ந்து வந்தது. நாட்டாமை எல்லாரையும் அடக்கினார்.

''யாருப்பா நீ? என்ன சொல்ல விரும்புகிறாய்? எதற்கு என் பேரனை ஊரை விட்டு வெளியே தூக்கிப் போடச் சொல்கிறாய்?'' என்று கோபத்தை அடக்கிக் கொண்டு விசாரிக்க, ஊரே அவனை முறைத்துப் பார்த்தது.

''என் பெயர் பிரபாகர், இங்கே திருவிழாவில் மிமிக்ரி பண்ண சார் அழைத்து வந்தார்'' என்று சுப்ரமணியனை கை காட்ட அவர் ஆமோதிப்பாகத் தலை அசைத்தார்.

''ஓ, வாத்தியார் சொல்லி வந்த பையனா? சரி, பரவாயில்லை. ஆனால் எதற்கு என் பேரனை ஊரை விட்டு வெளியே தூக்கிப் போட வேண்டும் என்று சொல்கிறாய்?''

''அவனுக்கு கை ஒடிந்து விட்டது. அதனால் தான் தூக்கிப் போடச் சொல்கிறேன்'' என்று விடாமல்

அழுத்தம் திருத்தமாக பிரபாகர் சொல்ல அவரின் கோபம் கூடியது.

''என்ன உளறுகிறாய்? கை ஒடிந்தால் என்ன? அவனுக்குக் கட்டுப் போட்டு இருக்கு. இன்னும் மூன்று வாரத்தில் எலும்பு கூடி கை சரியாகி விடும். அதற்காக அவனை ஊரை விட்டு விலக்கி வைக்க முடியுமா?''

''உங்களுக்கு ஒரு நியாயம் ஊருக்கு ஒரு நியாயமா? குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்வாங்க. கை ஒடிந்து விட்டால் உங்க வீட்டுக் குழந்தையைத் தூக்கிப் போட முடியாது. அதே மாதிரி தானே தெய்வமும். இதே ஊரில் எத்தனையோ ஆண்டுகளாக இந்த சிலை தானே உற்சவ மூர்த்தி யாக இங்கே உள்ள மக்களின் நம்பிக்கையையும் பிரார்த்தனைகளையும் நிறைவேற்றி வைத்து இருக்கிறது. திடீர் என்று அதை ஒதுக்கி வைப்பது மட்டும் நியாயமா? உங்க வீட்டு குழந்தைக்கு ஒரு நியாயம், ஊர் கோவிலின் உற்சவ மூர்த்திக்கு ஒரு நியாயம் செய்றீங்களே? இது தர்மமா?'' என்று கேட்டதும் அவர் திகைத்தார். அவன் சிறியவனாக இருந்தாலும், அவன் பேசிய விதமும், அவன் முகத்தில் தெரிந்த ஆளுமையும், அவன் வார்த்தை களில் இருந்த நியாயமும், அவர் மனத்தை அசைத்துப் பார்த்தது.

கூடி இருந்த ஊருக்குள் பலர் பல விதமாகப் பேச ஆரம்பிக்க அங்கே சப்தம் கொஞ்சம் கொஞ்சமாகக்

கூடிக் கொண்டே போனது. சில நிமிட்கள் கழித்து நாட்டாமை எழுந்தார்.

''எல்லோரும் கொஞ்சம் அமைதியா இருங்க!'' என்று ஒரு அதட்டல் போடக் கூட்டத்தின் சலசலப்பு அடங்கியது.

''சின்னப் பையனாக இருந்தாலும் அவன் சொன்ன வார்த்தை சரி தான். இப்போதைக்கு உன் விருப்பப்படியே ஸ்வாமி சிலையை சரி செய்து திருவிழா நடக்கட்டும். ஆகம விதிகளின்படி ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டுமா என்று பார்த்துச் செய்து விடுங்க ஐயரே'' என்று சொல்லி விட்டு நாட்டாமை எழுந்து செல்ல கூட்டம் கலைய ஆரம்பித்தது.

அந்த சமயத்தில் அவனை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டார், சுப்ரமணியனின் தந்தை. பாசத்துடன் பார்த்தார். ''தம்பி...'' என்று நா தழுதழுக்க அழைத்தார். அவனை தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டார்.

''சுப்ரமணியா, நீ நல்ல பையனை தான் உதவி செய்யத் தேர்ந்தெடுத்து இருக்கிறாய். தம்பி நீ எப்போ வேண்டுமானாலும் என் வீட்டுக்கு வந்து போகலாம். அந்த பால முருகன் உனக்கு ஒரு குறையும் வைக்க மாட்டான். நீ நினைத்தது எல்லாம் நிறைவேறும்'' என்று ஆசீர்வாதம் செய்தார்.

ஊரில் பலர் முன்னிலையில், ராஜ கம்பீரத்துடன் அவன் பேசிய விதம் மட்டும் இல்லாமல், அவனின் வார்த்தைகளை ஊர் பெரியவர்கள் ஏற்றுக் கொண்ட விதமும் திவ்யாவின் மனத்தில் பெருமிதத்தை

தோற்றுவித்தது. அவள் விரும்பிக் கூட்டி வந்த ஒருவர் ஊராரின் மதிப்பைப் பெற்றது, அவளே பாராட்டு பெற்ற மாதிரி உற்சாகம் ஊற்றெடுத்தது.

''தாத்தா, அவருக்கு நடிகனாக வேண்டும் என்ற ஆசை இருக்கு'' என்று அருகே இருந்த திவ்யா எடுத்துக் கொடுக்க அவர் முகம் ஒரு கணம் மாறிப் பின் சீரானது.

''போகட்டும் அதுதான் உன்னுடைய ஆசை என்றால், அதற்கான திறமை உன்னிடம் இருந்தால்...''

''இருந்தால் என்று இழுக்காதீங்க தாத்தா. அவர் கட்டபொம்மன் வசனம் பேசியதை நீங்களே பார்த்தீங்க தானே? இன்னும் என்ன சந்தேகம் உங்களுக்கு?'' என்று அவசரமாக இடையிட்ட திவ்யாவின் மீது அன்பும் நன்றி உணர்வும் பெருகியது.

''நல்லா தான் பேசினான். உன்னுடைய ஆசை நியாயமானதாக இருக்கும் பட்சத்தில் அதை அந்த முருகன் நிறைவேற்றி வைப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. அது உனக்கும் இருக்க வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். கட்டாயம் உன்னை வெற்றி தேடி வரும்'' என்று வாக்களித்தார்.

''நிறுத்துங்க. நீங்க ஒரு பெரிய மனுஷனா? நடிக்கக் கூடாது என்று பெற்ற மகனை நான் கண்டித்து வைத்துக் கொண்டு இருக்கிறேன். இங்கே நீங்க என்ன என்றால், அவன் தான் லட்சியத்தை அடைய வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்றீங்களே? இது உங்களுக்கே நல்லா இருக்கா?'' என்று

ஆத்திரமாக ஒலித்த குரலைக் கேட்டு ஆச்சரியத்துடன் திரும்பினார் சுப்ரமணியன்.

''குழலி, நீயா? உன்னை எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிறேன். வா வா உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஆர்வத்துடன் எவ்வளவு நாட்களாகக் காத்திருக்கிறேன். நன்றாக இருக்கிறாயா?'' என்று ஆர்வமாக ஒலித்த சுப்ரமணியன் குரலைக் கேட்டதும் பூங்குழலியின் கோபம் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போனது.

4

கடந்த மூன்று தினங்களாக சுப்ரமணியனைப் பற்றியும் திவ்யாவைப் பற்றியும் அவர்கள் தனக்கு வாங்கிக் கொடுத்து இருக்கும் மேடை வாய்ப்புப் பற்றியும் வாய் ஓயாமல் பிரபாகர் பேசியபோது பூங்குழலி அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இன்று காலை பிரபாகர் கிளம்பியபோதுகூட அவனுக்கு மேடையில் பேச வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் கூட, அது பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று என்று முடிந்துவிடும் என்று எண்ணினார். ஆனால் இங்கே கிராமத்தில் அடுத்தடுத்து நடந்த விஷயங்கள் அவர் எதிர்பார்ப்பை பொய் ஆக்கி விட்டது. அது மட்டும் இல்லாமல் அவனுக்கு ஊரில் இவ்வளவு பெரிய மரியாதை உருவாகும் என்றோ அவர் எதிர்பார்க்கவில்லை.

வந்த இடத்தில் சுப்ரமணியனை முதல் வரிசையில் பார்த்ததும் அவருக்கு தான் ஆடா விட்டாலும் தன் தசை ஆடும் என்பதை நிரூபிப்பது போல் அவள் இதயம் துடித்தது உண்மை. ஆதரவற்று நின்ற தனக்கு உணவு உறைவிடம், பாதுகாப்பு மட்டுமின்றி கல்வியையும் அளித்த அவர்களின் அக்கறையான வார்த்தைகளை மீறி கலை ஆர்வத்துடன் காதலைக் காரணம் காட்டி, வீட்டை விட்டு வெளியேறியதும், அதன் பிறகு அவள் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளும் அவளை அவர் முன்பு தைரியமாக தலை நிமிர்ந்து நிற்க விடவில்லை.

மகனுடைய வெற்றி தோல்வியில் பங்கெடுக்க வேண்டும் என்று அங்கே வந்து விட்டாலும், தூரத்தில் இருந்தபடியே சென்று விடலாம் என்று நினைத்தார். ஆனால் அவர் நினைத்தது நடக்கவில்லை. மகனுக்கான, அந்த பெரியவரின் ஆசீர்வாதம் அவரை ஆத்திரம் அடையச் செய்தது. தன்னிலை மறந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டார் பூங்குழலி.

''வா வா குழலி, இப்ப தான் வர மனம் வந்ததா? அமைதியாக இரு. எதற்கு இவ்வளவு கோபம்? நீதான் பிரபாவின் தாயா என்பதனை உறுதி செய்து கொள்ளவும், உன்னைப் பார்க்கவும் மூன்று நாட்களாகக் காத்திருக்கிறேன்'' என்று மிருதுவான பாசத்துடன் ஒலித்த சுப்ரமணியனின் குரல் அவரின் கோபத்தைக் குறைக்கவும் செய்தது.

''அண்ணா, நீங்க எங்கே இப்படி? இது யார்?'' என்று தடுமாற்றத்துடன் கேட்க அவர் அருகே வந்து தலையைத் தடவிக் கொடுத்தார்.

''இவர் என் மனைவியின் தந்தை...''

''ஓ! உங்கள் திருமணம் இங்கேயா நடந்தது?''

''திருமணம் சிதம்பரத்தில் நடந்தது...''

''ஆனால் இவர் ஏன் என் மகனுக்கு இப்படி ஒரு ஆசீர்வாதம் கொடுக்கிறார்?'' என்று மனதாங்கலுடன் சொல்ல அவர் புன்னகை செய்தார்.

''மனத்துக்குப் பிடித்த காரியம் செய்த இள வயது மக்களுக்கு அவர்களுக்கு பிடித்த மாதிரி ஆசீர்வாதம் செய்வதுதானே பெரியவர்களுக்கு அழகு. அதான் பிரபாகர் ஆசைப்பட்ட இலக்கை அடைவான் என்று மாமா ஆசீர்வாதம் செய்தார். அதில் என்ன தப்பு?''

''ஆசீர்வாதம் செய்வதில் தப்பு இல்லை. ஆனால் இந்த மாதிரி சினிமா துறையில் வெற்றி பெறுவதற்கு ஆசீர்வாதம் செய்வதுதான் இடிக்கிறது.''

''அதான் ஏன் என்று கேட்கிறேன்? நீ ஏன் பிரபாவின் ஆசைக்கு குறுக்கே நிற்கிறாய்?''

''நடிப்பு கனவுடன் வெளி வந்த என் வாழ்க்கை வீணானது போதாதா? இன்னும் அடுத்த தலை முறையும் பாழாக வேண்டும் என்று நீங்க ஆசைப் படுவீங்களா? அதை நான் அனுமதிக்க வேண்டுமா?''

''ஏன் குழலி அப்படிச் சொல்கிறாய்? நீ நல்லா இல்லையா?''

''ப்ச்! அதை நீங்க தான் மெச்சிக்கணும்'' என்று வெறுமையுடன் வார்த்தைகள் குழலியின் கட்டுப் பாட்டை மீறி வெளிவர அவர் திகைத்தார்.

''குழலி, உனக்கு ஏதாவது சிரமம் என்றால், உடனே வீட்டுக்கு வந்து இருக்கலாமே?''

''வந்து இருக்கலாம். நீங்களும் ஆதரவு தந்து இருப்பீர்கள். ஆனால் என் மனநிலை பற்றி யோசித்துப் பார்த்தீர்களா? நான் தேடி வந்த வாழ்க்கை பொய்த்துப் போனது என்று மீண்டும் ஐயாவைத் தேடி வர என் சுய கௌரவம் இடம் கொடுக்குமா? அதனால் எப்படியோ காலம் தள்ளிக் கொண்டு இருக் கிறேன். இதில் இவன் வேறே அப்படியே அவங்க அப்பா மாதிரியே நடிக்கணும் என்று சொன்னால் நான் என்ன செய்வது?''

''பிரபாவின் அப்பா...?''

''இப்ப இல்லை...''

''இல்லை என்றால்...?''

''இப்போது உயிருடன் இல்லை...''

''குழலி, இதை என் முன்பே சொல்லவில்லை?''

''சொல்லி இருந்தால் என்ன செய்து இருப்பீங்க?''

''இது என்ன கேள்வி குழலி? இத்தனை நாள் நீ தனியாக அவஸ்தைபட்டு இருக்க வேண்டாமே?''

''நான் அவசரப்பட்டு ஐயாவை எதிர்த்துக் கிளம்பி வந்ததற்குக் கிடைத்த தண்டனை என்று நான் அதை ஏற்றுக் கொண்டேன். அதைப் பற்றி நீங்க கவலைப் படத் தேவை இல்லை அண்ணா.''

''அப்பா உன் மீது அளவுக்கு அதிகமான நம்பிக் கையும் பாசமும் வைத்து இருந்தார். உன் பிரிவு அவரின் உடல்நிலையை பாதித்து உயிரையே விட

வைத்து விட்டது. உனக்கு ஒரு கஷ்டம் என்ற நிலை வந்தபோது வீட்டுக்குத் திரும்பி வர மனம் வர வில்லையா?'' என்று ஆதங்கத்துடன் கேட்க அவரின் கண்களில் நீர் துளிர்த்தது.

''என்னை மாதிரி நன்றி மறந்து வீட்டை விட்டு வெளியேறிய பெண்கள், அது பிறந்த வீடாக இருந் தாலே திரும்பி வர யோசிப்பார்கள். இருக்க இடம் இன்றி ஆதரவு தேடி உங்க வீட்டில் தஞ்சம் புகுந்த அனாதைப் பெண் நான். நான் எப்படி எந்த உரிமை யில் உங்களைத் தேடி வர முடியும் சொல்லுங்க பார்ப்போம்?''

''அப்ப அண்ணா என்று அழைப்பது வெறும் வாய் வார்த்தையாக தானா? உணர்ந்து இல்லையா? என்னம்மா இது? இத்தனை நாள் தனியாகக் கஷ்டப் பட்டது போதும். இனிமேல் நீ எங்களுடன் இரு.''

''இல்ல அண்ணே. அது சரிப்படாது...''

''இத்தனை நாள் நீ எங்கேயோ நன்றாக இருக் கிறாய் என்ற திருப்தியுடன் இருந்தேன். ஆனால் இப்ப நீ பொருளாதார ரீதியில் சிரமப்படுகிறாய் என்பதை தெரிந்த பிறகு எனக்கென்ன வந்தது என்று என்னால் இருக்க முடியாது குழலி...''

''அது உங்க பெருந்தன்மையைக் காட்டுது அண்ணா. ஆனால் எனக்கு மனசாட்சி உறுத்துகிறது.''

''இதில் நீ வருத்தப்பட ஒன்றும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், நீ எனக்கு உதவி தான் செய்யப் போகிறாய். தாய் இல்லாத என் பெண்ணுக்கு தாய் ஸ்தானத்தில் இருக்க மாட்டாயா?''

''தாய் இல்லாத பெண்ணா? ஏன்? அண்ணி என்ன ஆனாங்க?''

''அண்ணி ஒரு மழை நாளில் விபத்தில் இறந்து விட்டாள். ஒரே பெண் என்பதால் மாமாவுக்கு இப்ப நான் மகனாக வந்து பார்த்துக் கொள்கிறேன்.''

''அப்பா...''

''அப்பா நீ வீட்டை விட்டு வெளியேறிய அடுத்த இருபது நாளில் மறைந்து விட்டார்.''

''சிவ சிவா... அப்ப நீங்க...''

''நானே படித்து நானே வேலை தேடி, நானே பெண் பார்த்துக் கல்யாணம் செய்து, அப்படியே அவளையும் இழந்து, நானும் என் பெண்ணும் ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருக்கிறோம். இப்ப அந்த சின்னக் குடும்பத்தில் நீங்க இருவரும் வந்து சேர்ந்து கொள்ளலாம்.''

''கேட்பதற்கு சங்கடமாக இருக்கிறது. தாயும் பிள்ளை என்றாலும் வாயும் வயிறும் வேறே என்று கேள்விப்பட்டது இல்லையா? அதனால் ஒரே வீட்டில் இருப்பது சரியாக வராது.''

''குழலி...''

''அண்ணா ப்ளீஸ், இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்திக் கொள்வோம். இந்த மூன்று நாட்களாக பிரபா உங்களைப் பற்றியும் உங்க மகள் பற்றியும், மாறி மாறி பேசிக்கொண்டே இருக்கிறான்.''

''இங்கே திருவிழாவில் மேடையேற்ற அனுமதி கொடுத்ததால் இருக்கலாம்.''

''அதுதான் என் கவலையே. அவனது நடிப்பு மோகம் அளவுக்கு மேல் போய் விட்டது. மூன்று நாட்களுக்கு முன்னால் மேல்நிலைப் பள்ளியில் சேர விண்ணப்பம் சமர்ப்பிக்கச் சொன்னால் அதைக் கிழித்து ஓடையில் போட்டு விட்டான். அதனால் தான் இன்று கை நீட்டும் அளவுக்குச் சென்று விட்டேன். உண்மையைச் சொன்னால், அவன் நடிகனாக விரும் பியதில் எனக்கு உடன்பாடு இல்லை.''

''பிரபாகரின் விருப்பத்திற்கு ஏன் குறுக்கே நிற் கிறாய்?''

''அவனுடைய எதிர்காலம் பற்றிய கவலை தான். வேறென்ன?''

''நடிப்பு துறையில் முன்னுக்கு வர முடியாது என்று நினைக்கிறாயா?''

''நீங்களே ஒரு பள்ளி ஆசிரியர். நீங்க சொல்லுங்க. படிப்பு ஒரு மனிதனின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியம் என்று தெரியாதா?''

''படிப்பு முக்கியம் தான். ஆனால் படிப்பு மட்டுமே போதாது என்பது உனக்குத் தெரியாதா? நடிப்பும் ஒரு தொழில் தானே? அதை ஏன் தப்பாக நினைக்க வேண்டும்?'' என்று பிரபாகருக்கு சாதகமாக அவர் பேச மறுப்பாக தலை அசைத்தார் பூங்குழலி.

''நானே ஒரு நாடக நடிகை தான். எனக்கு சோறு போடுவதே அந்த தொழில் தான். நடிப்பைத் தொழி லாக ஏற்றால் என்ன என்ன இழப்புக்கள் நேரிடும் என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்தவள் நான்.''

''ஏன்? என்ன ஆகி விட்டது?'' என்று சுப்ர மணியன் பதட்டத்துடன் கேட்க, அவர் சுதாரித்தார். அடிப்படை தன் மானம் தலை தூக்கியது. தான் இழப்புகளை அவரிடம் பகிர்ந்து கொள்ள விரும்ப வில்லை.

''அதில் சரியான வருமானம் நிரந்தரமாக கிடைக் காது என்பதால் தானே நானே வேண்டாம் என்று சொல்கிறேன். நீங்களே சொல்லுங்க. இந்த உலகத் தில் கௌரவமாக வாழ, ஒரு நிரந்தர வருமானம் வேண்டுமா வேண்டாமா? நடிக்கப் போகிறேன் என்று சொல்லிக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? படிக்கிற வயதில், அதில் கவனம் செலுத்து என்று நான் தலை கீழாக நின்று சொல்லிக் கொண்டு இருக்கிறேன். ஆனால் நீங்க சர்வ சாதாரணமாக நடிக்கலாம் என்று சொல்லி இருக்கீங்க. அவனுக்கு ஒரு மேடையையும் அமைத்துக் கொடுத்து இருக் கீங்க. இப்படிச் செய்தால் என்ன அர்த்தம் என்று உங்களிடம் நியாயம் கேட்க தான் வந்தேன்'' என்று வேகமாகச் சொல்ல அவர் திகைத்து நின்றார்.

''நான் யாரையும் தப்பான வழிக்குச் செலுத்த வேண்டும் என்று நினைத்தது இல்லை. பையனை ஊக்கப் படுத்த நினைத்தேன். அதனால் தான்...'' என்று இறங்கிய குரலில் சொல்ல அவர் பெருமூச்சு விட்டார்.

''நானும் வீட்டில் இருந்து கிளம்பிய போது கோபத்தில் தான் கிளம்பினேன். என் ஒரே மகனின் எதிர்காலம் என்று நினைத்தால் பயமாக இருக்கிறது

அல்லவா? அவன் உங்க மீது நிறைய நம்பிக்கை வைத்து இருக்கிறான். உங்க வார்த்தை மீது அதிக மரியாதை வைத்து இருக்கிறான். அதனால்...'' என்று இழுத்து நிறுத்தினார்.

''அதனால்...''

''நீங்க அவனின் நடிப்பு ஆர்வத்திற்கு ஒரு முழுக்கு போடச் சொல்லி ஒரு வார்த்தை சொன்னால் அவன் நிச்சயம் கேட்பான்'' என்று சொல்லி முடித்த வினாடியில் அவர் மறுப்பாகத் தலை அசைத்தார்.

''இல்லை, அதை என்னால் சொல்ல முடியாது.''

''ஏன் முடியாது? ஒரு சின்ன பையனின் எதிர்காலம் நல்லா இருக்க வேண்டும் என்ற அக்கறையில் அவனைப் பெற்ற தாய் உங்களிடம் கையேந்தி நிற்கிறேன். உங்களால் இந்த சின்ன உதவியைச் செய்ய முடியாதா?''

''அவன் ஆர்வம் தீவிரமானதாக இருந்தால், அதை தடுப்பது நியாயம் இல்லை. அவன் ஆசை அநியாய மானதோ, சட்டத்திற்கு புறம்பான செயலோ இல்லை. அப்படி இருக்கையில் அதை அடக்க நினைப்பது சரி இல்லை. ஒருவேளை அவனின் கலை ஆர்வம் நிஜமாகவே அவனை வெற்றிப் பாதையில் ஏற்றி வைக்கலாமே?''

''அவன் படிக்க வேண்டும் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது எனது ஆசை.''

''தன் மகன் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று ஒரு தாய் ஆசைப்

படுவதில் தவறில்லை. ஆனால் அதைப் படித்தால் மட்டுமே எட்ட முடியும் என்பது தான் சரி இல்லை என்று சொல்கிறேன்.''

''என்ன பேசறீங்க? ஒரு ஆசிரியராக இருந்து கொண்டு படிப்பு தேவை இல்லை என்று நீங்க சொல்லலாமா?''

''நான் படிப்பு தேவை இல்லை என்று சொல்லவே இல்லை. படித்தால் மட்டுமே முன்னுக்கு வரலாம் என்பதை தான் மறுக்கிறேன். உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர் சச்சின் பத்தாவது வகுப்பைக் கூடத் தாண்டவில்லை. இன்று அவருக்கு இல்லாத செல்வமா? புகழா? அது போல பிரபாவும் படிக்காமலே முன்னுக்கு வரலாம்.''

''அந்த மாதிரி புகழும் செல்வாக்கும், கோடியில் ஒருவருக்கு தான் கிட்டும்.''

''பிரபா கோடியில் ஒருவனாக இருக்கக் கூடாதா?''

''எனக்கு என் பையன் சாதாரண வாழ்க்கை, வாழ்ந்தால் போதும்...''

''திரைத் துறையில் நுழைய வேண்டும் என்பது ஒன்றும் தீண்டத் தகாத செயல் இல்லையே குழலி? ஏன் இப்படி பிடிவாதம் பிடிக்கிறாய்? உன் மகனுடைய ஆசையையும் நிறைவேற்றலாமே?''

''அவன் தகப்பன் இல்லாத பிள்ளை. எனக்குப் பிறகு, அவன் ஒரு நல்ல குடும்ப வாழ்க்கை, ஓரளவிற்கு செல்வாக்குடன் வாழ்ந்தால் போதும். அதை நீங்க அவனுக்கு ஏற்படுத்திக் கொடுப்பேன் என்று கேரண்டீ கொடுக்க முடியுமா?''

''என்னம்மா சொல்றாய்? என்ன கேரண்டீ யார் கொடுக்கணும்? எனக்குப் புரியவில்லையே?''

''எனக்குப் பிறகு என் மகனுக்கு ஆதரவாக யார் இருப்பார்கள் என்று கேட்கிறேன்?''

''நான் இருப்பேன்...''

''இந்த ஆதரவு எனக்குக் கிடைக்கவில்லையே?''

''அன்று கொடுக்க முடியாததை தான் இன்று கொடுக்க விரும்புகிறேன். செய்த தவறுக்கு பிராயச் சித்தம் என்று வைத்துக் கொள்ளேன்...''

''உங்கள் காலத்திற்குப் பிறகு...?''

''என் காலத்திற்குப் பிறகு... என் காலத்திற்கு பிறகு... ம்ம்... என் மகள் இருப்பாள்...''

''அவள் கல்யாணம் ஆகிச் சென்று விட்டால் அதன் பிறகு யார் இருப்பா? அவளை இவனுக்கே கல்யாணம் பண்ணி கொடுப்பேன் என்று உங்களால் உறுதி கொடுக்க முடியுமா?''

''அவள்... சின்னக் குழந்தை, பனிரெண்டு வயது தான் ஆகிறது..''

''நான் இன்றே திருமணம் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. பதினெட்டு வயதுக்கு முன்னால் திருமணம் செய்வது சட்டப்படி தப்பு என்று எனக்குத் தெரியும்...''

''என்ன பேசுகிறாய் குழலி? அவன் நடிப்புத் துறையில் முயற்சி செய்வதை ஊக்கப் படுத்து என்று சொல்கிறேன். எதற்கு எதை முடிச்சு போடுகிறாய்?''

''நாளைக்கு என்ன நடக்கும் என்று நமக்கே தெரியாது. அதனால் தான் சொல்கிறேன். இன்றே அவன் எதிர்காலத்திற்கு ஒரு வழி செய்ய வேண்டும்.''

''எனக்கு பிரபா மீது, அவன் திறமை மீது அதீத மான நம்பிக்கை இருக்கு. அவனுக்கு நல்ல உறுதியும் முயற்சியும் திறமையும் இருக்கு. அவன் ஜெயிப்பான் என்று நான் நம்புகிறேன்...''

''எனக்கு அந்த நம்பிக்கை இல்லை. அதனால் தான் உங்களிடம் உறுதி கேட்கிறேன்.''

''ஆனால், ஒரு வேளை அவன் ஜெயிக்கா விட்டாலும், நானும் என் பெண்ணும், அவனுக்கு ஆதர வளிப்போம். இது சத்தியம்'' என்று வாக்களித்தார் சுப்ரமணியன்.

அந்த திருப்தியில் மகனின் ஆசையை நிறை வேற்ற, சென்னை கோடம்பாக்கத்தில் குடியேறினார். மகனுக்கு திரை வாய்ப்பு கிடைக்கும்வரை, அதற் கான வயது வரும் வரை, அவர் சினிமாவிலும் தொலைக்காட்சி தொடர்களிலும், துணை வேடங் களில் தோன்றினார்.

திரை துறையில் அவன் ஜொலிக்கத் தேவையான சண்டை பயிற்சிகள், நடன பயிற்சிகள் பிரபாகருக்கு கொடுக்கப்பட்டன. கால சக்கரம் சுழன்று கொண்டே இருந்தது. அவன் ஜெயிக்கத் தேவையான மேடை ஒவ்வொரு முறையும் கை அருகே வந்து வந்து, கைக்கு கிட்டாமல் நழுவிக் கொண்டே இருந்தது.

5

ஆசிரியர் பணியில் அதிக ஈடுபாடு கொண்ட சுப்ரமணியன், தன் ஒரே மகளை வளர்க்கப்பட்ட சிரமங்களை வார்த்தையில் வடிப்பது சுலபமல்ல. தான் வேலை பார்த்த பள்ளியிலேயே அவளையும் படிக்க வைத்ததால், போக்குவரத்து சிரமங்களோ, தான் வேலை முடிந்து வீட்டுக்கு திரும்பும் வரை மகள் தனியாக இருப்பாள் என்ற கவலையோ இல்லை. ஆனாலும் ஒற்றை ஆளாக பெண் குழந்தையை வளர்ப்பது என்பது ஒரு தந்தைக்கு சிரமமே. அதிலும் அவள் வளர வளர, அவர் சிரமம் கூடுவதை உணர்ந்தார்.

எட்டாம் வகுப்பில் அவள் அடி எடுத்து வைத்து இருந்தாள். பதிமூன்று வயது முடிந்ததில் இருந்து அவள் பருவம் அடையும் நாளை வேறு எண்ணி தவித்துக் கொண்டு இருந்தார். வீட்டில் ஒரு பெண் துணை இருந்தால் நன்றாக இருக்குமே என்று அவ்வப்போது எண்ணிக் கொண்டார். மனைவியும் தாயும் இல்லாத சிரமம் இப்போது அதிகமாகவே உரைத்தது.

அவருக்கு நன்கு தெரிந்த ஒரே பெண் ஆன பூங்குழலி மூலம், பெண் பருவம் அடைதல் பற்றி மகளுக்கு ஜாடை மாடையாக சொல்லி வைக்க வேண்டும் என்று எண்ணியபடி அன்றைய காலை வேலையைச் சமையல் அறையில் கவனித்துக் கொண்டு இருந்தார்.

காலை நேரச் சிற்றுண்டிக்கு இட்லி, சாம்பாரும், மதிய உணவுக்கு எலுமிச்சை சாதமும் வாழைக்காய் வறுவலும் செய்து கொண்டே மகளையும் எழுப்பிக் கொண்டு இருந்தார்.

‘‘திவ்யா, மணி ஏழு ஆச்சு பார், ஸ்கூலுக்கு நேரமாகவில்லையா? எழுந்திரி’’ என்று ஆறாவது முறையாக குரல் கொடுத்த பிறகும் அவளிடம் இருந்து பதில் வரவில்லை.

‘‘திவ்யா, என்ன செய்கிறாய்?’’ என்று அவளின் அறை கதவைத் தட்ட அதற்கும் பதில் இல்லை. கதவைத் தள்ளித் திறந்ததும் கண்ட காட்சி அவரை பயமுறுத்தியது. திவ்யா கட்டிலில் படுத்தும் இருக்கவில்லை. கண்ணில் தூக்கமும் இல்லை. மிரட்சி மட்டுமே இருந்தது. தன் மீது ஒரு போர்வையை இழுத்து மூடியபடி அமர்ந்து இருந்தாள்.

‘‘திவ்யா, என்னம்மா இப்படி உட்கார்ந்து இருக்க? என்ன ஆச்சு? உடம்பு சரி இல்லையா?’’ என்றபடி அருகே வந்து அவர் அவளின் நெற்றியைத் தொட்டுப் பார்க்க அவள் அவசரமாக அப்பாவின் கையை விலக்கி விட்டாள்.

‘‘திவ்யா, என்னம்மா? ஏன் அப்படிப் பார்க்கிறாய்? ஏதாவது கெட்ட கனவு கண்டாயா?’’ என்று கேட்டபடி அவள் அருகே அமர அவள் மேலும் ஒதுங்கினாள்.

‘‘அப்பா... நான்... சாகப் போகிறேன்... எனக்கு பயமா இருக்கு...’’

‘‘என்னம்மா இது உளறல்? நான் இருக்கும்போது உன்னை எப்படிச் சாக விடுவேன். உனக்கு என்ன

பிரச்னை என்று சொன்னால் உடனே டாக்டரிடம் போகலாம். எதுவா இருந்தாலும் சரி பண்ணி விட லாம். பயப்படக்கூடாது'' என்று ஆறுதல் சொல்லிய படி போர்வையை விலக்க முயல அவள் மீண்டும் இழுத்து போர்த்திக் கொண்டாள். அவள் இழுத்துப் போர்த்திக் கொண்டாலும், நகர்ந்த வேகத்தில், படுக்கையில் விரிப்பில், திட்டு திட்டாக இருந்த கறை அவர் கண்ணில் பட்டது. அடுத்த வினாடி அவளின் பயத்தைப் புரிந்து கொண்டார்.

''திவ்யா செல்லம், பயப்பட ஒன்றும் இல்லை. இது ரொம்ப சாதாரணமான விஷயம். பயப்படும் விஷய மும் இல்லை. நீ ஒரு பெண்ணாக வளர்ந்து விட்டாய் என்று சொல்லும் ஆரோக்கியமான விஷயம். நான் உடனே குழலி ஆன்ட்டியை வரச் சொல்கிறேன். அவங்க வந்து இன்னும் விபரமா சொல்வாங்க'' என்று ஆறுதல் சொல்ல அவள் கண்ணில் மிரட்சி விலகவில்லை.

* * *

காலை நேரம் எட்டு மணிக்கு வீட்டு போன் மணி அடிக்க ஹாலில் இருந்த பிரபாகர் பேப்பரில் மூழ்கி இருந்தான். சினிமா செய்திகளில் ஆழ்ந்து இருந்த வனின் கவனம் அந்த ஓசையில் கலைந்தது.

''அம்மா, போன் அடிப்பது காதில் விழவில் லையா? வந்து எடுத்தால் என்ன?'' என்று எரிச்ச லுடன் சப்தம் போட உள்ளே இருந்து பதில் வந்தது.

''ஆமாடா! நான் அடுப்படியில் வேலையாக இருப்பவள் அதை விட்டு விட்டு வந்து போனை

எடுக்க வேண்டும். ஆனால் கை எட்டும் தூரத்தில் பேப்பர் படித்துக் கொண்டு இருக்கும் நீ எடுத்தால் தேய்ந்து போவாயோ?'' என்று மகனைத் திட்டியபடி வந்து எடுத்தார் பூங்குழலி.

''குழலி...''

''என்ன இந்நேரத்தில் போன் பண்றீங்கண்ணா? இது ஸ்கூலுக்கு கிளம்பும் நேரம் ஆச்சே?'' என்று ஆச்சரியமாக விசாரித்தார்.

''சாரி காலை நேரத்தில் வேலையாக இருக்கும் நேரத்தில் தொந்தரவு பண்ணி விட்டேன்...''

''என்ன அண்ணா நீங்க? நீங்க இப்படி எல்லாம் சொல்லலாமா? அதெல்லாம் ஒரு தொந்தரவும் இல்லை. இன்னிக்கு ஷூட்டிங் கூட மதியம் இரண்டு மணிக்கு தான். என்ன விஷயமா போன் பண்ணி னீங்க சொல்லுங்க.''

''நீ உடனே கிளம்பி இங்கே வர முடியுமா?''

''வருகிறேன் அண்ணா, நீங்க சொன்ன பிறகு வராமல் இருப்பேனா? ஆனால் என்ன விஷயம் என்று சொல்லலையே?''

''எல்லாம் நல்ல விஷயம் தான். நம்ம திவ்யா மெச்சூர் ஆகி இருக்கிறாள் என்று நினைக்கிறேன். அப்படியே பிரமை பிடித்த மாதிரி அப்படியே படுக் கையில் அமர்ந்து இருக்கிறாள். அதான் நீ வந்தால் பக்குவமா சொல்லிப் புரிய வைப்பாய் என்று அழைத்தேன். உனக்கு ஒன்றும் சிரமம் இல்லையே?''

''சே சே, ரொம்ப சந்தோஷம் அண்ணா, எனக்கு ஒரு சிரமமும் இல்லை. நான் இன்னும் அஞ்சே

நிமிஷத்தில் அங்கே வந்து விடுவேன். அவளை தைரியமா இருக்கச் சொல்லுங்க...''

''நீ அங்கே சமையல் பண்ணவில்லை என்றால் கவலைப்பட வேண்டாம், இங்கேயே உங்க இரு வருக்கும் சேர்த்து நானே சமைத்து விடுகிறேன்'' என்று சொல்ல சிரித்தார்.

''அய்யோ அதெல்லாம் வேண்டாம் அண்ணா. நானே பார்த்துக் கொள்வேன்.''

''தினமும் பிரபா உன் சமையலை தானே சாப்பிடு கிறேன். இன்று ஒரு நாள் என்னுடைய நளபாகத்தை சுவைத்துப் பார்க்கட்டும். இன்று வடை பாயாசத் துடன் விருந்து சமைத்து வைக்கிறேன். வாங்க.''

''திவ்யா...'' என்று அழைத்தபடி வந்து சேர்ந்த பூங்குழலியை தாவி அணைத்து கொண்டாள்.

''அத்தை... எனக்கு ரொம்ப பயமா இருக்கு... வயிறு ரொம்ப வலிக்குது... அதோட... அதோட... நிறைய ப்ளட் வருது...'' என்று சொன்னபடி கட்டிக் கொண்ட குழந்தையை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டார்.

''ஹேய் திவ்யா, இதில் பயப்பட ஒன்றுமே இல்லை. எல்லா பெண்களுக்கும் வரும் ஒரு இயல்பான செயல்தான். உனக்கு முதல் முறை என்பதால் பயமா இருக்கு. இது மாதா மாதம் எல்லா பருவம் அடைந்த பெண்களுக்கும் நிகழக் கூடிய சாதாரண செயல். உன் பள்ளியில், உன்னுடன் படிக்கும் சில பெண் களுக்குகூட இது நேர்ந்து இருக்கும். விஸ்பர்

விளம்பரம் பார்த்ததில்லை? பள்ளிக் குழந்தைகள் துள்ளிக் குதித்து விளையாடலாம். ஒதுங்கி இருக்கத் தேவை இல்லை...'' என்று ஆறுதல் சொல்ல அவள் முகத்தில் கொஞ்சம் தெளிவு வந்தாலும் இன்னும் பயம் மிச்சம் இருந்தது.

எத்தனை நாளைக்கு இப்படி இருக்கும்?

உடலில் இருக்கும் ரத்தம் வெளியேறி விட்டால் பலவீனமாக இருக்காதா?

வயிற்று வலிக்கு என்ன செய்வது?

படுக்கையில் படுக்கலாமா?

பல பல சந்தேகங்கள் அவளுக்கு அடுக்கடுக்காக தோன்ற, ஒவ்வொன்றுக்கும் பொறுமையாக பதில் சொன்னார்.

கடலூரில் இருந்து சென்னைக்கு அவர்கள் வந்த பிறகு அவ்வப்போது வரப் போக இருந்த பழக்கம், திவ்யாவின் பூப்படைதல் நிகழ்ச்சி மூலம் நெருங்கிய தொடர்பாக மாறிப் போனது.

அன்று அவளுக்கு வந்த சந்தேகங்கள் மட்டுமில் லாமல், அடுத்தடுத்த நாட்களில் வந்த, 'அத்தை யூரின் போகும்போது எரிச்சல் ஆக இருக்கு', 'அடி வயிறு பயங்கரமா வலிக்குது.'

''நேற்று வெளியே சாப்பிட்டேன் காலையில் இரண்டு முறை வாமிட் பண்ணி விட்டேன். தொண்டை எல்லாம் வலிக்குது'' போன்ற சின்னச் சின்ன உடல் உபாதைகளுக்கு அவள் டாக்டரிடம் செல்வதில்லை.

கால் கட்டை விரலில் சுண்ணாம்பு போட்டால் ஐந்தே நிமிஷத்தில் நீர் கடுப்பு விலகும். முதலில்

தினமும் இரண்டு லிட்டர் தண்ணீர் குடிக்கப் பழகு.

அடி வயிறு வலித்தால் சூடாக இருக்கலாம். எண்ணை தேய்த்துக் குளி என்றால் கேட்க மாட்டேன் என்கிறாய். இந்த ஞாயிறு நான் வந்து தலை தேய்த்து விடுகிறேன். அதுக்கு முன்னாடி இப்ப உடனடியாக, வெந்தயம் ஒரு வாய் எடுத்துப் போட்டு தண்ணீர் குடி, வயிற்று வலி சரியாகி விடும்.

வெளியே சாப்பிட வேண்டாம் என்று அப்பா சொல்வதைக் கேட்கக் கூடாது என்று வைத்து இருக்கிறாய். ஒரே பொண்ணு என்று உங்க அப்பாவும் ரொம்ப செல்ல கொடுக்கிறார். அப்புறம் இப்ப வாந்தி வருது, வயிறு வலிக்குது என்று புலம்பினால் என்ன செய்வது? வாந்தியை நிறுத்த சீரகத்தை மென்றால் போதும்.

தொண்டை வலி ஏன் வந்தது? ஐஸ்கிரீம் விட்டு கட்டினாயாக்கும்? எதுவா இருந்தாலும் ஒரு அளவுடன் சாப்பிடணும் திவ்யா. தொண்டை வலி என்றால் சுடு தண்ணியில் உப்பு போட்டு வாய் கொப்பளி, என்று அவர் உடனுக்குடன் போனில் சொல்லும் கை மருந்துகள் அற்புதமாக வேலை செய்ய, அடுத்த சில ஆண்டுகளில் மருமகள் என்ற நிலையைத் தாண்டி குழலியின் செல்ல மகளாகிப் போனாள் திவ்யா.

* * *

''இன்றைய பொழுது உங்களுக்கு அமோகமாக அமைய மனமார்ந்த வாழ்த்துக்கள்'' என்ற குறுஞ்

செய்தி அன்று காலை ஏழு மணிக்கே அலை பேசியில் திவ்யாவிடம் இருந்து வந்ததைப் பார்த்த பிரபாகரின் முகத்தில் மலர்ச்சி வந்தது.

'நல்லவேளை மறந்து விட்டாளோ என்று நினைத்தேன். கரெக்டா மெசேஜ் அனுப்பி விட்டாள் என் செல்லம்' என்று மனசுக்குள் கொஞ்சியபடி அவளை அழைத்தான்.

''ஹாய் திவ்யா, என்ன இப்போ தான் பள்ளி எழுச்சியா?'' என்று கிண்டலாகக் கேட்க அவள் பல்லைக் கடித்தாள்.

''எனக்கு எட்டு மணிக்கு காலேஜ் பஸ் பிடிக்கணும். ஏழரை மணிக்கு எழுந்தால் எப்படி காலேஜ் போக முடியும்? கொஞ்சமாவது லாஜிக்கோடு பேசறீங்களா?''

''கலைத் துறையில் இருப்பவங்களுக்கு கற்பனை தான் தெரியும் லாஜிக் தெரியாது. கதையில் லாஜிக் பார்க்கவும் கூடாது. அதனால் அதை என்னிடம் எதிர் பார்க்கக் கூடாது.'' என்று பெருமையாகச் சொல்ல அவள் சிரித்தாள்.

''இன்று உங்களுக்கு முக்கியமான அப்பாயிண்ட் மென்ட் இருக்கு என்று பேசாமல் விடுகிறேன். இல்லை என்றால் நடப்பதே வேறே. எத்தனை மணிக்கு இயக்குநர் வரச் சொல்லி இருக்கிறார்?'' என்று விசாரிக்க அவன் முகம் ஆர்வத்தில் பிரகாசித்தது.

''ஒன்பது மணிக்கு மேக்கப் டெஸ்ட் எடுக்கறாங்க. பதினோரு மணிக்கு டயலாக் ஆடிஷன் இருக்கும்.

இன்னிக்கு உனக்கு காலேஜ் போகணுமா? நீயும் என்னுடன் வந்தால் இன்னும் கொஞ்சம் உற்சாகமாக இருக்கும்.''

''எனக்கு நீங்க நடிப்பதைப் பார்க்க, உங்க அருகில் இருந்து உற்சாகப்படுத்த ஆசைதான். ஆனால் முதல் க்ளாஸ் ரொம்ப முக்கியம்பா. டெஸர்ட்ஸ் செய்யும் வகுப்பு. எனக்கு ரொம்ப பிடித்ததும் கூட. மும் பையில் இருந்து விரிவுரையாளர், ஸ்பெஷலா வருகிறார். மிஸ் பண்ண முடியாதே?''

''ஓ! சரி பரவாயில்லை, எத்தனை மணிக்கு வகுப்பு முடியும்?''

''பத்தில் இருந்து பதினொன்றரை. அது முடிந்த உடனே கிளம்பி கோடம்பாக்கம் வந்தால் கூட பனிரெண்டரை ஆகிவிடும். உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகுமோ தெரியலையே?''

''எனக்கும் கிட்டத்தட்ட அந்த நேரம் ஆகி விடும். என்னுடைய வெற்றி கதையை முதலில் உன்னிடம் தான் சொல்ல வேண்டும் என்று ஒரு ஆசை. நீ வருகிறாயா?'' என்று ஆர்வத்துடன் கேட்க அவள் சந்தோஷமாக தலை அசைத்தாள்.

''இதென்ன கேள்வி? அதை விட எனக்கு வேறே என்ன வேலை? எப்படிப் பார்த்தாலும் பனிரெண்டு மணிக்கு கோடம்பாக்கம் வாகினி ஸ்டூடியோ பக்கத்தில் இருக்கும் பஸ் ஸ்டாப் வந்து விடுகிறேன். உள்ளே என்னை விடுவாங்களோ மாட்டாங்களோ'' என்று உற்சாகத்துடன் சொல்ல அவனும் சந்தோஷ

மாக சம்மதித்தான். ஆனால் அந்த உற்சாகம் பகல் பனிரெண்டு மணி வரை நீடிக்கவில்லை.

6

'என்னுடைய வெற்றி கதையை உன்னிடம் முதலில் சொல்ல வேண டும். வா' என்று ஆர்வத்துடன் அழைத்த பிரபாகரின் வார்த்தையை மதித்து, கல்லூரியில் இரண்டு வகுப்புகளுக்கு மட்டம் போட்டு விட்டு குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் திவ்யா காத்திருந் தாள். ஆனால் அவள் வந்து முப்பது நிமிடங்களுக்குப் பிறகு பகல் ஒரு மணி அளவில் சோர்வாக நடந்து வந்த பிரபாகரைப் பார்த்ததுமே அவளுக்கு பகீர் என்றது.

''ஹாய் பிரபா...'' என்று அழைத்தபடி அவசரமாக கைப்பையில் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டினாள். அவன் முகம் சொன்ன செய்தியை அவளால் படிக்க முடிந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

''ஷப்பா, என்ன வெயில்! செப்டம்பர் மாசத்தில் ஏப்ரல் மே மாதிரி வெயில் கொளுத்துகிறதே. பஸ்சில் பயணம் செய்ய முடியவில்லை. ஒரே தாகம். நாங் களாவது கையிலே தண்ணி பாட்டில் எடுத்துட்டுப் போவோம். உங்களுக்கு அதுவும் முடியாது. இந்தாங்க கொஞ்சம் தண்ணி குடிங்க'' என்று கலகலப்பாகப் பேசியபடி அவனின் மன நிலையை மாற்ற முயன்றாள்.

''ப்ச்! வேண்டாம்...'' என்று ஒற்றை வார்த்தையில் மறுத்தவன் அவள் அமர்ந்து இருந்த பெஞ்சில் அருகே அமர்ந்தான். முகத்தில் சோர்வும் ஏமாற்றமும் ஆதங்கமும் அப்பட்டமாகத் தெரிந்தது.

''என்ன ஆச்சு பிரபா?''

''ப்ச்! தயாரிப்பாளர் அவருக்கு வேண்டிய ஆளை ஏற்கனவே நாயகனாக நடிக்க ஆளை தேர்ந்தெடுத்து விட்டார். இது சும்மா கண் துடைப்பு நாடகம். இயக்குநர் சொல்லும் ஒவ்வொருத்தருக்கும் அந்த தயாரிப்பாளர் இது சொத்தை இது சொள்ளை என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார். இன்றைய நாள் முழுவதுமே வேஸ்ட். எத்தனை பேர் வந்து இருந் தாங்க தெரியுமா? மொத்தம் அறுபது பேர். இவங் களுக்கு பொழுது போக்க வேறே வழியா இல்லை? எத்தனை இளைஞர்களின் கனவுகளுடன் விளை யாடுகிறார்கள் தெரியுமா?''

''ஹேய்! அமைதி... அமைதி... எதற்கு இவ்வளவு ஆவேசம்? இந்த கோபத்தை நீங்க வெளியே காட்டினால், பெயர் சுலபமாக கெட்டுப் போய் விடும். அதன் பிறகு கிடைக்கக் கூடிய வாய்ப்புகள் கூட தள்ளிப் போய் விடும்...''

''அதென்ன மனிதனின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் விளையாடுவது? நாயகன் தேர்வு என்று சொல்ல வேண்டியதில்லையே? துணை நடிகர் தேர்வு என்று சொல்ல வேண்டியது தானே? யாரை ஏமாற்ற இந்தப் பொய் வேஷம்?''

''பிரபா, இயக்குனரே ஒன்றும் சொல்லவில்லை என்றால் நடிக்க வாய்ப்பு தேடும் நாம் எப்படி அதை ஆட்சேபிக்க முடியும்? கொஞ்சம் அமைதியாக இருங்க. இது ஒன்று தான் தயாரிப்பு நிறுவனமா? இன்னும் எத்தனையோ நிறுவனங்கள் இருக்கு. அவை ஒவ்வொன்றும் வருடத்திற்கு நாலு படங்கள் எடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. ஏன் மனசை தளர விட வேண்டும்?''

''அதில்லை திவ்யா, எந்தத் தொழில் செய்தாலும் அதில் நேர்மை வேண்டாமா? திறமைக்கு மதிப்பு கிடையாதா? எல்லாரும் யாரையாவது சிபாரிசுக்குப் பிடித்துக் கொண்டே அலைய முடியுமா? அந்த வாய்ப்பு இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்?''

''உங்க கோபம் புரியுது. ஆனால் அதுக்காக என்ன செய்ய முடியும்? தன்னம்பிக்கையுடன் விடா முயற்சி செய்பவர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். உங்களுக்கு ராபர்ட் ப்ரூஸ் சிலந்தியைப் பார்த்து பாடம் படித்த கதை தெரியாதா? இல்லை தாமஸ் ஆல்வா எடிசன் பல்பை கண்டு பிடிக்க எத் தனை முறை முயற்சி செய்தார் என்று தெரியாதா?''

''நானும் ஆறு ஆண்டுகளாக விடாமல் முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறேன்...''

''சும்மா எதையாவது சொல்லக்கூடாது பிரபா, இருபது வயசுக்கு முன்னால் திரைக்கு வருவதற்காக நீங்க பயிற்சி எடுத்துக் கொண்ட காலத்தை எல்லாம் முயற்சி செய்ததை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியுமா? இருபது வயதுக்கு முன்னால்

நீங்க சிறுவன் கணக்கிலும் இல்லாமல் வளர்ந்த நபர் கணக்கிலும் இல்லாமல் இருந்தீர்கள். இப்போதான் இரண்டு ஆண்டு காலமாக தான் நீங்க முயற்சி செய்வதாக கணக்கில் எடுத்துக் கொள்ள முடியும். இன்று நாள் நமக்கு சாதகமாக இல்லை என்று வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த நாளைக்காக நாம் ஆர்வத்துடன் காத்திருக்க வேண்டும். அவ்வளவு தான்...''

''நாம் என்று உன்னையும் ஏன் சேர்த்துக் கொள் கிறாய்? உனக்கென்ன ஆச்சு?''

''அதை ஏன் கேட்கறீங்க? உங்களுக்கு மட்டும் இல்லை, இன்று எனக்கும் ஜாதகத்தில் சுக்கிரன் உச்சத்தில் இல்லை போல. நான் மும்பையில் இருந்து முக்கியமான விரிவுரையாளர் வருகிறார் என்று தானே வகுப்பை மிஸ் பண்ணாமல் போனேன். அவருக்கு அங்கே மழை வெள்ளத்தில் ஃப்ளைட் டேக் ஆப் ஆக வில்லையாம். அதனால் அவர் ஜூட் அடித்து விட்டார்...''

''அதில் என்ன பெரிய ஏமாற்றம்?''

''ஹா! உங்களுக்கு என்ன ஈசியா கேள்வி கேட்டு விடுவீர்கள். காத்திருந்த எங்களுக்கு தானே எல்லா எரிச்சலும்? வர முடியவில்லை என்று முன்னாடியே சொன்னால் அவரின் கௌரவம் குறைந்து விடும் போல, பதினோரு மணி வரை சத்தமே இல்லை. விமான நிலையத்தில் காருடன் இவரை அழைக்கச் சென்ற பேராசிரியர், என்னடா இவ்வளவு நேரம் ஆளைக் காணவில்லையே என்று பதினோரு

மணிக்கு போன் பண்ணி விசாரித்த பிறகு சாவகாச மாகச் சொல்கிறார். இந்த அழகில் இருக்கு தகவல் தொடர்பு, என்ன செய்ய?''

''என்னைச் சமாதானப்படுத்த என்னவோ கதை சொல்கிறாய் என்பது மட்டும் நல்லா புரியுது.''

''என்ன உளறுகிறாய்? நான் எதுக்கு கதை சொல்ல வேண்டும்?''

''பேராசிரியர் பணியில் இருப்பவர்கள் ஒத்துக் கொண்ட பணிக்கு வர இயலவில்லை என்று முன்பே சொல்லாமல் விட்டு இருப்பார்கள் என்று நம்ப முடியவில்லை. அவரைப் பற்றி சொல்லி, உனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பெரிதாகக் காட்டி, என் ஏமாற்றத்தை சிறிதாக்க முயற்சி செய்கிறாய் என்பது நல்லாவே புரிகிறது. அது கூட புரியாத அளவுக்கு நான் ஒன்றும் கேனை இல்லை...''

''புரியுது இல்லை? அப்புறம் மூஞ்சியை கொஞ்சம் சிரித்த மாதிரி வைத்துக் கொண்டால் என்ன குறைந்தா போவீர்கள்? என்னவோ இன்றோடு உலகம் முடிஞ்சே போன மாதிரி முகத்தை உம்மூன்னு வைத்துக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்? போனால் போகட்டும் போடா... என்று தூக்கி எறிஞ்சு பாட்டு பாடுவதை விட்டுட்டு...''

''அதுக்கு ஏன் சோக பாட்டு பாடணும்? மனசுக்குப் பிடிச்ச பொண்ணு, எனக்கு ஆறுதல் சொல்லக் காத் திருக்கும்போது, தோளோடு தோள் சேர்ந்து துணை நிற்க காத்திருக்கும் போது நான் ஏன் தத்துவ பாடல் பாட வேண்டும்?''

''சரி, உங்க மனசுக்குப் பிடிச்ச பாட்டையே பாடுங்க. நான் என்ன வேண்டாம் என்றா சொல்கிறேன். ஒளி மயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகின்றது. இந்த உலகம் பாடும் பாடல் ஓசை காதில் விழு கின்றது...'' என்று உற்சாகமாகப் பாடுங்க.''

''ஆமா, உனக்கு என்ன வயசு?''

''இருபது. ஏன் கேட்கறீங்க?''

''நீ பாடும் பாட்டு எல்லாம் ஐம்பது வருடங் களுக்கு முன்பு வந்ததாக இருக்கே? ஒரு வேளை உன் வயசை மறைத்து என்னிடம் பொய் சொல் கிறாயோ என்று கேட்டேன்'' என்று சொல்ல அவன் கன்னத்தைக் கிள்ளி, உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்.

''ஆமா, என் வயசைப் பற்றி உன்னிடம் பொய் சொல்லி, நான் மெரீனா பீச்சில் ஒரு நாலு அடுக்கு மாளிகை கட்டப் போகிறேன் பாரு...''

''நாலு அடுக்கு மாளிகை நமக்கு வேண்டுமா என்ன? ஆறுக்கு நாலு அடி போதாதா?'' என்று அவளின் முகத்தை ரசனையுடன் பார்த்து, மெலிதான குரலில் சொல்ல அவள் வேடிக்கை பேச்சு நின்றது.

''என்ன... சொல்ற? ஆறுக்கு நாலு அடியா?'' என்று தயக்கத்துடன் கேட்டு விட்டு அவனின் முகத்தைப் பார்க்க அவன் வேகமாக இயல்புக்கு வந்தான்.

''ஹேய்! என்ன அப்படி பார்க்கிறாய்? நான் ரொம்ப அளகா இருக்கேனா?'' என்று இமைகளை கொட்டி அவன் வேடிக்கையாக கேட்க ஆசிரியரின் மகளாக உடனே உருமாறினாள் திவ்யா.

''அது அளகா இல்லை... அழகா... எங்கே சரியா சொல்லுங்க பார்ப்போம்...''

''அது நான் தமிழ் உச்சரிப்பு தெரியாமல் சொன்ன வார்த்தை இல்லை. வடிவேலு பேசுவது மாதிரி காமெடி பண்ணினேன்...''

''ஓ! அதுக்கு பேர் காமெடியா...? சாரி... சாரி... ஒரு நிமிஷம் வெயிட் பண்ணுங்க நான் ஓரமா போய் சிரிச்சுட்டு வர்றேன்.''

''என்ன நக்கலா?''

''இல்லையே விக்கல்...''

''விக்கலா? தொண்டையில் ரெண்டு குத்து குத்தினால் விக்கல் காணாமல் போய் விடும்...''

''சே சே... இருபது வயசு பருவ பாவை விக்கல் என்று சொன்னால், ஓடிப் போய் தண்ணீர் எடுத்துக் கொடுக்கலாம். அதுவும் இல்லையா அட்லீஸ்ட் ஜில்லுன்னு மாம்பழச் சாறு வாங்கித் தரலாம். ஹூம் இங்கே என்னடா என்றால், தொண்டையில் குத்து வேன், மண்டையில் கொட்டுவேன் என்று ஒரே அராஜகமா இருக்கு. இருங்க அத்தையிடம் சொல்லி உங்களை என்ன பண்ணுகிறேன் என்று பாருங்க...''

''நீ அத்தையிடம் சொல்லிக்கோ. நான் எங்க மாமாவிடம் சொல்லிக்கறேன்...''

''எங்க அப்பா என்னை ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. மிஞ்சி மிஞ்சிப் போனால், ''என்னம்மா இது?' என்று சிரிச்சு கிட்டே கேட்பாங்க. அவ்வளவு தான், ஆனால் அங்கே உங்க டப்பா டான்ஸ் ஆடிடும்.

நைட் சாப்பாடு கட் ஆனாலும் ஆச்சரியப்படுவ தற்கில்லை தெரியுமா?''

''அடிப் பாவி, வருங்கால சூப்பர் ஸ்டாரை இப்படி எல்லாம் பேச உனக்கு எப்படி வாய் வந்தது?''

''உங்களுக்கு எப்படி வாய் வந்ததோ, அப்படி தான்...''

''அம்மாடி, உன்னிடம் வாய் கொடுத்தால் நடு ரோடு என்று பார்க்காமல் கை நீட்டினாலும் நீட்டி விடுவாய். எதுவாக இருந்தாலும் வீட்டில் போய் பேசிக்கலாம்...''

''எங்க வீடா? உங்க வீடா?''

''எங்க வீட்டுக்கே போகலாம். அம்மா சாப்பாடு பண்ணி வச்சுட்டுப் போய் இருப்பாங்க. இல்லை என்றால் நான் தான் காலேஜில் சமைக்கிறேனே? வீட்டிலும் சமைக்க முடியாது என்று நீ என்னை சமைக்கச் சொல்வாய்.''

''ஆமா! சொன்னாலும் உடனே சமைத்துக் கொடுத்து விட்டு தான் மறு வேலை பார்ப்பீங்க...''

''பொய் சொன்ன வாய்க்கு எப்படி தான் போஜனம் கிடைக்குதோ? போன வாரம், நான் சில்லி இட்லி பண்ணித் தரவில்லை?''

''ம்கூம், காலையில் சுட்டுக் காஞ்சு போன இட்லியை மேக்கப் பண்ணிக் கொடுத்து விட்டு இதுக்கு இந்த பேரா?''

''அடிப் பாவி, நானாவது அதாவது செய்து தரு கிறேன். ஆனால் நீ? ஹோட்டல் மேனேஜ்மெண்ட் படிக்கிறேன் என்று பேர் தான். ஒரு நாளாவது அடுப் படி பக்கம் போய் ஒரு தோசை ஊற்றிக் கொடுத்தது உண்டா?''

''நான் படிப்பது ஹோட்டல் மேனேஜ்மெண்ட் தம்பி. கேட்டரிங் மேனேஜ்மெண்ட் இல்லை. அதுக்கு கிச்சன் பக்கம் போக வேண்டியதில்லை. அதை முதலில் தெரிஞ்சுக்கோ...''

''நான் உனக்கு தம்பியா... உன்னை...'' என்று அவள் காதைப் பிடிச்சுத் திருக அவள் பொய்யாக அலறினாள்.

''அய்யோ... இல்லை... அண்ணன்... காதை விடு...''

''என்ன அண்ணனா?'' என்று மேலும் வேகமாகப் பிடித்து அழுத்த, அவள் முறைத்தாள்.

''தம்பியும் இல்ல அண்ணனும் இல்லை என்றால், உன்னை என்னதான் சொல்ல வேண்டும் என் கிறாய்?'' என்று கேட்டவளின் குரல் இறங்கி இருந்தது.

''அது உனக்குத் தெரியாது...''

''ம்ஹூம்...''

''பொய்...''

''நிஜமா தெரியாது பிரபா, நான் சின்ன பொண்ணு தானே? நீ தான் வயசில பெரியவன். சொல்லிக் கொடுத்தால் என்ன?''

''வயசில பெரியவன் என்று வாய் தான் சொல்லுது. ஆனால் மரியாதை என்பதை துளியும் கிடையாது...''

''மரியாதை என்பது தானாக நம்மைத் தேடி வர வேண்டும். எனக்குக் கொடு எனக்குக் கொடு என்று கையேந்தி பிச்சை எடுக்கக் கூடாது...''

''சரி, ட்ராக் மாற்றாதே, நான் உனக்கு யார்?''

''ஹேய், உனக்கு இப்ப என்ன தெரிய வேண்டும்...?''

''உனக்கும் எனக்கும் இடையில் இருக்கும் உறவுக்கு என்ன பெயர் என்று தெரிய வேண்டும்...''

''இன்னுமா புரியலை. நாம் இருவரும் சேர வேண்டும் என்று உங்க அம்மா ஏற்கனவே...''

''அம்மா சொன்னாங்க. ஆட்டுக்குட்டி சொன்னாங்க என்பதற்காக எல்லாம் நான் எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இங்கே என்ன சொல்லுது என்று தான் நான் பார்ப்பேன்...'' என்று நெஞ்சில் கை வைத்துக் காண்பிக்க அவள் புன்னகை செய்தாள்.

''நான் உன்னை மாதிரி இல்லை. எனக்கு என் வீட்டுப் பெரியவர்களின் விருப்பம் முக்கியம்...''

''எனக்கு உன் விருப்பம் தான் முக்கியம். உனக்கு என்னைப் பிடிச்சு இருக்கா இல்லையா? நேரடியாகச் சொல்லு...''

''இப்பவே சொல்லி ஆக வேண்டுமா?''

''ஆமா... இங்கேயே... இப்பவே... இந்த ஆட்டோவிலேயே...'' என்று இறுகிய முகத்துடன் கடினமான குரலில் கேட்க, அவள் சின்னதாக தலையில் அடித்துக் கொண்டாள்.

ஆனால் அடுத்த வினாடி, அருகே அமர்ந்து இருந்தவனைத் தன் பக்கம் இழுத்து, அவன் கன்னத்தில் ஒரு

முத்தம் வைத்து, ''ஐ லவ் யூ இடியட். இதை உன் மண்டைக்குள் ஏற்றுவது இவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்று சொல்லிவிட்டு, கையோடு அவன் தலையில் ஒரு கொட்டும் வைக்க, அவன் 'ஹுர்ரே...' என்று உற்சாகத்தில் துள்ளிக் குதித்தான் பிரபாகர்.

7

ஆட்டோவில் பயணம் செய்த வேளையில், இங்கேயே இப்போதே நான் உனக்கு யார் என்பதை சொல்லி ஆக வேண்டும் என்று பிரபாகர் கட்டாயப்படுத்த, கொஞ்சம் காதல், கொஞ்சம் கோபம், இரண்டையும் கலந்து, தான் அவனைக் காதலிப்பதாக திவ்யா சொல்லி முடித்த அந்த வினாடி, அவன் வாழ்க்கையில் குறிப்பிடத் தக்க நேரமாக அமைந்தது.

கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து பழகி வந்தாலும், பெற்றோர் இருவருமே அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்யும் எண்ணம் வைத்து இருந்தாலும், அந்த பேச்சு வார்த்தை நடந்தபோது அவள் மிகவும் சிறிய பெண் என்பதால், அவனால் மனசளவில் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. முதலில் உரிமை சற்றே கூடுதலாக இருந்தாலும், வளர வளர, அவன் சற்று விலகி விட்டான். ஆனால் மனதிலே விழுந்த விருப்பத்தை அவனால் அடக்கவோ மறைக்கவோ முடியவும் இல்லை.

அவனது தவிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது போல, அவளே சந்தோஷத்துடன், 'ஐ லவ் யூ' என்று சொன்னது மட்டும் இன்றி அதற்கு ஒரு அச்சாரமாக அவனை நெருங்கி கன்னத்தில் ஒரு முத்தமும் வைக்க அவன் சிறகின்றியே வானத்தில் பறந்தான்.

''திவி, நான் இன்னைக்கு ரொம்ப ரொம்ப சந் தோஷமாக இருக்கிறேன்'' என்று உணர்வுப் பூர்வ மாகச் சொல்ல அவள் புன்னகை செய்தாள்.

''இன்று சந்தோஷமாக இருக்கிறீர்களா? நிஜமாவா?'' என்று கேட்க அவன் ஆமோதிப்பாகத் தலை அசைத் தான்.

''நிஜமா தான். அதில் உனக்கு என்ன சந்தேகம்?''

''இல்ல.... இன்று... நீங்க... வாகினி...'' என்று ஆரம்பித்து பேச்சை நிறுத்தினாள். அவன் அப்போது தான் தன் ஏமாற்றத்தை மறந்து இருக்கும் வேளையில் மீண்டும் நினைவுபடுத்த வேண்டாம் என்ற எண் ணத்தினால், பேச்சை பாதியிலேயே நிறுத்தினாலும், அவன் முக பாவனையில் எந்த மாற்றமும் இல்லை. முகத்தில் புன்னகை மறையவும் இல்லை.

''ஏன் திவி பாதியிலேயே பேச்சை நிறுத்தி விட் டாய்? அந்த ஏமாற்றம் மறைந்து போய் விட்டது. இன்று உண்மையிலேயே நான் சந்தோஷமாக இருக்கிறேன். அதற்குக் காரணம் நீ. இத்தனை நாள் எனக்கு இருந்த மனக் குழப்பத்திற்கு விடுதலை கொடுத்து விட்டாயே?''

''உங்களுக்கு என்ன குழப்பம்?''

''உனக்கு என்னை உண்மையிலேயே பிடித்து இருக்கா என்ற குழப்பம் தான்...''

''ஓ! இப்ப அந்தக் குழப்பம் தீர்ந்து விட்டதால் இந்த சந்தோஷமா?'' என்று நம்ப முடியாமல் மீண்டும் கேட்டாள்.

''மம், பின்னே...?'' என்று அவன் ஆர்வத்துடன் எதிர் கேள்வி கேட்க அவளின் முகம் கனிந்து பிரகாச மானது.

''எனக்கு உங்களைப் பிடித்து இருக்கு என்பது அவ்வளவு சந்தோஷம் தருகிறதா? தொழில் முறை தோல்வியினால் வந்த வருத்தத்தை ஈடு கட்டி விட்டதா?'' என்று ஆச்சரியத்துடன் அவன் கேட்க அவன் சிரிப்புடன் தலை அசைத்தான்.

''ஆமா.''

''தொழில் வேறு, சொந்த வாழ்க்கை வேறு இல் லையா?''

''மம், வேறு வேறு தான். ஆனால் தொழிலை விட வாழ்க்கை ரொம்ப முக்கியம் இல்லையா?''

''தொழிலில் வெற்றி அடைந்தால் தானே வாழ்க் கையில் சந்தோஷம் இருக்க முடியும்?''

''இல்லை திவி, இதையே கொஞ்சம் மாற்றி யோசித்துப் பாரு. நான் தொழிலில் வெற்றி பெற்று கோடி கோடியாகச் சம்பாதித்தாலும், நீ இல்லா விட் டால் என் வாழ்க்கையில் அமைதியும் சந்தோஷமும் இருக்காது. அப்போது நான் என்ன செய்ய முடியும் சொல்லு? இன்றைய வாய்ப்பு கை நழுவிப் போன

வருத்தம் கூட இப்போது பெரியதாகத் தெரிய வில்லை. நீ என்னுடன் கடைசி வரை இணை பிரி யாமல் இருப்பாய் என்பதே அதிக உற்சாகத்தைத் தரு கிறது. அந்த ஏமாற்றம் உண்மையிலேயே பின்னால் போய் விட்டது. தாங்க்ஸ் திவி'' என்று புன்னகை யுடன் சொல்லி அவளின் இடது உள்ளங்கையைப் பற்றி அழுத்தியபோது திவ்யாவின் அலைபேசி அழைத்தது.

''ஹேய் போன், அப்பாவா தான் இருக்கும். முதலில் கை எடுங்க'' என்று சொன்னபடி அவள் கைகளை விலக்க, அவன் சிரித்தான்.

''அப்பாவிடம் இருந்து போன் என்றால் அன்புக் குரியவன் ஆறடி தள்ளி தான் நிற்க வேண்டும் போல.''

''ஆட்டோவுக்குள் ஆறடி தூரம் இருக்கா? சும்மா வாய்க்கு வந்தபடி பேசாதே.''

''கணக்கு வாத்தியார் பொண்ணு என்று அப் பப்போ நிரூபித்து ஆகணும் உனக்கு. ஆமா நீ ஏன் திவ்யா சில நேரம் நீ வா போ என்று பேசுகிறாய்? சில நேரம் வாங்க போங்க என்று பேசுகிறாய்? ஒருமை பன்மை வித்தியாசம் உனக்குத் தெரியாதா?''

''எங்க அப்பா கணக்கு வாத்தியார் என்றால் அதில் உனக்கு என்ன கஷ்டம்? ஏன் இப்படி சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் உளறிக் கொட்டுகிறீங்க?''

''எனக்கு என்ன கஷ்டம்? நான் ஒன்றும் உளற வில்லை. உங்க அப்பா எப்படி பேசுவார் என்று

சொல்லி காட்டுகிறேன். அவ்வளவு தான். சீக்கிரம் போனை எடுத்துப் பேசு. அதுக்கும் 'ஏன் திவ்யா ஆறு ரிங் போகும் வரை போனை எடுக்கவில்லை?' என்று உங்க அப்பா கேள்வி கேட்பார்.''

''ஹேய் அப்படியே எங்க அப்பா மாதிரியே பேசறீங்களே?''

''உங்க அப்பா மாதிரி மட்டும் இல்லை. எல்லார் மாதிரியும் பேசுவேன். இப்ப பாரு'' என்று சொல்லி விட்டு தொண்டையைக் கணைத்தான்.

''அம்மா என்பதும் மூன்றெழுத்து, அப்பா என்பதும் மூன்றெழுத்து. அண்ணா என்பது மூன்றெழுத்து, அவர் சொன்ன கடமை மூன்றெழுத்து. நீங்க போடும் ஓட்டு மூன்றெழுத்து. நீங்க ஓட்டுப் போட நாங்க கொடுக்கும் பணம் மூன்றெழுத்து. ஆனால் நாங்க அடையும் பதவியும் மூன்றெழுத்து. அதன் பிறகு நாங்க உங்க நெற்றியில் போடுவது நாமம் என்ற மூன்றெழுத்து...'' என்று பிரபல அரசியல் தலைவரின் குரலில் அவன் பேசிக் கொண்டே போக, அவள் ரசித்து சிரித்துவிட்டு போனை எடுத்தபோது அது நின்று இருந்தது. புதிய எண். அதுவும் அலைபேசி எண் இல்லை. யாராக இருக்கும் என்று யோசித்த படியே மீண்டும் அந்த எண்ணை அழைத்தாள்.

''ஹலோ...''

''கொஞ்ச நேரம் முன்னாடி இந்த நம்பரில் இருந்து மிஸ்ட் கால் வந்தது. யார் பேசறீங்க?''

''மிஸ் திவ்யா...?''

''ஆமா... நீங்க...''

''நாங்க சேதுராமன் உயர்நிலை பள்ளி அலுவலகத்தில் இருந்து பேசுகிறோம்.''

''பள்ளியில் இருந்தா? என்ன விஷயம்? அப்பாவுக்கு என்ன ஆச்சு?'' என்று பரபரப்புடன் கேட்ட உடனே அவசரமாக அவள் கையில் இருந்து போனை பிடுங்கினான் பிரபாகர்.

''உங்க அப்பா பள்ளியில் வகுப்பு எடுத்துக் கொண்டு இருக்கும்போதே வகுப்பறையில் ரத்த வாந்தி எடுத்து விட்டார். இங்கே அலுவலகத்தில் இருந்த மருத்துவர் பார்த்து முதல் உதவி அளித்த பின்பு அருகே உள்ள கே.எஸ்.கே. மருத்துவமனையில் சேர்த்து இருக்கிறோம். உடனே நீங்க வந்தால் நல்லா இருக்கும்'' என்று அலுவலக பணியாளர் சொல்ல உடனே வருவதாக வாக்களித்தான்.

''என்ன ஆச்சு? அப்பாவுக்கு என்ன? யார் அவர்? என்ன சொன்னார்?'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகளை அடுக்க, அவன் அவளைத் தோளோடு சேர்த்து அணைத்து சமாதானப்படுத்தினான்.

''சும்மா லேசான மயக்கம். மருத்துவமனையில் சேர்த்து இருக்காங்க. எதுக்கு இவ்வளவு டென்ஷன்? நாம் அங்கே போய் பார்க்கலாம். அவருக்கு ஒன்றும் இல்லை'' என்று அவன் நிதானமான குரலில் சொல்ல அவள் முகத்தில் குழப்பம் நிலவியது.

''இல்லை நீ பொய் சொல்கிறாய்.''

''நான் பொய் சொல்ல வேண்டும் என்று என்ன அவசியம்? சும்மா டென்ஷன் ஆகாதே என்று

சொல்கிறேன். மாமாவுக்கு கொஞ்சம் உடம்பு சரி இல்லை. அதனால் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். நாம் போய் அங்கே பார்க்கலாம்'' என்று சொன்னான். அவளுக்கு ஆறுதல் அளிக்கச் சொன்ன அந்த வார்த்தைகள் அவனுக்கே நம்பிக்கை அளிக்கவில்லை. மனத்துக்குள் பயம் வந்து இருந்தது.

ரத்த வாந்தி எடுக்க வேண்டும் என்றால் என்ன காரணமாக இருக்கும்? வேகமாக சிந்தனை சுழன்றது. அவனுக்கு அறிமுகம் ஆன திரைக்கதைகளின் அடிப்படையில் பார்த்தால், அது புற்று நோயாக இருப்பதற்கு வாய்ப்பு அதிகம். அதை இவளிடம் எப்படிச் சொல்வது?

தந்தை மீது அதிகப் பிரியம் வைத்து இருப்பவள். தாய் இல்லாத குறையை அவள் உணராத வகையில் அன்புடன் வளர்த்து இருப்பவர். அவருக்கு ஒன்று என்றால் துடித்துப் போய் விடுவாள். அவரும் அப்படியே! இவள் தாங்குவாளா?

* * *

மருத்துவமனைக்கு சென்று சேர ஆன அரை மணி நேரம் முழுவதுமே, திவ்யா அவனைக் கேள்விக் கணைகளால் துளைத்து எடுத்தபோதும், அவன் பிடி கொடுக்கவில்லை. அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று சேர்ந்தபோது, அவர் படுக்கையில் அமர்ந்து இருந்தார். தெளிவாக இருந்தார். கண்களில் சற்றே பயம் இருந்த போதும், அவர் அதை மகளிடம் வெளிக்காட்டவில்லை.

''என்னப்பா ஆச்சு? உங்க பள்ளியில் இருந்து உங்களுக்கு உடம்பு சரி இல்லை என்று போன் வந்ததும் நான் பயந்து போய் விட்டேன்'' என்று பதட்டத்துடன் ஓடி வந்து அவர் கன்னம் வருடி விசாரித்த மகளை அணைத்துக் கொண்டார்.

''ஹேய், பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. நைட் சாப்பிட்டது ஏதோ ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் சும்மா வாந்தி வந்து இருக்கும். நேற்று நீ காலேஜில் படித்து வந்து செய்தாயே நாப்தா அது தான் காரணமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.''

''அப்பா, வம்பு பண்ணாதீங்க...''

''நான் வம்பு பண்ணவில்லை... உண்மையை தான் சொல்கிறேன். நாப்தா சாப்பிட்டால் வயிற்றுக்குள்...''

''அது நாப்தா இல்லை. நாப்தா யூரியா தயாரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு ரசாயனம். நேற்று நீங்க சாப்பிட்டது கோப்தா...''

''ஏதோ ஒரு கழுதை. ஆனால் நேற்று சாப்பிட்டு விட்டு இன்று நான் மருத்துவமனையில் படுத்து இருப்பதைப் பார்த்தால் ரெண்டும் ஒண்ணு தான் போல இருக்கு'' என்று கண்களை சிமிட்டி கேலியாகச் சொல்ல முதல் சில நிமிடங்கள் அவரது கேலியில் மனம் லயிக்கவில்லை என்றாலும் சில நிமிடங்களில் அவளின் பதட்டம் குறைந்து விட்டது.

''என்ன செய்வது? பிறந்த இரண்டு வயதில் இருந்து நீங்க சமைப்பதைச் சாப்பிட்டு வளர்ந்த எனக்கு என்ன சமையல் தெரியுமோ, அதைத் தானே

செய்து கொடுக்க முடியும்? முன் ஏர் செல்லும் வழி நானும் தொடர்கிறேன். எல்லாம் உங்க கைங்கரியம் தான்'' என்று பதிலுக்கு கேலி பேசிச் சிரிக்க ஆரம்பித்த வேளையில் மருத்துவரைச் சந்திக்கச் சென்று இருந்த பிரபாகர் உள்ளே வந்தான்.

இருவரின் சிரித்த முகம் அவனுக்கு நிறைவைக் கொடுத்தாலும், மருத்துவரின் வார்த்தைகள் அடி மனத்தில் கலவரத்தை ஏற்படுத்தி இருந்தது.

''டாக்டர் என்ன சொன்னாங்க? எப்ப டிஸ்சார்ஜ் பண்ணப் போறாங்க?'' என்று மருத்துவரைப் பார்த்துப் பேசிவிட்டு அறைக்குள் வந்த பிரபாகரைப் பார்த்து கேட்டாள்.

''எல்லாம் நார்மலா தான் இருக்காம். நாளைக்கே டிஸ்சார்ஜ் பண்ணி விடுவாங்க என்று நினைக்கிறேன். பயப்பட வேண்டிய தேவை இல்லை.''

''இதென்ன புதுக் கதையா இருக்கு? அப்புறம் எதுக்குப்பா உங்க பள்ளிக்கூட ஸ்டாஃப் எங்களை டென்ஷன் ஆக்கி விட்டார்?''

''அவர் புது ஆள் என்று நினைக்கிறேன். அதான் பதறி விட்டார்'' என்று மகளுக்கு சமாதானம் சொன்னார்.

''நல்லா தான் அவரும் டென்ஷன் ஆகி எங்களையும் கலக்கி விட்டார் போங்க'' என்று அப்பாவிடம் சிரித்து விட்டுப் பிரபாகரிடம் திரும்பினாள்.

''மணி நாலு ஆகி விட்டதே, அப்பாவுக்கு ஸ்ட்ராங்கா பில்டர் காப்பி வேண்டுமே? பிரபா, காப்பி வாங்கிட்டு வரீங்களா?''

''எனக்கு தலை வலிக்குது திவ்யா, நீங்க போய் கொஞ்சம் எனக்கும் சேர்த்து காப்பி வாங்கிட்டு வருகிறாயா ப்ளீஸ்?''

''ஹேய் சோம்பேறி, நீ எனக்கு செய்வாய் என்று பார்த்தால், என்னை வேலை வாங்குகிறாயா?''

''ப்ளீஸ் திவ்யா... என் செல்லம் இல்லை...''

''இல்லை...'' என்று அவள் மறுப்பாகச் சொல் லும்போதே, சுப்ரமணியன் இடையிட்டார்.

''திவ்யா, எனக்கு காப்பி வேண்டும். ப்ளீஸ் வாங்கி வருகிறாயா?''

''சரிப்பா, வாங்கி வருகிறேன். ஆனால் இவனுக்கு நீங்க கொடுக்கக் கூடாது.''

''சரி நீ மாமாவுக்கு மட்டும் வாங்கிட்டு வா, எனக்கு வேண்டாம்'' என்று உடனடியாக பிரபாகரும் ஒத்துக் கொள்ள, அவள் அவனுக்கு அழகு காட்டி விட்டுக் கிளம்பினாள். அவள் கண் பார்வையில் இருந்து மறைந்ததும் அவன் புறம் திரும்பினார் சுப்ரமணியன்.

''என்ன பிரபா, என்னிடம் அவளுக்குத் தெரி யாமல் ஏதோ பேச வேண்டும் போல இருக்கே?''

''ஆமா மாமா, ஆனால் அது உங்களுக்கு எப்படி தெரியும்?''

''இதென்ன உங்க ஊர் சிதம்பர ரகசியமா? உன் மூஞ்சியே சொல்லுதே. என்னுடைய உடல்நிலை எனக்குத் தெரியும். எனக்கு எடுத்த பரிசோதனை களின் பட்டியல் தெரியும். நீ எனக்கு ஒன்றும் இல்லை என்று சொன்ன விதம் இருக்கு. நாளைக்கே

நான் டிஸ்சார்ஜ் ஆக வாய்ப்பு இல்லை என்று தெரியும். இத்தனைக்கும் மேலே, நீ திவ்யாவை கடைக்கு அனுப்பி விட்டு நீ சும்மா உட்கார்ந்து இருக்க மாட்டாய் என்று தெரியும்...''

''சிதம்பரத்தில் ரகசியம் எதுவுமே இல்லை என்பது தான் உண்மை. எதுவும் நிரந்தரம் இல்லை என்பதே அது சொல்லும் ரகசியம். அதை விடுங்க. நான் உங்களிடம் தனியாகப் பேச வேண்டும். நீங்க பள்ளி யில் ரத்த வாந்தி எடுத்ததாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் நீங்க அதை புட் பாய்சனிங் மாதிரி மாற்றி விட்டீர்களே? அது ஏன்?''

''அது திவ்யாவுக்குத் தெரிய வேண்டாம் என்று தான் அதைச் சொல்லவில்லை. அவள் அதை தாங்க மாட்டாள். நீயும் சொல்லி விடாதே.''

''ஆனால் ஏன் அங்கிள்?''

''இது எனக்கு மூன்று மாசம் முன்னாடியே தெரியும். எனக்கு தொண்டையில் புற்று நோய் இருக்கு. அதுக்கு மருந்து மாத்திரை சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன். இந்த விஷயம் பொண்ணுக்குத் தெரி யாமல் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். இப்ப பள்ளி யில் இருந்து திவ்யாவுக்கு போன் பண்ணி விட் டார்கள் என்றதும் பதறிப் போனேன். ஆனால் அந்த பதட்டம் அடுத்த நிமிஷமே மறைந்து விட்டது. போனில் பேசியது நீதான் என்று தெரிந்ததும் நிம்மதி ஆகி விட்டது. இது தான் கடவுள் சங்கல்பம் என்று நினைக்கறேன். இது இனிமேலும் திவ்யாவுக்கு

தெரிய வேண்டாம். அது உன் கையில் தான் இருக்கு...''

''மாமா... ஆனால்...''

''நீ அவளை நல்ல படியாகப் பார்த்துக் கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. அவளுக்கும் உன்னைப் பிடித்து இருக்கு. அதனால் அவளோ மனசு வருத்தப்படும் எந்த விஷயமும் அவளிடம் சொல்ல வேண்டாம் என்று நினைக்கிறேன். எனக்கு உதவி செய்வாயா?''

''அதுதான் உங்க விருப்பம் என்றால், நிச்சயம் செய்கிறேன்.''

''தாங்க்ஸ் பிரபா...''

''மாமா உங்க கோரிக்கை நிறைவேறிய உடனே மாப்பிள்ளை பிரபா ஆகி விட்டதா?''

''உறவு முறைகளை விட உனக்கும் எனக்கும் இடையே இருக்கும் நட்பு பிரபா தான் நிரந்தரமா இருக்கணும் என்று நான் நினைக்கிறேன்...''

''நிச்சயமா மாமா. நாம் உறவு முறை எனக்கும் உங்க பெண்ணுக்கும் இடையே நடக்கப் போகும் திருமணத்தால் வருவது இல்லை. அதையும் தாண்டி இருப்பது. அந்த விதத்தில் நான் உங்களுக்கு நிறைய கடமைப்பட்டு இருக்கிறேன். எங்க அம்மாவின் மனசை மாற்றிய பெருமை உங்களுக்கு தானே?''

''அது உன் திறமையின் மீது வைத்த நம்பிக்கை தான்...''

''அந்த நம்பிக்கை தந்த ஊக்கத்தில் தான் இன்னும் விடாமல் முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன்...''

''ஆமா, இன்று கூட நீ ஏதோ டெஸ்ட் தானே போனாய்? அது என்ன ஆச்சு?''

''ப்ச்! இன்று செட் ஆகவில்லை...'' என்று வருத்தத்துடன் சொல்லிக் கொண்டு இருக்கும் போது அவள் உள்ளே வந்தாள்.

''அப்பா, மீண்டும் அதை ஆரம்பிக்காதீங்க. அப்புறம் பிரபாகர் பேசும் கோப வார்த்தைகளை, திரை உலகத்தைச் சாடும் வார்த்தைகளை காது கொண்டு கேட்க முடியாது. வேண்டுமானால் நான் ஏற்கனவே காப்பி தர மாட்டேன் என்று சொன்னதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். காப்பியை கொடுத்து அவர் வாயை அடைங்க...'' என்று வேகமாகச் சொல்ல இருவரும் மெலிதாக புன்னகை செய்தனர்.

8

படுக்கையில் இருந்து கண் விழித்ததும் ஜன்னல் திரையை ஒதுக்கி விட்டாள் திவ்யா. அப்பா தோட்டத்தில் உள்ள செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டு இருந்தார். ஜன்னல் திரையைத் தாண்டி கண்ணில் பட்ட காட்சி வழக்கம் போல அவள் மனத்தில் ஒரே நேரத்தில் நெகிழ்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியது.

இந்த ஒரு ஆண்டுக்குள் மூன்று முறை உடல் நிலை சரி இல்லாமல் போனதால் மருத்துவமனையில் சேர்க்க வேண்டியதாகி விட்டது. மூன்றாவது முறையாக மருத்துவமனையில் இருந்து வந்து சில நாட்கள் ஆவதற்குள் அப்பா தோட்டத்துக்கு சென்று விட்டார்.

வேண்டாம் என்று எத்தனை தடவை சொன்னாலும் கேட்பதில்லை.

தாய் இல்லாத தன்னை, இருபது ஆண்டுகளாக தனியாக வளர்த்துக் கொண்டு இருப்பவர். இத்தனை ஆண்டுகளாகத் தொடர்ந்து, வீட்டு வேலை, ஆசிரிய பணி, தன்னைப் பராமரிக்கும் பணி, இவற்றை எல்லாம் சிறப்பாகச் செயல்படுத்தி விட்டு, அதையும் தாண்டி தனக்கு கிடைக்கும் கொஞ்ச நேரத்தில் டி.வி., சினிமா, என்று பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் நேரத்தைச் செலவழிக்காமல் பூமி தாய்க்கு தன்னால் இயன்ற சேவையைச் செய்து வரும் தந்தையை நினைத்து ஒரு பக்கம் பெருமையாக இருந்தாலும் மறுபடியும் கவலை தோன்றியது.

''இங்கே என்னப்பா செய்றீங்க?''

''உனக்கு மூச்சு விட சுத்தமான காற்று வேண்டும் இல்லையா? அதற்காக மரங்களை பராமரிக்கிறேன். பார்த்தால் தெரியவில்லை.''

''ப்ச்! இப்ப நான் மூச்சு விட்டுட்டு தானே இருக்கேன்'' என்று கேட்க அவர் அன்புடன் அவள் தலையைக் கோதி விட்டார்.

''அதில்லை திவ்யா, மரங்கள் தான் மண் வளத்தைக் காக்கும். சுத்தமான காற்றைத் தரும். மழை மூலம் குடிக்க நல்ல தண்ணீர் தரும். இதைப் பற்றிய கவலை கொஞ்சமும் இல்லாமல் மனிதனின் பல தேவைகளுக்கு மரங்களை வெட்டித் தள்ளு கிறோம். நம்மால் முடிந்த வரை இந்த பூமித் தாய்க்கு

மரங்களைப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று இந்த வேலை செய்கிறேன்.''

''அது புரியுது. ம்ம், நல்ல நோக்கம் தான். ஆனால் உங்களின் உடல்நிலையையும் கொஞ்சம் கவனத் தில் வைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். சரி, இப்ப என்ன மரம் வைக்கப் போறீங்க?''

''வேப்ப மரம் வைக்கப் போகிறேன்'' என்ற அவரின் வார்த்தை முடிவதற்கு முன்னே, இன்னொரு குரல் ஒலித்தது. பக்கத்து வீட்டு பத்மநாபன்.

''நானும் எத்தனை வாட்டி சொல்லி விட்டேன் தெரியுமா? பலன் கிடைப்பது மாதிரி, ஒரு மா, கொய்யா, எலுமிச்சை என்று பலன் தரும் பழ மரங்கள் நடலாம். அதுவும் இல்லை என்றால் பத்தடி இடைவெளியில் வரிசையா தென்னை மரம் நடலாம். நாலு பேருக்கு பலன் கிடைக்கும் என்று சொன்னால் காதில் வாங்கினால் தானே? உங்களுக்கு அதில் கிடைக்கும் பலன் வேண்டாம் என்றால் நாங்க எடுத்துக் கொள்கிறோம். அதற்குக் கூட உங்க அப்பாவுக்கு மனம் வரவில்லை பாரேன்'' என்று சொல்ல சின்னக் கோபத்துடன் திரும்பினார் சுப்ரமணியன்.

''சாருக்கு எத்தனை பிள்ளைகள்?'' என்று கிண்ட லாக விசாரித்தார்.

''பையன் ஒண்ணு பொண்ணு ஒண்ணு...''

''ரொம்ப சந்தோஷம், எங்கே இருக்காங்க.''

''பையனைப் படிக்க வச்சு அமெரிக்காவுக்கு அனுப்பி விட்டேன். பையனை படிக்க வைக்கவும்

வெளிநாடு அனுப்பவும் நிறைய பணம் செலவாகி விட்டது. சொத்துக்கள் எல்லாம் காலி. பெண்ணை பக்கத்தில் கட்டி கொடுத்து இருக்கிறேன்.''

''எப்படி இருக்காங்க?''

''பையன் அமெரிக்காவில் செட்டில் ஆகி விட்டான். மருமகள் தெலுங்கு காரி. அங்கேயே கூட வேலை செய்யும் பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் கட்டிக் கொண்டான். ஒரு பையன் இருக்கானாம். சொல்ல கேள்வி. இன்னும் கண்ணால் பார்க்கக் கூட இல்லை...''

''பொண்ணு...?''

''மகள் நன்றாக இருக்கிறாள். மனைவியை இழந்த பிறகு மகள் குடும்பம் தான் ஆதரவா இருக்கு. அங்கே அப்பப்போ போய் பேரன் பேத்தியா பார்த்துப் பேசி விட்டு வருகிறேன். மனசுக்கு நிறைவா இருக்கு.''

''இந்த சந்தோஷமும் மன நிறைவும் தான் தென்னை மரத்துக்கும் வேப்ப மரத்திற்கும் இருக்கும் வித்தியாசம்...'' என்று சொல்ல அவர் விழித்தார்.

''என்ன புரியலையா? தென்னையை வைத்தால், பணம் காய்ச்சி மரம். நல்ல பலன் கிடைக்கும். நிறைய பணம் சம்பாதிக்கும். உங்க பையனைப் போல. ஆனால் அதன் நிழலில் நீங்க நிற்க முடியாது. அதன் நிழலைப் பார்க்க முடியாது. ஆனால் வாழும்போது பலன் தராத மாதிரி தெரியும் வேப்ப மரம் உண்மையில் உங்க மகள் போல. ஒரு தாயைப் போல அரவணைக்கும். நிழல் கொடுத்து நல்ல காற்றினைத் தரும். தன் கிளையில் உள்ள இலைகள் மூலம் இந்த பூமியைக் குளிர வைக்கும். உங்க மகளைப் போல'' என்று சொன்னதும் அவர் திகைத்து நின்றார்.

''அது மட்டுமில்லை, வேப்பமரக் காற்றில் கிருமிகள் அழிந்து விடும். அந்தக் காலத்தில் அம்மை போட்டவர் வீட்டு வாசலில் வேப்ப இலையைக் கட்டி வைத்து இருந்தது எல்லாம் இதன் அடிப்படையில் தான். இதெல்லாம் நீங்க சொல்லி தான் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இப்ப நிலைமை தலை கீழா இருக்கு. நாங்க சொல்லி நீங்க தெரிந்து கொள்ளும் நிலை. காசு காசு என்று எல்லாரும் அதன் பின்னால் போக ஆரம்பித்து விட்டதன் பலன் இதுதான்'' என்று அவர் பொரிந்த போது வேகமாக அருகே வந்து அவரை அணைத்துக் கொண்டாள் திவ்யா.

''அப்பா, ப்ளீஸ், அங்கிள் பாவம். அவரை விட்டுட்டுங்க. எதுக்கு இவ்வளவு கோபம்? இன்னிக்கு நான் காலேஜ் முடிக்கப் போகிறேன். சந்தோஷமான நாள். கண்டதையும் பேசி குழப்பிக் கொள்ளாதீங்கப்பா ப்ளீஸ்...'' என்று சொல்ல, புன்னகை செய்தார்.

''ஆமா, என் பொண்ணு இன்று படிப்பை முடித்து, பட்டம் பெறுகிறாள். அதான், நீயும் குளித்து விட்டு வா. கோவிலுக்குப் போகலாம்'' என்று சொல்ல அவரின் புன்னகை அவளையும் தொற்றிக் கொண்டது.

''அஞ்சே நிமிஷம் பா, இதோ வந்து விடுகிறேன்...''

''அஞ்சு நிமிஷமா இல்லை ஐம்பது நிமிஷமா என்பதை நீ வந்த பிறகு நான் முடிவு பண்ணிக்

கொள்கிறேன்'' என்று கிண்டல் பண்ண அவள் சிணுங்கினாள்.

''அப்பா, ஒன்பது மணிக்கு நான் காலேஜில் இருக்க வேண்டும். அதனால் ஐம்பது நிமிஷம் ஆக வாய்ப்பே இல்லை. தெரிஞ்சுக்கோங்க...'' என்று சவால் விட்டுச் சென்றவள் அடுத்த பதினைந்து நிமிடத்தில் அழகு தேவதையாக வந்து நின்றாள். புதிய ஆடை அணிந்து வந்த மகளைப் பார்த்துக் கண்களை விரித்தார்.

''இது என்ன புது ட்ரெஸா? ஏது? எனக்குத் தெரியாமல் எப்ப வாங்கினாய்?''

''உங்களுக்குத் தெரியாமல் ட்ரெஸ் வாங்க நான் சம்பாதிக்கிறேனா என்ன? இது நான் வாங்கவில்லை. யார் வாங்கித் தந்தாங்க என்று கண்டு பிடிக்கத் துப்பறியும் சிங்கம் வர வேண்டுமா?'' என்று கேட்டவளின் முகத்தில் மலர்ச்சியும் நாண சிவப்பும் வர்ண ஜாலம் புரிந்தது.

''அட! இங்கே பாருடா, என் பொண்ணு வெட்கப் படுகிறாள். இது பிரபாகர் எடுத்துக் கொடுத்த தாக்கும்?'' என்று விசாரிக்க அவளின் புன்னகையே அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னது.

''ஆமாப்பா, இன்று காலேஜுக்கு இந்த ட்ரெஸ் தான் போட வேண்டும் என்று சொல்லி நைட் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனார். நல்லா இருக்கா அப்பா?''

''சூப்பரா இருக்கும்மா, சும்மா சொல்லக்கூடாது, அவனுக்கு இந்த ஆடை தேர்வு கை வந்த கலை

தான். ஆனால் கூடவே குழலி சம்பாத்தியத்தில் இல்லாமல் தன் சொந்த காசில் வாங்கிக் கொடுத்து இருந்தால், இதை விட கம்மி விலையில் வாங்கிக் கொடுத்து இருந்தால் கூட ரொம்ப சந்தோஷமாக இருந்து இருக்கும்'' என்று சொல்ல அவள் முகத்தை சுளுக்கினாள்.

''போதும்பா, மறுபடியும் ஆரம்பித்து விட்டீர்களா? சினிமா துறை மாதிரி போட்டி நிறைந்த துறையில் ஜெயிப்பது எவ்வளவு சிரமம் என்று உங்களுக்குத் தெரியாதா? அவருக்கும் சாதிக்க ஒரு நேரம் வரும். அப்ப எனக்கு இல்லாமல் வேறே யாருக்கு வாங்கிக் கொடுக்கப் போகிறார்?''

''அதுக்கு இல்லைம்மா, அவனும் ரொம்ப நாளாக...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க அவள் வேகமாக பேச்சை மாற்ற முயன்றாள்.

''அப்பா ப்ளீஸ், நான் இன்று நல்ல மன நிலையில் கல்லூரிக்கு செல்ல வேண்டும். இந்த விவாதம் இப்போது வேண்டாம். நேற்று நான் ஸ்பெஷல் ஸ்வீட் பண்ணி வைத்தேனே? அதில் அத்தைக்கு கொடுக்க கொஞ்சமாவது மிச்சம் இருக்கா? இல்லை நீங்க உங்க மழலையர் பட்டாளத்திற்கு எடுத்து வைத்து விட் டீர்களா?''

''திவி, நீ பேச்சை மாற்றுகிறாய் என்பது புரியாமல் இல்லை. ஆனாலும் நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன். நீ எனக்கு ஒரே பெண். நான் உன்னை என் உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன். உன்

நலத்திற்காக, நல்ல வாழ்க்கைக்காகவே வாழ் கிறேன்...''

''அப்பா, இதெல்லாம் எனக்குத் தெரியாதா?''

''உனக்குத் தெரியாது என்பதற்காக நான் சொல்ல வில்லை. என்னுடைய சிந்தனை உன்னுடைய எதிர்காலத்தைச் சுற்றியே அமைந்து இருக்கின்றது. அது உனக்கும் தெரியும். நீயும் ஹோட்டல் மேனேஜ் மெண்ட் பட்டப் படிப்பை முடித்து விட்டாய். கல்லூரியிலேயே ஒரு நான்கு நட்சத்திர அந்தஸ்து உள்ள ஹோட்டலில் வேலையும் கிடைத்து விட்டது.

அடுத்து உனக்கு ஒரு கல்யாணம் பண்ண வேண் டும் என்பது என் நோக்கம். அதில் என்ன தப்பு?''

''அதை நான் தப்பு சொல்லவில்லையே அப்பா. நான் பழசு எதையும் மறக்கவில்லை. நீங்க தான் மறந்து விட்ட மாதிரி பேசுகிறீர்கள். அவரை இரண்டு ஆண்டுகள் தொந்தரவு பண்ண மாட்டேன் என்று போன மாதம் தான் அம்மாவின் நினைவு நாள் அன்று அவரின் போட்டோ முன்னால் எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்தீர்கள். அதை மறந்து விட்டீர்களா?'' என்று மென்மையான குரலில் திவ்யா சொல்ல சுப்ர மணியம் இரண்டு கைகளையும் உயர்த்தி பெருமூச்சு விட்டார்.

''சாரி திவ்யா மறந்து விட்டேன். அவ்வப்போது மகளின் எதிர்கால வாழ்க்கை மீது இருக்கும் அக்கறை, மேலெழும்பி, கொடுத்த வாக்கை மறக்கடித்து விடு கிறது. ஒற்றை தகப்பனாய், தாய் இன்றி உன்னை

வளர்த்து விட்டேனே. அது தான் காரணம்'' என்று பெருமூச்சுடன் சொல்ல அவரை நெருங்கி அவரின் தோளில் சாய்ந்து கொண்டாள் திவ்யா.

அவரின் பாவனையும், அம்மா மீது வைத்து இருக்கும் மரியாதையும், அவர் மீது ஆணையிட்டு தனக்கு அளித்த வார்த்தைக்கு அவர் கொடுக்கும் மதிப்பும் அவளை உருக வைத்தது.

''உங்களுக்கு அம்மா என்றால் ரொம்பப் பிடிக்குமா அப்பா?'' என்று பின்னால் இருந்து அவரின் கழுத்தை கட்டி, முன்புறம் கழுத்தை வளைத்துக் கொண்டு கேட்க அவர் புன்னகை செய்தார்.

''எல்லாருக்கும் தான் அவங்கவங்க மனைவியைப் பிடிக்கும். இதில் தனியாக என்னிடம் என்ன கேள்வி கேட்கிறாய் திவி?''

''இல்லைப்பா, சராசரி ஆணுக்கு அவங்க மனை வியைப் பிடிக்கும் அளவைத் தாண்டி உங்களுக்கு அதிகமா பிடிக்கும் என்று நினைக்கிறேன். என் னுடைய நினைப்பு சரியா என்று கேட்கிறேன்'' என்று இம்முறை பின்னால் இருந்து அவர் முன்னால் வந்து நின்று கண்களை நேருக்கு நேர் பார்த்து, அழுத்த மான பாவனையுடன் கேட்க அவர் சிரித்தார்.

''அன்பு என்பதை உணர தான் முடியும், படியில் கொட்டி அளக்க முடியாது திவி.''

''ம்ம், நீங்க சொல்வது சரி தான் அப்பா. ஆனால் அம்மா இறந்து இத்தனை வருடங்கள் கழித்தும், அவர்களை நீங்க நினைவு வைத்து இருப்பது ரொம்ப

அபூர்வம் அப்பா. அவங்க உங்க மேலே வைத்து இருந்த அன்பை விட நீங்க அவங்க மேலே ரொம்ப அன்பு வைத்து இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். உங்களை மாதிரி ஒருத்தரை கணவனாக அடைய அவங்க ரொம்ப கொடுத்து வைத்து இருக்கணும்.''

''அன்பு ஒரு உணர்வு. அதை தராசில் வைத்து எடை போட்டு என்னுடையது கூடுதலா உன்னுடையது கூடுதலா என்று பட்டிமன்றம் நடத்த முடியாது திவ்யா.''

''மம்ம், நீங்க சொல்வதைக் கேட்கும்போது, ஒரு சினிமாவில் சூர்யா ஜோதிகா பாடும் பாட்டு போல இருக்குப்பா.''

''என்ன பாட்டு?''

''ஐ! அப்பாவுக்கும் சினிமா மீது ஆர்வம் வந்து விட்டது?''

''ஏன்மா? பிரபா சினிமாவில் நடிக்க இவ்வளவு ஆர்வமாக இருக்கும்போது நான் மட்டும் சினிமாவுக்கு எதிரா இருக்க முடியுமா? நீ ஏதோ பாட்டு என்று சொன்னாயே? என்ன பாட்டு?''

''சொல்றேன்பா, சுடிதார் அணிந்து வந்த சொர்க்கமே என்று ஆரம்பிக்கும் பாடல். கேட்டு இருக்கீங்களா?''

''ம்ம்ம், நீ வசனம் போலப் பேசுவதைக் கேட்டால் கேட்ட மாதிரி நினைவு இல்லை'' என்று கண் சிமிட்ட அவள் பொய்க் கோபம் காட்டினாள்.

''அப்பா...'' என்று ஒற்றை விரல் காட்டி மிரட்டி விட்டுப் பேச்சினைத் தொடர்ந்தாள்.

'அந்த பாட்டில் உன் மேல் நான் கொண்ட காதல், என் மேல் நீ கொண்ட காதல், எதை நீ உயர்வாக சொல்வாயோ? நம் மேல் நாம் கொண்ட காதல் அதை நீ இரண்டாக பார்ப்பாயா?'' என்று ஒரு வரி வரும். அந்த பாடல் வரிகள் தான்பா உங்க பதிலை கேட்டதும் நினைவுக்கு வந்தது. அப்படியே உங்க வாழ்க்கைக்கு பொருந்தும் போல் இருக்கு'' என்று சொல்ல அவர் சந்தோஷமாக தலை அசைத்தார்.

''உண்மையான வரிகள் திவ்யா, ரொம்ப அருமையாக இருக்கு.''

''அந்த பாட்டை விடுங்கப்பா. அது சினிமா. ஆனால் உங்க வாழ்க்கை அதை விட அழகா இருக்கே? அம்மா கூட நீங்க எவ்வளவு நாள் வாழ்ந்தீங்க? இரண்டு வருஷம் இருக்குமா இவ்வளவு அழுத்தமான ஆழமான அன்பாக இருக்கே? எப்படிப்பா?''

''எப்படி என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? அது அப்படி தான்...''

''அம்மாவும் நீங்களும் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை எவ்வளவு நாள் இருக்கும்?''

''இரண்டு ஆண்டுளுக்கு இருபது நாட்கள் கம்மி'' என்று சொல்ல அவளின் விழிகளில் ஆச்சரியமும் கனிவும் கலந்து வர, அவரை நெருங்கி அணைத்து கொண்டாள்.

''அம்மா எப்படிப்பா இறந்தாங்க? இதுவரை யாருமே என்னிடம் சொன்னது இல்லை.''

''நீ சின்னக் குழந்தை பயந்து விடுவாய் என்று தாத்தா பாட்டி சொல்லாமல் இருந்து இருக்கலாம்...''

''இப்ப நான் வளர்ந்து விட்டேன் இல்லையா? இன்னும் என்ன தயக்கம்?''

''தயக்கம் எதுவும் இல்லை. அதைப் பற்றி பேச்சு இதுவரை நம்மிடையே எழவில்லை. அவ்வளவு தான்...''

''இப்போது எழுந்து விட்டதே, சொல்லலாமே?''

''சொல்லலாமே?'' என்று உடனடியாக ஒப்பு கொண்டவரால் உடனே பேச முடியவில்லை. சில கணங்கள் நீண்ட அமைதியை கலைத்து பேச ஆரம்பித்தார்.

9

''அம்மா எப்படி இறந்தாங்க'' என்ற திவ்யாவின் கேள்விக்கு, சொல்கிறேன் என்று சொல்லிவிட்டாலும், அந்த சம்பவத்தை உடனடியாக விவரிக்க சுப்ரமணியனால் முடியவில்லை.

''மே மாசத்தில், விடுமுறை நாளில் தாத்தா ஊருக்கு சென்று இருந்த பயணத்தில் தான் அந்த விபத்து நிகழ்ந்தது'' என்று ஆரம்பித்தவரின் சிந்தனை பழைய நாட்களுக்கு சென்றது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அவள் ஒரு வயது குழந்தையாக இருந்த அந்த நாளின் நினைவுகளை மீண்டும் மனம் அசை போட்டது.

''உங்க அம்மாவின் மரணம் எப்படி நிகழ்ந்தது தெரியுமா?''

''இடி தாக்கி என்று கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் மழைக்காலம் இல்லாத நேரத்தில் எப்படி இடி தாக்கி மரணம் நிகழ்ந்தது? ஆச்சரியமா இருக்கே?''

''இடி தாக்கி மரணம் என்பது பெரும்பாலும் கோடை காலங்களில் தான் அதிகம் ஏற்படும். வழக்கமாக நிற்கிற, நடக்கிற மனிதனை இடி தாக்குகிற போது, உச்சி வழியாக உடலுக்குள் மின்சாரம் நுழைந்து, ஒரு நொடிக்குள் இதயத்தை நிறுத்தி விட்டு கால் பாதம் வழியாக மண்ணுக்குள் ஊடுருவிவிடும். உடல் கருகி விடும் என்று சொல்லக் கேள்வி பட்டு இருக்கிறேன். ஆனால் உங்க அம்மாவின் உடல் அப்டியே இருந்தது. எந்த மாற்றமும் இல்லை. அதிக மின் அழுத்தம் பாய்ந்ததால் இதயம் உடனடியாக நின்று இருக்க வேண்டும். இடியின் பாதிப்பு பற்றிய பல விஷயங்கள் அவளின் மரணம் நிகழ்ந்த பிறகு படித்து தெரிந்து கொண்டேன். முன்பே தெரிந்து இருந்தால் அவளின் மரணம் நிகழாமல் தடுத்து நிறுத்தி இருக்கலாம்'' என்று சொல்லும் போதே அவர் குரல் தடுமாறியது.

''அம்மாவின் மரணம் விபத்து தானே அப்பா? நீங்க தான் அதற்கு காரணம் என்ற ரீதியில் ஏன் பேசுகிறீர்கள்?''

''படித்தவர்களுக்கு கூட இடியின் தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ள தெரிவதில்லை திவ்யா. இதை ஏன் சொல்கிறேன் என்றால், துணி நனைகிறதே என்று அவசரமாக எடுக்க சென்ற உங்க அம்மா இடி தாக்கி இறந்து போனாள். துணி

நனைந்தால் என்ன? மறுநாள் மீண்டும் வெயிலில் போட்டால் காய்ந்து விடும். ஆனால் உயிர் போனால் மீண்டும் வருமா? துணி காயப்போட பயன்படுத்திய இரும்பு கம்பி தான் அவளுக்கு எமனாக மாறி விட்டது. அதை நானும் தடுத்து நிறுத்தவில்லை. அதான் எனக்கு வருத்தம்.''

''என்னப்பா இது? இத்தனை வருடம் கழித்து சின்னக் குழந்தை மாதிறி பேசறீங்க? மனிதனின் ஜனனமும் மரணமும் நம் கையிலா இருக்கிறது?''

''இல்லை தான். ஆனால் மின்னலின் தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ளும் வழிகள் இன்றளவும் கூட படித்தவர்களுக்கு கூட தெரிவதில்லை. மின்னலைத் தடுக்க முடியாது. ஆனால் அதன் தாக்குதலிலிருந்து தப்பிக்க சில முன்னெச்சரிக்கைகளை கடைப்பிடிக்கலாமே?''

''அப்பா, நேற்று எங்க பேராசிரியர் ஒருவர் சொன்ன வாசகம் எனக்கு ரொம்ப பிடித்து இருந்தது. அதை இந்த நேரம் கட்டாயம் உங்களுக்கு சொல்ல வேண்டும்'' என்று கண்டிப்பான குரலில் சொல்ல அவர் பழைய நினைவுகளின் தாக்கத்தில் இருந்து மீண்டு, அவளைத் திரும்பி பார்த்தார்.

''கடந்த காலம் என்பது உடைந்த பானை. எதிர் காலம் என்பது மதில் மேல் பூனை. நிகழ்காலமே கையில் இருக்கும் வீணை. அதை மீட்ட வேண்டும் ரசிக்க வேண்டும் என்று சொன்னார். பழைய நினைவுகளில் மூழ்கி, அல்லது எதிர்கால கனவுகளில் மூழ்கி,

நிகழ்காலத்தில் நடக்க கூடிய நல்ல விஷயங்களை கோட்டை விட்டு விடக் கூடாது என்று அர்த்தம். சூப்பரா இருக்கு இல்லை?''

''நல்லாவே இல்லை...''

''அப்பா, நேர்மையான அபிப்பிராயம் சொல்ல வேண்டும்.''

''சரி, அந்த வாசகம் சொல்லும் செய்தி நன்றாக தான் இருக்கிறது. ஆசிரியருக்கே பாடம் சொல்லும் மாணவி என் மகள். ஆனால் அவளுக்கு நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்க கூட பொறுமை இல்லை.''

''ஆசிரியர் மாணவி எல்லாம் அப்புறம். அப்பனுக்கு பாடம் சொன்ன சுப்ரமணியன் பொண்ணு நான். எனக்கு பொறுமை இருக்கு. அது மட்டும் இல்லை. நீங்க என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதை புரிந்து கொள்ளும் தீர்க்கமான அறிவும் கூட இருக்கு. இடி மின்னல் சமயத்தில் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக் கூடாது என்று எனக்கு நன்றாகவே தெரியும். இடியுடன் மழை பெய்வது போல் இருந்தால் வீட்டை விட்டு வெளியே போவதை தள்ளி போடலாம். இடி, மின்னல் வேளைகளில் உயரமான மரங்கள், மின்கம்பங்கள், செல்போன் டவர்கள் மற்றும் உலோகக் கம்பிகளின் அருகில் நிற்பதை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். மின்னல் வெட்டும் நேரத்தில் டி.வி, மடி கணினி போன்ற மின்சாதனங்களைப் பயன்படுத்துவதும் தொலைப்பேசி, செல்போன் போன்றவற்றைப்

பயன்படுத்துவதும் ஆபத்தை விளைவிக்கும். போதுமா? இன்னும் கொஞ்சம் விலாவாரியா சொல்லணுமா?''

''உனக்கு மட்டும் இந்த விஷயங்கள் தெரிந்தால் போதாது. இதை உன்னைச் சுற்றி இருப்பவருக்கும் சொல்லித் தர வேண்டும். அது போகட்டும். இன்று கல்லூரியில் உனக்கு பட்டமளிப்பு விழா இருக்கிறது. அதை சுத்தமாக மறந்து விட்டாய் போல இருக்கு. கோவிலுக்கு போக நேரம் இருக்குமா?''

''அப்பா, மாதா பிதா குரு தெய்வம் என்று சொல்வதில்லையா? அந்த மூன்று பதவிகளையும் நீங்க ஒருத்தரே வகிக்கும் போது உங்களை விட இன்னொரு தெய்வம் எனக்குத் தேவையா என்ன? அதனால் உங்க காலில் விழுந்து நான் ஆசி வாங்கிக் கொள்கிறேன்.''

''உனக்கு நான் தெய்வமாக இருந்தாலும் எனக்கும் மேலே ஒரு தெய்வம் இருக்கிறதே? அவரை போய் நான் பார்த்து உன்னுடைய நல வாழ்விற்கு நான் வேண்டிக் கொள்கிறேன். அதற்கு தான் இன்று நான் பள்ளிக்கு கூடச் செல்லவில்லை.''

''நீங்க லீவு போட்டதற்கு காரணம் என்னுடன் வருவதற்கு என்று நினைத்தேனே? நீங்க காலேஜ் வரவில்லையா?''

''நான் உன்னுடன் வரணுமா?''

''ஏன்பா அப்படி கேட்கறீங்க?''

''உன்னுடன் பிரபாகர் வர போகிறான் போல இருக்கே?''

''அதனால் என்னப்பா...?'' என்று கேட்டு கொண்டு இருக்கும் போதே வாசலில் மோட்டார் பைக் ஹாரன் சப்தம் விடாமல் ஒலிக்க அவரின் முகம் மாறியது.

''உன்னை அழைத்து போக பிரபா வந்து விட்டான பார். கிளம்பு'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே புயலாக உள்ளே வந்தான் பிரபாகர்.

''ஹேய், இன்னும் கிளம்பாமல் வீட்டுக்குள்ளேயே என்ன பண்ணி கொண்டு இருக்கிறாய்? காலேஜுக்கு ஒன்பது மணிக்கு போக வேண்டும் என்று சொல்லி விட்டு எட்டரை மணி வரை வீட்டுக்குள் இருந்தால் என்ன அர்த்தம்?'' என்று படபடக்க, அவன் வாயை பொத்தி, அவன் கையை பற்றி இழுத்து கொண்டு வெளியேறினாள் திவ்யா.

''பைப்பா, சாயங்காலம் பார்க்கலாம்,'' என்று உற்சாகமாக சொன்னவள், அவன் பின்னே வாகனத்தில் ஏறி சென்றதை பார்க்கும் வேளையில் சந்தோஷமும், சந்தேகமும் அவர் மனத்தில் சேர்ந்து எழுந்தது.

பிரபாகர், மகளின் மீது வைத்து இருக்கும் பாசமும் அக்கறையும் அவருக்கு சந்தோஷம் விளைவித்த அதே நிமிடம், இவன் திரை உலகில் கால் பதிக்க வேண்டும் என்ற ஆசையில் வேறு வேலை பார்ப்பது குறித்து யோசிக்கவே இல்லை என்பது பூங்குழலியை போலவே அவருக்கு கவலையை தோற்றுவித்து இருந்தது. மகளின் எதிர்காலம் பயமுறுத்த, தங்கையாக இருக்கும் குழலியை உடனே அழைத்தார்.

''என்னண்ணா, திவ்யா கல்லூரிக்கு போக காத்திருக்கிறாளா? இன்னும் பிரபா வரவில்லையா?

அப்பவே கிளம்பி விட்டானே'' என்று ஆர்வத்துடன் பேச அவர் முகத்தில் இருந்த கவலை மேலும் கூடியது.

குழலி மகனையும் திவ்யாவும் சேர்த்து வைக்க விரும்புவது புரிந்தது. அவருக்கும் ஆரம்பத்தில் ஆட்சேபணை இல்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளாக முயற்சி செய்தும், இன்னும் பிரபாகரால் ஒரு திரைப்படத்தில் சிறிய வேடத்தில் கூட நடிக்க இயலவில்லை என்பது கவலையை அதிகரித்தது.

''அவன் வந்து திவ்யாவை கல்லூரிக்கு அழைத்து சென்று விட்டான். நான் உன்னிடம் பேச வேண்டும் என்று தான் அழைத்தேன்...''

''திவ்யா இன்றுடன் படிப்பை முடிக்க போகிறாளே? அதான் அவள் பெயரில் ஒரு அர்ச்சனை செய்யலாம் என்று நான் இப்ப தான் வடபழனி முருகன் கோவிலுக்குக் கிளம்பி கொண்டு இருக்கிறேன். நீங்க ப்ரீயா இருந்தால் அங்கே வாங்களேன் பேசலாம்'' என்று அழைக்க சம்மதம் சொன்னார். அடுத்த பத்தாவது நிமிடம் பூங்குழலி வந்து சேர்வதற்கு முன்பே சென்று அங்கே காத்திருந்தார்.

''என்ன அண்ணா, நான் வருவதற்கு முன்னாடியே வந்து விட்டீர்களா? ரொம்ப அவசரமாக பேச வேண்டும் போல இருக்கே...?''

''ஆமா, நீ சாமி தரிசனம் முடித்து விட்டு சீக்கிரம் வா.''

''நானும் உங்களிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும். நீங்க இங்கே வரவில்லை என்றாலும் நானே கோவிலில் இருந்து உங்க பள்ளிக்கு, கிளம்பி நேரே வந்து இருப்பேன். பத்து நிமிஷம் இப்படி உட்காருங்க. நான் முருகனுக்கு ஒரு அர்ச்சனை பண்ணி விட்டு வந்து விடுகிறேன் கிளம்பினார். சீக்கிரமே வந்து அருகில் அமர்ந்தார் குழலி.

''நீ என்ன விஷயமா பேச நினைத்தாய்?''

''நான் வேறே என்ன விஷயம் பேசப் போகிறேன்? திவ்யா படிப்பை முடித்து விட்டாள். அடுத்து அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ண நாள் பார்க்கலாமா என்று கேட்க நினைத்தேன். எனக்கு வேறே என்ன நினைப்பு சொல்லுங்க? நீங்க என்ன பேச நினைத்தீங்க?'' என்று கேட்க அவர் அமைதியாக இருந்தார்.

''என்ன அண்ணா, நான் பாட்டுக்கு பேசி கொண்டு இருக்கிறேன். நீங்க அமைதியா இருக்கீங்க? ஏதாவது பிரச்சனையா?''

''ப்ச! அதெல்லாம் இல்லை...''

''அப்புறம் என்ன? உடம்பு சரி இல்லையா?''

''உடம்பு நல்லா தான் இருக்கு...''

''அப்ப மனசு சரி இல்லையா?''

''ப்ச...''

''என்ன விஷயம் என்று வாயைத் திறந்து சொன்னால் தானே அண்ணா புரியும்?''

''சொல்ல வேண்டும் என்று தான் நினைக்கிறேன். ஆனால் நீ தப்பாக எடுத்து கொள்வாயோ என்று கவலையாக இருக்கு.''

''இன்று நானும் என் பிள்ளையும் இந்த சென்னையில் சந்தோஷமா குடித்தனம் பண்ணுகிறோம் என்றால், அதற்கு காரணம் நீங்களும் அப்பாவும் கொடுத்த ஆதரவு தானே? அதை நானும் என் பிள்ளையும் ஏழேழு ஜென்மத்திற்கும் மறக்க மாட்டோம். அதனால் நீங்க என்ன சொன்னாலும் எனக்கு கோபமே வராது. என் கவலை என்றுமே என் பிள்ளையைப் பற்றி தான். அவனை நீங்களும் திவ்யாவும் பார்க்க இருக்கும் போது எனக்கு என்ன கவலை?''

''நானும் திவ்யாவும் அவனை பார்த்து கொள்வது இருக்கட்டும். அவன் அவனை எப்போது பார்த்து கொள்ள போகிறான்?''

''என்ன அண்ணா கேள்வி இது?''

''உனக்கும் வயசாகுது இல்லையா?''

''ஏன் உங்களுக்கு வயசாகவில்லையா?''

''எனக்கும் தான்... அதனால் தான் கவலை கூடுகிறது. இதில் என் உடல்நிலை வேறு சொல்லி கொள்வது மாதிரி இல்லை...''

''அதனால் தான் சொல்கிறேன் இருவருக்கும் ஒரு கல்யாணத்தை பண்ணி வைத்து விட்டால் உங்களுக்கும் உங்க பெண்ணைப் பற்றிய கவலை நின்று விடும்...''

''நீ புரிந்து தான் பேசுகிறாயா?''

''கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்று சொன்னால், அதில் புரியாமல் போக என்ன இருக்கு.

நான் நல்லா சுய நினைவோடு தான் பேசுகிறேன். உங்களுக்கு இதில் சம்மதம் இல்லையா?''

''இல்லை...''

''அண்ணா... என்ன இது...?''

''ஆமா குழலி, நீ தப்பா எடுத்துக் கொள்ள வேண்டாம். உனக்கு உன் பையன் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்கு எனக்கு என் பெண் சந்தோஷமாக இருப்பது முக்கியம் இல்லையா?''

''அண்ணா, அவள் எங்க வீட்டில் சந்தோஷமாக இருப்பாள் என்ற நம்பிக்கை உனக்கு இல்லையா?''

''நீ உன்னை மையமாக வைத்து மட்டுமே பேசுகிறாய் குழலி...''

''என் பையனும் நல்லவன் தான் அண்ணா, அதுவும் புகை பிடிக்கும் பழக்கம் கூட இல்லாத அக்மார்க் நல்லவன். என்ன கொஞ்சம் சீக்கிரம் கோபம் வந்துவிடும் அவ்வளவுதான்...''

''நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை புரியாத மாதிரியே பேசுகிறாயே? சந்தோஷமாக இருப்பதற்கு அடிப்படை பொருளாதார வசதி வேண்டாமா?'' என்று அழுத்தமாக கேட்க குழலியின் முகம் இருண்டது.

''எங்க மூன்று பேருக்கு சாப்பாடு போடும் அளவுக்கு என்னால் சம்பாதிக்க முடியும் அண்ணா...''

''நான் உன் சம்பாத்தியத்தை சொல்லவில்லை. பிரபாகரின் பொருளாதார வசதி பற்றிப் பேசுகிறேன்'' என்று கேட்க இம்முறை குழலிக்கும் கோபம் வந்தது.

''இந்த நடிப்பு துறை வேண்டாம் என்று நான் சின்ன வயசில தலை தலையாக அடித்து கொண்ட போது, இதுவும் ஒரு திறமை தானே என்று அவனை ஊக்குவித்தது நீங்க தான் என்பதை மறந்து விட்டு பேசுகிறீர்கள்.''

''உண்மை தான். ஆனால் அவனும் நடப்பு நிலையை புரிந்து கொண்டு முடிவெடுக்க வேண்டாமா? என்னால் ஜாடை மாடையாக தான் சொல்ல முடியும்? அவனும் வளர்ந்த ஆண்மகன் இல்லையா?''

''அவனிடம் ஜாடை மாடையாக சொன்னீர்கள். உங்க மனசில் உள்ளதை என்னிடம் நேரடியாக சொல்லி விடுங்க.''

''பார்த்தாயா நீ கோபப்படுகிறாய்...?''

''இல்லை அண்ணா, இது கோபம் இல்லை. உங்க மேலே கோபப் பட முடியுமா? வருத்தம் என்று வேண்டு மானால் வைத்து கொள்ளலாம். நீங்க ஏற்கனவே எனக்கு கொடுத்த வாக்குறுதி நினைவில் இருக்கும் என்று நம்புகிறேன்.''

''குழலி, இப்போதும் பிரபா நல்லவன் என்பதில் எனக்கு மாற்று கருத்து எதுவும் இல்லை. ஆனால் வல்லவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா? அவன் நடிப்புத் துறையை தொழிலாக தேர்ந்தெடுப் பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அவன் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பது தான் என் ஆசை.''

''புரிகிறது...''

''நடிக்கும் வாய்ப்புக்காக காத்திருந்து காத்திருந்து வரும் வாய்ப்புகளை தவற விடக் கூடாது என்று நீ அவனிடம் சொல்லி வை.''

''ம்ம்ம்.. சொல்கிறேன்...''

''சீக்கிரமே அவன் சுயமாக சம்பாதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்...''

''எவ்வளவு சீக்கிரம்...?''

''ஒரு ஆண்டு. அடுத்த தை நான் என் மகளுக்கு திருமணம் முடிக்க ஆசைப்படுகிறேன். அதற்குள் அவன் சொந்தக் காலில் நிற்க வேண்டும். இல்லை என்றால் அதன் பிறகு என் மீது வருத்தப்படுவதில் அர்த்தம் இல்லை குழலி...'' என்று தீர்மானமாகச் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் சுப்ரமணியன்.

சுப்ரமணியன் தன்னிடம் நேரடியாக சொன்னதை அவர் மகனிடம் பல முறை பல விதமாகச் சொல்லிக் கொண்டு இருக்க அந்த செய்தி செவிடன் காதில் ஊதிய சங்காக வீண் ஆகிப் போனது. அவர் கொடுத்த ஒரு ஆண்டு காலம் கடுகி விரைந்து காணாமல் போன பிறகும் பிரபாகரின் திரையில் தோன்றும் ஆசை நிறைவேறும் வழி தெரியவில்லை.

10

''வாழ வைக்கும் காதலுக்கு ஜே வாலிபத்தின் பாடலுக்கு ஜே...'' என்று கமலின் காதல் பாடலை சீட்டி அடித்தபடி கண்ணாடியின் முன்பு நின்று தலை வாரிக் கொண்டு இருந் தான் பிரபாகர்.

அலங்காரம் முடிந்தது என்ற திருப்தி வந்த பின், ஆளுயர கண்ணாடியில் தெரிந்த தன் முழு உருவத்தையும் மேலும் கீழுமாக பல முறை பார்த்தான். இருபத்தி ஏழு வயதை சில நாட்களுக்கு முன்பு கடந்து விட்டான் என்பதை தன் தோற்றம் வெளிக்காட்டவில்லை என்பதில் பெருமிதம் படர்ந்தது.

ஆறடி உயரம்! கண்ணை கவரும் தேன் நிறம். கட்டு மஸ்தான உடல் வாகு. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி என்று ஐந்து மொழிகளில் பேச தெரியும். ஆடலும் பாடலும் கை வந்த கலை.

சினிமாவில் சாதிக்க வேண்டும் என்ற வெறியுடன் கடந்த பன்னிரண்டு வருடங்களாக கோடம்பாக்கத்தை சுற்றி வந்தாலும், சினிமாவில் சாதிக்க இன்னும் சந்தர்ப்பம் கிட்டவில்லை. ஆனாலும் அவன் முயற்சியை விடுவதாக இல்லை.

ஒவ்வொரு நாளும் புதிய பயிற்சிகளை செலவு பண்ணி எடுத்து கொள்வதும், விதம் விதமாக புகைப் படங்களை எடுத்து, ஒவ்வொரு ஸ்டுடியோவாக ஏறி இறங்குவதையும் தவறாமல் செய்து கொண்டு இருக்கிறான். இன்றும் வெள்ளி திரை இயக்குநர் ஒருவரை பார்க்கப் புறப்பட்டுக் கொண்டு இருக்கிறான். மனதின் அடி ஆழம் சின்ன கவலை வந்து சேர்ந்தாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து முயன்று வருகிறான்.

கண்ணாடி முன்பு நின்று பல வித பாவனைகளை காட்டி ஒத்திகை பார்த்து கொண்டு இருந்த போது பின்னால் ஆள் வரும் அரவம் கேட்க மூடி இருந்த கண்களை திறந்து கண்ணாடியில் பார்த்தான். அம்மா!

ஐம்பது வயதிலும் தீர்க்கமான அழகு, தெளிவான வசன உச்சரிப்பு, பாடும் திறமை, என்று பல திறமைகள் இருந்தும் அவரால் சின்ன திரையில் ஜொலித்த அளவுக்கு வெள்ளி திரையில் ஜொலிக்க முடியவில்லை.

அம்மாவின் முயற்சி தோல்வியுற்றதை சிறு வயதில் இருந்து பார்த்தாலும், இந்த விளம்பர உலகம் அவனை ஈர்த்தது. கலையின் மீது இருந்த தாகம், அவனது ரத்தத்திலேயே ஊறி இருக்க வேண்டும். அவனால் அந்த மாய வலையில் இருந்து வெளிவர முடியவில்லை.

''பிரபு, என்னப்பா வெளியே கிளம்பிவிட்டாயா?'' என்ற தாயின் குரலில் திரும்பினான். நல்ல மன நிலையில் வெளியே கிளம்ப வேண்டும். தேவை இல்லாத கேள்விகள் கேட்டு எரிச்சல் மூட்டினால் மன நிலை பாதிக்கப்படும்.

''ஆமா...'' என்று சுருக்கமாக முடித்தவன் குரலில் அதிகாரம் இருந்தது. மேலே விசாரிக்காதே என்ற எச்சரிக்கை குறிப்பு இருந்தது.

''திரும்பி எப்போ வருவாய்?'' என்று நாசூக்காக விசாரித்தார். நீ தடுக்கில் பாய்ந்தால் நான் கோலத்தில் பாய்வேன் என்று குறிப்பு காட்டினார்.

'எங்கே போகிறாய்' என்று கேட்டால் தானே அபசகுனம்? 'எப்போது வருவாய்?' என்று கேட்டால் அது அக்கறை தானே?' என்று திருப்பி விடலாம் என்ற நம்பிக்கை அவர் முகத்தில் ஜொலித்தது.

''இந்த புத்திசாலித்தனம் தான் உங்களை சினிமா உலகில் ஜொலிக்க விடாமல் செய்தது தெரியுமா?'' என்று வேகமாக கேட்க அவர் கசப்பாக புன்னகை செய்தார்.

''சரி. நான் புத்திசாலியாக இருந்ததால் சினிமா வில் ஜொலிக்கவில்லை. நீ?'' என்று கேட்க அவன் முகம் மேலும் கோபத்தில் சிவந்தது.

''புத்திசாலி என்றால் நீ ஜெயிக்க முடியாது என்று சொல்ல வருகிறாரா? இல்லை என்றால் நான் முட்டாள் என்று ஒத்து கொள்வதாக ஆகும். எப்படி பேசி மடக்குகிறார் பார்'' என்ற ஆத்திரம் வந்தது.

''இப்ப என்ன சொல்ல வரீங்க?'' என்று பல்லை கடித்து கொண்டு கேட்டான்.

''நீ புத்திசாலியாக இருந்தால் புரிந்து இருக்கும்...''

''நான் உங்க பிள்ளை தானே? அந்த புத்திசாலித் தனம் இல்லாமல் எங்கே போகும்? நிறையவே இருக்கு. ஆனால் ஒரு பெண்ணாக உங்களுக்கு பல நடைமுறை சிக்கல்கள் இருந்தன. அது எனக்கு இல்லை. அதனால் நீங்க ஜெயிக்காத சினிமாவில் நான் ஜெயித்து காட்டுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு...''

''நம்பிக்கை மட்டும் வாழ்க்கையில் போதாது பிரபாகர்...'' என்று மேலும் அழுத்தமாக சொன்ன வருக்கு கோபத்துடன் எரிச்சலும் சேர்ந்து மூண்டது.

''அதற்கான முயற்சிகளிலும் நான் ஈடுபட்டு கொண்டு தான் இருக்கிறேன்...''

''முயற்சி மட்டும் சினிமாவில் ஜெயிக்க போதாது...''

''உழைக்க தயாராக இருக்கிறேன்...''

''அதற்கு உனக்கு யாராவது சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்...''

''அதை நான் பார்த்துக் கொள்கிறேன்...''

''இதோ பார், சினிமாவில் ஜெயிக்க வேண்டும் என்று நீயும் பன்னிரெண்டு ஆண்டுகளாக காலத்தை கடத்தி கொண்டு இருக்கிறாய். உன் லட்சியத்தின் குறுக்கே நான் நிற்கவில்லை. ஆனால் எனக்கு ஐம்பது வயதாகி விட்டது. துணை கதாபாத்திரங் களில் மட்டுமே நடிக்க முடிகிறது. வாய்ப்பு குறைந்து வருகிறது. மேக்கப் போட்டால் முகத்தில் அரிப்பு ஏற்பட்டு புண் ஆகி விடுகிறது. வருமானம் இல்லாத நிலையில் முப்பது வயதை நெருங்கும் பிள்ளையை வைத்து கொண்டு அவனுக்கும் சோத்து என்னால் சம்பாதிக்க முடியாது...''

''அம்மா நீங்க பேசுவது உங்களுக்கே நல்லா இருக்கா? பெற்ற புள்ளைக்கு சாப்பாடு போட கணக்குப் பார்க்கிறீங்களா?''

''ஆமா! தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு வேறு. அது மட்டுமில்லை. மூன்று வேளை சாப்பாடு மட்டும் என்றால் கூட, பெற்ற கடன் என்று போட்டுத் தொலைத்து விடுவேன். ஆனால், உன் அலங்கார சாமான்கள், சண்டை பயிற்சி, நடன பயிற்சி, லொட்டு லொசுக்கு என்று ஆயிர கணக்கில் பணம் செலவழிக்க இனியும் என்னால முடியாது. அதை முதலில் தெரிந்து கொள்...''

''ஏன் செலவழிக்க முடியாது? இந்த வீடு என் பெயரில் தானே இருக்கு? அதை அடமானம் வைத்து பணம் பெற்று கொள்கிறேன். நீங்க எனக்காக எதுவும் செலவழிக்க வேண்டாம்...''

''ஓஹோ! வீட்டு மேல் கண் வைத்து இருக்கிறாயா? ஆட்டை கடித்து மாட்டை கடித்து கடைசியில் மனிதனை கடிக்க வந்து விட்டாயா?''

''நான் உங்க பிள்ளை நினைவிருக்கா?''

''நீ என் பிள்ளை என்பது எனக்கு நல்லாவே ஞாபகம் இருக்கு. ஆனால் உனக்கு நான் உங்க அம்மா என்பது நினைவிருக்கா? பதினெட்டு வயசு வரை தான் ஆண் பிள்ளை குழந்தையாக இருக்க முடியும். அவனை பெற்றோர்கள் பராமரிக்க வேண்டும். அதன் பிறகும், படித்து கொண்டு இருந்தால், பரவாயில்லை, செலவு செய்யலாம். ஆனால் உனக்கு படிப்பும் ஏறவில்லை. நான் வேண்டாம் வேண்டாம் என்று தலையால் அடித்து கொள்ளும் சினிமா துறை தான் வேண்டும் எனறு தலை கீழாக நிற்கிறாய். உன்

சாப்பாட்டுக்கு சம்பாதிக்க வேண்டும் என்ற நினைப்பாவது உனக்கு இருக்கா? உனக்கு முப்பது வயசாகப் போகுது...''

''முப்பது இல்லை... இருபத்தி ஏழு...''

''இதுல ஒண்ணும் குறைச்சல் இல்லை...''

''வேறே எதில் குறைச்சல்? என்னிடம் அழகில்லையா? திறமை இல்லையா? இன்று திரையில் ஹீரோவாக நடித்து கொண்டு இருக்கும் பல நடிகர்களை விட நான் நன்றாகவே நடிப்பேன். சங்கீதம் தெரியும். சண்டை பயிற்சி உண்டு. ஐந்து மொழிகளில் பேச முடியும். ஆறு விதமான நடனங்கள் ஆட தெரியும்.''

''வாயை மூடுடா. இதைக் கேட்டுக் கேட்டு எனக்கு காது புளித்து போய் விட்டது. நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். சினிமாவில் ஜெயிக்க அழகு திறமை மட்டும் போதாது. கொஞ்சம் அதிர்ஷ்டம் வேண்டும். அது உனக்கு இருக்கிற மாதிரி எனக்குத் தெரியல...''

''இப்படி சாபம் விடுற மாதிரி சொல்றீங்களே? நீங்க என்னை பெற்றவர் தானா?''

''பெற்றவள் என்பதால் தான் நீ முன்னேற வேண்டும் என்ற ஆதங்கத்தில் சொல்கிறேன். சிரிக்கச் சிரிக்க சொல்பவர்கள் சீரழிய தான் வழி சொல்வார்கள். கசப்பான வார்த்தைகள் தான் இனிப்பான விளைவுகளை தரும். உனக்கு ஜால்ரா போடுற பசங்க சொல்வதை நம்பாதே. ஏதாவது வேலைக்கு போய்

சம்பாதிக்க முயற்சி பண்ணு. இல்லை என்றால் அடுத்த வேளை சாப்பாட்டுக்கு வழி இல்லை. தெரிந்து கொள்...''

''சரி இந்த வீட்டை விற்க ஏற்பாடு பண்ணுங்க. முப்பது லட்சம் வரும் இல்லையா? அதை வைத்து சாப்பிடலாம்.''

''நாலு காசு சம்பாதிக்க துப்பில்லை. குடி இருக்கும் வீட்டை விற்க ஐடியா கொடுக்கிறாயா? இப்ப சொல்கிறேன். நன்றாக கேட்டு கொள். இந்த வீடு இருப்பது எண்பது சதவிகித கடனில். இதை விற்றால் ஏற்கனவே வாங்கிய கடனுக்கு வட்டி சேர்த்து கடன் காரன் எடுத்து கொண்டால், மிச்சம் இரண்டு லட்சம் கிடைத்தால் அதிசயம். அது உன் செலவுக்கு மூன்று மாதம் தாங்கும். அதன் பிறகு என்ன செய்வதாக உத்தேசம்? சோற்றுக்கு கோடம்பாக்கம் ஸ்டூடியோ வாசலில் பிச்சை எடுக்க போகிறாயா?'' என்று கேட்க அலட்சியமாக தலையை சிலுப்பினான் பிரபாகர்.

''நீங்க ஒன்றும் இனிமேல் எனக்கு காசு தர வேண்டாம். நான் திவ்யாவிடம் கேட்டு கொள் கிறேன்.''

''தூ வெட்கமா இல்லை உனக்கு? உன்னை விட ஐந்து வயது சின்ன பெண். படித்து வேலைக்கு போய் சம்பாதிக்க ஆரம்பித்து ஒரு வருஷம் ஆகப் போகிறது. ஹோட்டலில் வேலை பார்ப்பதனால், சட்டமா போய் நீயும் அப்பப்ப அந்த ஹோட்டலில் அவள் பெயரை சொல்லி வெட்கமே இல்லாமல் சாப்பிட்டு விட்டு

வருகிறாய். இப்ப காசு வேறு கேட்பாயா? அவள் கையால் செருப்படி வாங்கினால் கூட நீ திருந்த மாட்டாய் என்று நினைக்கிறேன்.''

''ஐந்து இல்லை. மூன்று வயது சின்னவள். அதற்கு மேலே அவள் ஏன் என்னை செருப்பால் அடிக்க வேண்டும்? அவள் என்னை லவ் பண்ணுகிறாள். நானும் அவளும் கல்யாணம் பண்ணிக்க போகிறோம். அப்படியே அவள் அடித்தாலும் நான் வாங்கி கொள்கிறேன். அதைப் பற்றி நீ கவலைப்படாதே!''

''நீ என் பிள்ளை தான பிரபா? கொஞ்சம் கூட ரோஷமே இல்லாமல் இப்படிப் பேசுகிறாய்?''

''பிள்ளைக்கு இவங்க தான் அம்மாவா என்று சந் தேகம் வரலாம். ஆனால் அம்மாவுக்கு எல்லாம் சந் தேகமே வரக் கூடாது. ரொம்ப தப்பு. அது போகட்டும், இப்ப உங்களுக்கு என்ன தான் பிரச்சனை?''

''எனக்கு என்ன பிரச்சனை என்பதை கூட உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் நீ எப்படிடா என் வயிற்றில் பிறந்து இருக்க முடியும்? நீ இத்தனை வயசாகியும் ஒரு வேலைக்குப் போக வில்லை என்பது தாண்டா பிரச்சனை?''

''ஒரு மனுஷனை நிம்மதியா வெளியில் கிளம்ப விடுறீங்களா? நை நை என்று எப்ப பார்த்தாலும் ஏதா வது பிரச்சனையை கிளப்பி மனுஷனை சாவடிப்பது என்ற முடிவில் இருக்கீங்களா?''

''நானாக பிரச்சனையை கிளப்பாமலேயே நீயாக புரிந்து கொண்டு இருந்தால் எப்பவோ விடிவு காலம்

பிறந்து இருக்கும். ஒரே ஒரு நிமிஷம் கொஞ்ச என் முகத்தை நல்லா பாரு பிரபா...'' என்று அவன் முகவாயை பற்றி அழுத்தி திருப்ப அவன் தாயின் முகத்தை ஆராய்ந்தான்.

மேக்கப் இல்லாத அந்த முகம் அந்த வினாடியில் அவன் வயிற்றில் படபடப்பை உண்டு பண்ணியது. எப்போதும் தன்னை அழகுப்படுத்தியே பழக்கப்பட்ட அந்த முகத்தில் திட்டு திட்டாக வெள்ளை புள்ளிகள் தோன்ற ஆரம்பித்து இருந்தது.

''அம்மா... என்னம்மா இது?''

''என் முகத்தை நீ இத்தனை நாள் உற்று பார்த்த துண்டா? இப்ப தான் தெரியுதா?''

''இத்தனை நாள் சொல்லவே இல்லையே? வாம்மா டாக்டரிடம் போகலாம்.''

''அதெல்லாம் தேவை இல்லை. முகத்தில் திட்டு திட்டாக மேக்கப்பால் மறைக்க முடியாத அளவுக்கு வெள்ளை புள்ளிகள் வந்து விட்டது. இனிமேல் நான் திரையில் தோன்ற வாய்ப்பே இல்லை...''

''அது பரவாயில்லைம்மா, நான் பார்த்துக் கறேன்...''

''நீ பார்த்து கொள்வாயா? எப்படி?''

''தேவை இல்லாததை பேச வேண்டாம். வாங் கம்மா முதலில் டாக்டரிடம் போகலாம்.''

''எது தேவை இல்லை? நான் தேவையானதை தான் பேசுகிறேன். அதெல்லாம் டாக்டரிடம் காட்டி

மருந்து வாங்கியாச்சு. அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நீ சம்பாதித்து பணம் கொண்டு வந்தால் தான் சாப்பிட முடியும். இது தான் இன்றைய நம்முடைய பொருளாதார நிலை.''

''அம்மா...'' என்று முனகலாக சொன்னான். முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி தோன்றியது.

''எனக்கு நீ சோறு போட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என் கையில் காசு இருக்கும் வரை சாப்பிடுவேன். காசு தீரும் நேரம் வரும் போது, சமுத்திரத்திற்கு போய் நேரே கடலில் இறங்கி விடு வேன்...'' என்று அலட்சியமாக சொல்ல, இம்முறை, 'அம்மா...' என்று சப்தமாக அலறினான்.

''எதற்கு இப்படி தொண்டை கிழிய கத்துகிறாய்? இங்கே ஷூட்டிங் நடக்க வில்லையே? எனக்கு எந்த கட்டுப்பாடுகளும் இல்லை. ஒருவேளை நீ பெண் ணாக இருந்தால் சாக யோசித்து இருப்பேன். உனக்கு ஒரு கல்யாணம் பண்ண வேண்டும் என்று தயங்கி இருப்பேன். ஆனால் நீ பையனாக பிறந்து விட் டாய்...''

''பெற்றவர்கள் இல்லை கூட பிறந்தவர்கள் இல்லை. கணவன் இல்லை. நான் இருந்து காப்பாற்றி ஆக வேண்டும் என்று உயிரைப் பிடித்து நிறுத்த எனக்கு பெண் குழந்தையும் இல்லை. அதனால இந்த உலகத்தில் நான் விரும்பும் வரை உலகில் இருப் பேன். அடுத்தவர் கையை எதிர்பார்த்து சாப்பிட வேண்டும் என்ற நிலை வந்த அடுத்த வினாடி என்

வாழ்க்கையை முடித்து கொள்வேன். நீ உன்னை பற்றி மட்டும் யோசித்தால் போதும்...'' என்று சொல்லி விட்டு அறையை விட்டு வெளியேறிய அம்மாவை திகைப்புடன் பார்த்தபடி அதிர்ந்து போய் சிலையாக நின்றான் பிரபாகர்.

11

''அப்பா, நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்'' என்று அவள் காதிலேயே விழாத வண்ணம் முனகி விட்டு வீட்டை விட்டு கிளம்பிய திவ்யாவை ஒரு கை நீட்டி மறித்தார் சுப்ரமணியன்.

''நில்லு, நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல் லாமலேயே நீ பாட்டுக்கு கிளம்பினால் என்ன அர்த்தம்? உன்னை நான் இன்று லீவு போட சொன் னது நினைவில் இல்லையா?'' என்று எரிச்சலுடன் முறைத்தார்.

''லீவுதானே? போட்டாச்சு. போட்டாச்சு. இப்ப நான் ஹோட்டலுக்கு வேலைக்கு கிளம்பவில்லை. வெளியே போய் வருகிறேன் என்று தான் சொன் னேன். அபபா சொல் தவறாத பெண் நான்...''

''ஆஹா! அப்பா சொல் தவறாமல் கேட்கும் பெண். கேட்கும் போதே காதில் தேன் வந்து பாயுது. ஆனால் இந்த வாசகத்தை ஒடுற தண்ணியில தான் எழுதி வைக்கணும்...''

''ஒடுற தண்ணியில் எழுதி வைத்தாலும் சரி, தஞ்சாவூர் கல்வெட்டில் கூட எழுதி வைத்தாலும்

சரி, அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. அது உங்க சௌகரியம். நான் வருகிறேன்'' என்று அவருக்கு மேல் அழுத்தமாக கோபத்தை குரலில் காட்டி விட்டு படி இறங்க முயன்றவளை மீண்டும் சப்தமாக தடுத்து நிறுத்தினார்.

''ஏய் நில்லு! உனக்கு என்னை பார்த்தால் எப்படி இருக்கு? லீவு போட்டு விட்டேன் என்று சொல்லி விட்டு நீ பாட்டுக்கு கிளம்பினால் என்ன அர்த்தம்? மாப்பிள்ளை வீட்டில் இருந்து பதினோரு மணிக்கு வர சொல்லி இருக்கிறேன் என்று நேற்று ராத்திரி படிச்சு படிச்சு ஆயிரம் தடவை சொன்னது உன் மண்டையில் ஏறவில்லையா? வாத்தியார் பிள்ளை மக்கு என்பது சரி தான் போல.''

''ஒன்று நான் ரொம்ப மோசமான மாணவியா இருக்கணும் இல்லை நீங்க ரொம்ப மோசமான வாத்தியாராக இருக்க வேண்டும். அதனால் தான் பாடம் விளங்கவில்லை. தாய் எட்டு அடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்ற கணக்கு.''

''என்ன பெற்ற தகப்பனை மடக்கி விட்டோம் என்ற திமிரா?''

''இல்லையே? நான் உங்க பொண்ணு தானே? நான் சொல்வது என்று உங்கள் மண்டையில் ஏறுதோ, அடுத்த விநாடியே நீங்க சொல்வதும் என் மண்டை யில் ஏறி விடும்.''

''திவ்யா, நீ இன்னும் அந்த தடி தாண்டவ ராயனையே நினைத்து கொண்டு இருக்கிறாய்.

அவனை தொலைத்து தலை முழுகி விட்டேன் நான்...''

''நான் இன்னும் தலை முழுகவில்லை. தலை முழுகும் உத்தேசமும் எனக்கு இல்லை...''

''அறிவு கெட்ட தனமா பேசாதே திவி. ஒரு குடும்பத்தை நடத்த தேவையான சம்பாத்தியம் அவனிடம் இல்லை. உத்தியோகம் புருஷ லட்சணம் என்பது அவனுக்கும் தெரியவில்லை. நான் அவனை ஏன் வேண்டாம் என்று சொல்கிறேன் என்று உனக்கும் புரியவில்லை...''

''உங்களுக்கு தான் என் மனசு புரியவில்லை. அவரை எனக்குப் பிடித்து இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அவசரமாக இடையிட்டார் சுப்ரமணியன்.

''எனக்குப் பிடிக்கலை...''

''அது என் கவலை இல்லை. சில நாட்கள் முன்பு வரை உங்களுக்கும் அவரைப் பிடித்து தான் இருந்தது...''

''சில நாட்கள் இல்லை. நான் என் மனசை மாற்றி கொண்டு இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டது...''

''இருக்கலாம். நான் உங்களுக்குத் தெரியாமலோ, உங்களின் சம்மதம் இல்லாமலோ காதலிக்கவில்லை. உங்களுக்கும் இரண்டு ஆண்டுகள் முன்பு வரை ஹீரோவாக தெரிந்தவரை தான் காதலிக்கிறேன். அது மட்டும் இல்லை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு

நீங்க மனசை மாற்றி கொண்டதால், நானும் அதே மாதிரி மாற்றி கொள்ள முடியாது அப்பா. அப்படி நான் செய்தால் எனக்கு சமூகத்தில் வேறு பெயர். அதை முதலில் தெரிந்து கொள்ளுங்க'' என்று திவ்யா சொல்லி முடிக்கும் வேளையில் அவருக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை எரிந்தது.

''ஏய்! ஓங்கி ஒரு அறை விட்டால், பல் முப்பத்தி இரண்டும் கொட்டி விடும் ஜாக்கிரதை...''

''அப்பா, உங்களுக்கு வில்லன் ரோலில் நடிக்க ஆசை வந்து விட்டதா? முதலில் அவர் ஹீரோவாக நடித்த ஒரு படம் வெள்ளி விழா கொண்டாட்டும். உங்களுக்கும் சினிமாவில் ஒரு சான்ஸ் வாங்கித் தர சொல்கிறேன். இது அம்மா மேலே சத்தியம்...''

''ஏய்! இப்ப எதுக்கு அம்மாவை நீ இங்கே இழுக்கிறாய்?''

''உங்க மனசுக்கு பிடித்தவர். என்னை பெற்ற தாய். அவரை நாம் பேச்சுக்குள் இழுத்தால் என்ன குறை? அது மட்டுமில்லை, நீங்க கூட தான் அம்மா முன்னிலையில் எனக்கு சத்தியம் பண்ணிக் கொடுத் தீங்க?''

''நான் கொடுத்த சத்தியம் இரண்டு ஆண்டு களுக்கு முன்பு. நான் கொடுத்த அவகாசம் முடிந்து ஒரு வருடம் ஆகப் போகிறது. அதை நீ தான் மறந்து விட்டாய்.''

''ஒருவருக்கு கொடுத்த வாக்குறுதியை மறக்க லாமா அப்பா? அதுவும் ஆசிரியர் பணி செய்த நீங்க மறக்கலாமா? அதை நான் அனுமதிக்கலாமா?''

''நீ இப்படியே வெட்டி நியாயம் பேசி கொண்டு இரு. கூடிய சீககிரம் மனநோய் மருத்துவமனையில் தான் போய் நிற்க போகிறாய்.''

''உங்க ஆசை படி நடக்கவும் வாய்ப்பு இருக்குப்பா. ஆனால் அத்தைக்கு மீசை முளைத்து அவர் சித்தப்பா ஆக வேண்டும். அப்ப வாய்ப்பு இருக்கு...'' என்று தீவிரமான முக பாவனையுடன் சொல்ல அவர் முறைத்தார்.

''என்ன உளறுகிறாய்?''

''நீங்க ரொம்ப ஆசைப்படுறீங்க. உங்க ஆசை பட்ட படி, வேறு யாருடனும் என் கல்யாணம் நடக்காது. அப்படி ஒரு வேளை நடந்து விட்டால், கல்யாணம் முடிந்த அடுத்த நாளே நான் அங்கே தான் இருப்பேன். அதில் உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்...''

''திவ்யா, பைத்தியம் மாதிரி பேசுவதை கொஞ்சம் நிறுத்து. எனக்கு வயசு ஆகி கொண்டே போகிறது. ஒரு பொறுப்புள்ள தகப்பனாக காலா காலத்தில் ஒரு நல்லவன் கையில் என் பெண்ணை ஒப்படைக்க வேண்டும் என்று நினைப்பது தவறா?''

''நான் பெண்ணுக்கு கல்யாணம் பண்ணி பார்க்க நினைக்கும் தகப்பனின் எண்ணம் தவறு என்றும் சொல்லவில்லை. நான் கல்யாணமே பண்ணி கொள்ள மாட்டேன் என்றும் சொல்லவில்லை. தாராளமாக கல்யாணம் பண்ணி கொள்கிறேன். எனக்கு பிடித்

தவன் கையில் ஒப்படையுங்க என்று சொல்கிறேன்...''

''நாளைக்கு நீ மூன்று வேளை சாப்பாட்டிற்கு கூட வழி இல்லாமல் தவிக்கும் படி உனக்கு ஒரு கல்யாணம் தேவையா? அதுக்கு நீ சும்மாவே இருக்கலாம்...''

''எனக்கு இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம். பிரபாகர் ஒரு நல்ல நிலைக்கு வரட்டும். அப்புறம் பண்ணி கொள்கிறேன் என்று தான் நானும் சொல்கிறேன். கல்யாணத்துக்கு நானோ பிரபாகரோ அவசரப்படவில்லையே? நீங்க தான் தவிக்கிறீங்க?''

''அவனும் இதையே தான் வருஷக் கணக்காகச் சொல்லி கொண்டு இருக்கிறான்.''

''அவரால் சினிமா துறையில் முன்னுக்கு வர முடியும். அதற்கான ஆர்வமும் திறமையும் இருக்கு. அதனால் தான் நானும் நம்பிக்கையுடன் இருக்கிறேன்.''

''ஆர்வமும் திறமையும் மட்டும் சினிமாவில் ஜெயிக்க போதாது திவ்யா. அவனால் சினிமா துறையில், அட்ஜஸ்ட் பண்ணிப் போக முடியாது. அங்கே இருப்பவர்களில் பாதி பேர் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்கள். அவனால் அப்படி இருக்க முடியாது. இவனுக்கு முன் கோபம் வேறு ஜாஸ்தி...''

''அது முன் கோபம் இல்லை. வித்யா கர்வம். திறமை இருக்கும் இடத்தில் துளி கர்வம் இருப்பது தப்பில்லை அப்பா...''

''ஹய்யோ கடவுளே! உனக்கு எப்படி என்ன சொல்லிப் புரிய வைப்பது என்றே தெரியல...''

''எனக்கும் தான்பா உங்களுக்கு எப்படி என்ன சொல்லிப் புரிய வைப்பது என்றே தெரியல. ஏன் இப்படி காசு காசு என்று அலையுறீங்க?''

''காசு இல்லாமல் இந்த உலகத்தில் ஒன்றுமே நடக்காது. தெரிஞ்சுக்கோ...''

''சரி அப்படியே இருந்தாலும் நான் சம்பாதிக் கிறேன். அதை வைத்து நாங்க இரண்டு பேரும் சாப்பிடுவோம். போதுமா?''

''புருஷன் சம்பாதித்து பெண்டாட்டி சாப்பிடுவது தான் அவனுக்கு கௌரவம். பெண்டாட்டி சம்பாத் தியத்தில் புருஷன் சாப்பிட்டால் அவனுக்கு அது அவமானம்...''

''நீங்க சொல்வது எல்லாம் எந்த காலம்? இப்ப எல்லாம் ஆணும் பெண்ணும் சமம். எல்லா வேலை யும் கணவனும் மனைவியும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான் இந்த கால தர்மம். அதனால், மான அவமானம் பற்றி நீங்க கவலைப்பட வேண டாம்...''

''இது எல்லாம் பேசுவதற்கு நல்லா இருக்கும். நடைமுறைக்கு ஒத்து வராது...''

''அப்பா, பிரபாகர் மேலே உங்களுக்கு என்ன கோபம்? நேரடியா சொல்லுங்க...''

''எனக்கு என்ன கோபம்?''

''இல்லை ஏதோ இருக்கு...''

''நிதர்சனத்தைப் புரிந்து நடக்க மாட்டேன் என் கிறானே என்ற ஆதங்கம் தான். அவன் ஹீரோவாக வேண்டும் என்று முதலில் ஆசைப் பட்ட போது, எனக்கும் குழலிக்கும் அவ்வளவாக சம்மதம் இல்லை. இருந்தாலும் ஆசைப் படுவதில் தவறில்லை. சில நாட்கள் முயற்சி செய்து விட்டு நடைமுறை புரிந்து திரும்பி விடுவான் என்று நம்பி இருந்தேன். ஆனால் இத்தனை ஆண்டுகள் கோடம்பாக்கத்தைச் சுற்றிச் சுற்றி வந்து அடி வாங்கிய பிறகும் அவன் மாற வில்லை. அது தான் எனக்கு எரிச்சல்...''

''அவர் நல்லவர் அப்பா...''

''நான் இல்லை என்று சொல்லவில்லையே? அவன் ரொம்ம்ம்ப நல்லவன் என்பது எனக்கும் தெரியும். சினிமா துறையில் இருக்க ஆசைப் பட் டாலும், இன்று வரை புகை பழக்கமோ, குடி பழக்கமோ இன்றுவரை அவன் கை கொள்ளவில்லை என்பது பெரிய விஷயம் தானே? அந்த விதத்தில் அவன் நல்லவன் என்பதை ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும்.''

''அது மட்டும் இல்லை. அவர் என் மீது உயிரையே வைத்து இருக்கிறார் அப்பா...''

''அது எனக்கு தெரியாது...''

''ப்ச்! விதண்டா வாதம் பண்ணாதீங்க அப்பா.''

''நல்லவன் என்று சொல்வதற்கு நான் சொன்ன மாதிரி புகை பிடிப்பதில்லை, குடிப்பதில்லை,

பெண்களிடம் தகாத சகவாசம் கொள்வதில்லை என்று சில அடிப்படை ஆதாரங்கள் இருக்கு. ஆனால் உன் மீது உயிரையே வைத்து இருக்கிறான் என்பதை நான் எப்படி நம்புவது? அதற்கு என்ன ஆதாரம் சொல்வாய்?''

''என்னப்பா இப்படி சொல்லிட்டீங்க? அவரை எத்தனை வருஷமா பக்கத்தில் இருந்து பார்க்கறீங்க? நான் சிரித்தால் அவரும் சிரிப்பார். என் முகத்தில் ஒரு சின்ன சுணக்கம் வந்தால் கூட தவித்துப் போய் விடுவார். அது உங்களுக்குத் தெரியாதா?''

''அப்படியா? நம்ப முடியலையே?''

''ஏன்? ஏன் நம்ப முடியல?'' என்று ஆவேசமாக கேட்ட மகளை அவளின் ஆத்திரத்துக்கு கொஞ்சமும் குறையாத கோபத்துடன் முறைத்தார்.

''நான் உன்னை கல்யாணத்திற்கு இரண்டு வருடமாக நெருக்கிக் கொண்டே இருக்கிறேன். அதை நீ அவனிடம் சொல்லாமலா இருந்து இருப்பாய்...?''

''சொல்லி இருக்கிறேன். ஒரு முறை இரு முறை இல்லை. ஆயிரம் தடவை சொல்லி இருக்கிறேன். சீக்கிரம் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்க என்று சொல்லி இருக்கிறேன்...''

''என்னை, என் விருப்பத்தை மீறி, அவனைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று சொல்லி இருக்கிறாய்? உனக்கு எவ்வளவு தைரியம்?''

''இல்லைப்பா, நான் கல்யாணம் பண்ணி கொள்கிறேன் என்று சொல்வதற்கு பெரிதாக தைரியம் வேண்டியது இல்லை. ஆனால் நான் உன்னுடன் வருகிறேன் என்று சொன்ன பிறகும், உங்க வருத்தத்தை மனசில் வைத்து, என்னைக் காத்திருக்க சொல்லி அறிவுரை கொடுக்கிறாரே அதற்கு தான் அதிக மன தைரியம் வேண்டும். அவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நான் கொடுத்து வைத்து இருக்க வேண்டும். முதலில் நீங்க மாசத்துக்கு மூன்று வரனைக் கொண்டு வந்து நிறுத்துவதை நிறுத்துங்க. நான் அவர்கள் யாரையும் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லை...''

''பிறகு கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் கன்னியாக நிற்கப் போகிறாயா? நான் உன்னை அவனுக்குக் கல்யாணம் பண்ணித் தர ஒரு காலும் சம்மதிக்க மாட்டேன்...''

''ஏன் சம்மதிக்க மாட்டீங்க? அவருக்கு என்ன குறைச்சல்?''

''சம்பாதிக்கவில்லை என்ற ஒரே குறை தான்...''

''அப்பா கலை துறையில் ஆர்வத்துடன் இருக்கும் ஒரு கலைஞனை பண தராசில் மட்டும் எடை போட வேண்டாம்...''

''சரி நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீயும் அவனும் நாளை எப்படிக் குடித்தனம் நடத்துவீங்க?''

''நான் வேலை பார்க்கிறேனே...''

''நாளைக்குக் குடும்பம் வளர்ந்தால்...''

''அவர் ஒரு படம் நடித்தால் கோடி கணக்கில் சம்பளம் வந்துவிடப் போகிறது...''

''அது வரும் வரை, சில ஆயிரங்களாவது சம்பாதிக்கட்டும். முதலில் தரையில் நிற்க ஆசை படட்டும். அதன் பிறகு வானத்தில் சிறகை விரித்து பறக்கட்டும். அவன் வேண்டாம் என்று நான் சும்மாவா சொல்கிறேன்? ஒரு வேலையைத் தேடிக் கொண்டு மாசம் குடும்பம் நடத்த தேவையான பணத்தைச் சம்பாதிக்கட்டும் அடுத்த நாளே அவனுக்கு நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க நான் ரெடி. அவன் உன் மீது உயிரையே வைத்து இருக்கிறேன் என்று சொல்வது உண்மை என்றால் ஒன்று செய்...''

''என்னப்பா செய்யணும்?''

''அவன் நடிகனாகும் ஆசையைக் கைவிட வேண்டாம். அதற்கு ஒரு பக்கம் முயற்சி செய்யட்டும். ஆனால் மாசம் ஒரு இருபதாயிரம் ரூபாய் சம்பாதிக்கக்கூடிய ஒரு வேலையை தேடிக் கொள்ளட்டும். அந்தக் காசை என்னிடமோ உன்னிடமோ கூட அவன் தர வேண்டாம். அதையே அவனே வைத்துக் கொள்ளட்டும். ஆனால் சம்பாதிக்கும் திறமை தனக்கு இருக்கு என்பதை அவன் என்னிடம் நிரூபித்தே ஆக வேண்டும். அதையும் இன்னும் ஒரு மாசத்துக்குள் செய்து காட்ட வேண்டும். அப்படி அவன் செய்யாவிட்டால், நீ உடனே கல்யாணத்திற்குச் சம்மதம்

சொல்லியாக வேண்டும். அப்படி முடியாது என்றால், அதற்கு பிறகு நீ என்னை உயிருடன் பார்க்க முடியாது'' என்று சொல்லி விட்டு விலகிய தந்தையை திகைப்புடன் பார்த்தபடி நின்றாள் திவ்யா.

12

வசிக்கும் வீடு கடனில் இருக்கிறது என்பதையே ஜீரணிக்க முடியாமல் திகைத்த பிரபாகருக்கு அடுத்து அம்மா சொன்ன வாக்கியம் அதிர வைத்தது.

அடுத்தவர் கையை எதிர்பார்த்து வாழ வேண்டிய நிலை வந்தால் சமுத்திரத்தில் இறங்கி விடுவேன் என்ற அம்மாவின் வார்த்தைகள் அவன் மூளையில் மீண்டும் மீண்டும் எதிரொலித்து, சித்திரவதை செய்தது.

இன்று வரை பணத்தட்டுப்பாடு என்பதை அவன் அறிந்ததே இல்லை. விரும்பிய ஆடை அணிகலன்கள் அன்றே இல்லாவிட்டாலும், அடுத்த சில நாட்களில் கிடைத்தது. ஆசைப்பட்ட பயிற்சிகளை பல ஆயிரங்கள் செலவு செய்து மேற்கொண்டான்.

நினைத்த நேரத்தில் போட்டோ ஷூட் செய்தான். நேரம் காலம் வரை முறை இன்றி கோடம்பாக்கம் பகுதியில் சுற்றித் திரிந்தான். வீட்டுக்கு வந்த நேரம் ஏதோ ஒரு சாப்பாடு காத்திருந்தது.

வேளை கெட்ட நேரம் வந்தாலும் தோசை இரண்டு வகை சட்னி, பொடியுடன் போட அம்மா

காத்திருந்தார். இன்று வரை அவர் முகம் சுழித்து ஒரு வார்த்தைகூடச் சொன்னதே இல்லை. ஆனால் இன்றைய அவரின் அதிரடி வார்த்தைகள் அவனை முடக்கி மூலையில் உட்கார வைத்தது.

மூளை செயல் இழந்து இருந்ததனாலேயே அவனின் அலைபேசி விடாமல் அழைத்தபோதுகூட அவன் அதை கவனிக்கும் மனநிலையில் இல்லை. இருபதாவது முறையாக அழைத்தபோது தான் சுற்றுப்புறம் நினைவு வந்து. மெல்ல அசைந்து மேஜை மேலே இருந்த அலை பேசியை எடுத்துப் பார்த்தான்.

திவ்யா!

ப்ச்! இப்போது இருக்கும் மன நிலையில் இவளுடன் பேச முடியாது. இணைப்பை துண்டிக்க முயன்றபோது கை தவறி பச்சை நிற பொத்தானை அழுத்தி இருக்க அவள் பேசியது காதில் விழுந்தது.

''எவ்வளவு நேரமாகக் கூப்பிட்டுக் கொண்டே இருக்கிறேன். போனையே எடுக்கவில்லை. என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க?'' என்ற திவ்யாவின் அழுகுரல் கேட்டது.

''கவனிக்கலை, என்ன சொல்லு...''

''நான் எவ்வளவு சீரியஸா பேசிக் கொண்டு இருக்கிறேன்? நீங்க இப்படி அலட்சியமா கேட்கறீங்க?''

''ஏய்! நொய் நொய்யுன்னு புடுங்காதே. நானே வெறுப்புல இருக்கேன். என்ன விஷயம் என்று சொல்லு...''

''நான் அதுக்கு மேலே வெறுப்புல இருக்கிறேன். நான் உடனே உன்னைப் பார்க்கணும்?''

''உனக்கென்ன வந்தது? வேலை பார்க்கிறாய். சம்பாதிக்கிறாய். சொந்தக் காலில் நிற்கிறாய். உனக்கென்ன வெறுப்பு?''

''ம்ம், நான் வேலை பார்ப்பதும், சம்பாதிப்பதும் தான் எனக்கு இப்ப வெறுப்பு. போதுமா? நான் உடனே உங்களைப் பார்க்கணும், எப்ப எங்கே வருகிறீங்க?''

''நான் இப்ப எங்கேயும் வருவதா இல்லை, எனக்கு வேலை இருக்கு.''

''ஆமா என்ன பொல்லாத வேலை? கோடம்பாக்கத்தில் இருக்கும் ஒவ்வொரு ஸ்டூடியாவா ஏறி இறங்கப் போகிறீங்க? இன்னிக்கு ஒரு நாள் நீங்க போகவில்லை என்றால் உலகம் நின்று விடாது. நீங்க உடனே கிளம்பி சுதந்திர நாள் பூங்காவுக்கு வாங்க.''

''வர முடியாது. நீ என்ன வேண்டுமானால் செஞ்சுக்கோ...''

''நான் பூங்காவில் ஒரு மணி வரை காத்திருப்பேன். நீ வந்தால் சரி, அது வரை வரவில்லை என்றாள் அப்புறம் நீ என்னை உயிருடனே பார்க்க முடியாது. உன் இஷ்டம்...'' என்று கடுப்புடன் சொல்லி விட்டு திவ்யா போனை வைத்துவிட அவன் வெறுப்பு உச்சத்திற்கு போனது.

அன்றைய தினத்தில் இரண்டாவது முறையாக இதே மிரட்டல் வார்த்தைகளைக் கேட்கிறான்!

இருவருமே அவனுடைய மனத்திற்கு நெருக்கமான வர்கள். அவன் நலனில் அக்கறை கொண்டவர்கள், இருவருமே இதற்கு முன்பு ஒரு நாள் கூட இப்படிப் பேசாதவர்கள்!

என்ன நடக்கிறது அவன் வாழ்வில்? இன்று யார் முகத்தில் விழித்தேன்? என்னதான் அவள் மீது உயிரையே வைத்து இருந்தாலும், இன்றைய முக்கியமான வேலையை விட்டு விட்டு அவள் சொல்லும் இடத்திற்குச் செல்லப் பிடிக்கவில்லை. ஆனால், அவளின் பிடிவாதமான வார்த்தைகளும், அழு குரலும், மிரட்டலும் அவனை மேற்கொண்டு செயல்பட விடவில்லை. பிடிக்கவில்லை என்றாலும் வேறு வழி இன்றி அவள் வரச் சொன்ன இடத்திற்குச் சென்றான்.

எப்போதும் அவனைப் பார்த்த உடனே இரண்டு அடி முன்னால் வந்து மலர்ந்த முகத்துடன் வரவேற்பாள். அவனின் தோற்றத்தைப் பற்றி, முக வசீகரம் பற்றி நாலு வார்த்தை மூச்சு விடாமல் பேசுபவள் இன்று அவள் அமர்ந்து இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. ஒரு வரவேற்கும் புன்னகை கூட இல்லை.

''என்ன ஆச்சு? இப்படி இடி விழுந்த மாதிரி உட்கார்ந்து இருக்கிறாய்?'' என்று எரிச்சலுடன் கேட்டபடி அருகே அமர்ந்தான். அதற்கும் அவளிடம் பதில் இல்லை. ஒரு முறை நிமிர்ந்து பார்த்து அவனை முறைத்துவிட்டு மீண்டும் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்.

''எனக்கு வேணும். இருக்க வேலையை எல்லாம் விட்டுட்டு நீ கூப்பிட்டாய் என்று வந்தேன் இல்லையா? எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டாம். என் புத்தியை...'' என்று எரிச்சலுடன் அவன் சொல்ல, அவள் குனிந்து அவள் காலில் இருந்த செருப்பைக் கழட்டி அவன் முன்னால் நீட்டினாள்.

''ஏய்! என்ன கொழுப்பா? எதுக்கு இப்ப செருப்பை நீட்டுகிறாய்? இதால் என்னை அடித்துக் கொள்ளச் சொல்கிறாயா?''

''நீங்க தானே கேட்டீங்க?''

''ஆமா கேட்டேன். என்னை அடிக்க இல்லை, உன்னை அடிக்கக் கேட்டேன்...''

''அடிப்பீங்க அடிப்பீங்க? நீ செருப்பால் என்னை அடிக்கும் வரை என் கை என்ன பூ பறித்துக் கொண்டு இருக்குமா?''

''வளவளவென்று பேசாதே, எதுக்கு என்னை உயிரே போகும் அவசரத்தில இருக்கிற மாதிரி வர சொன்னாய்?''

''உயிர் போகும் அவசரம் தான், உங்களுக்கு எப்படியோ, எனக்கு உங்களைத் தவிர வேறே ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி எங்க அப்பா சொல்வது உயிரே போவது மாதிரி தான் இருக்கு...''

''ப்ச்! மாமா என்னமோ புதுசா இன்னிக்கு தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்ற மாதிரி

பில்ட் அப் கொடுக்கிற? மூன்று வருஷமா இதையே தான சொல்லிக் கொண்டு இருக்கிறார். அப்ப எல்லாம் சமாளிக்கவில்லையா?''

''அப்ப முடிந்தது சமாளித்தேன். இப்ப முடியல, உங்களிடம் வராமல் வேறே எங்கே போவது? அதுவும் தவிர இன்னும் எத்தனை வருடம் என்னைச் சமாளிக்கச் சொல்றீங்க?''

''முடியவில்லை என்றால் அவர் சொல்கிற மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியதுதானே? நான் ஒன்றும் உன்னைக் கை பிடித்து தடுத்து நிறுத்தவில்லையே?'' என்று அவன் கேட்டு முடிக்கும் முன்பு, போது இடம் என்றும் பாராமல் அவளின் கைப்பையை எடுத்து முதுகில் மூன்று முறை வேகமாக அடித்தாள்.

''அவர் சொல்லும் மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நீங்க என்ன ஐடியா கொடுப்பது? அது எனக்குத் தெரியாதா? நீங்க என்னை விரும்பு றீங்க. என்னைக் கடைசி வரை கண் கலங்காமல் வைத்துப் பார்த்துக் கொள்வீங்க என்று நினைத்து தான உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று இத்தனை நாளா காத்திருந்தேன். எவ்வளவு தைரியம் இருந்தால் இப்ப சர்வ சாதா ரணமா வேறே கல்யாணம் பண்ணிக்கொள் என்று சொல்வீங்க? நீ எல்லாம் மனுஷனா? உனக்கு மனசாட்சி என்று எதுவுமே கிடையாதா?''

''மனசாட்சி எல்லாம் இருக்கு. இருப்பதனால் தான் மனத்திற்குள் எவ்வளவோ வருத்தம் இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு அந்த வார்த்தையைச் சொல்கிறேன். மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்க வேண்டாம் என்று உங்க அப்பா சொல்வது சரிதானே?''

''ஓஹோ இந்த ஞானோதயம், இப்பத்தான் வந்ததா? இத்தனை நாள் உங்க புத்தி புல் மேய போய் இருந்ததோ?''

''இத்தனை நாள் ஆசை அந்த அறிவை விட அதிகமாக இருந்தது. இப்ப தான் உங்க அப்பா சொல்லும் விஷயம் ஆசையை மீறிக் கொண்டு உரைக்கிறது.''

''அப்பா சொல்வது சரி என்று அவ்வளவு தீவிரமா தோன்றினால், அதை ஏற்றுக் கொண்டு வேறு வேலை தேட வேண்டும். அதை விட்டுவிட்டு, வேறே கல் யாணம் பண்ணிக்கோ என்று என்னிடம் சொல்லக் கூடாது. என்னை உயிருடன் சமாதி கட்டக் கூடாது. புரிஞ்சுதா?''

''ஏண்டீ என்னைப் படுத்துற? காலையில் அம்மா கரிச்சுக் கொட்டினது போதாது என்று இப்ப நீயும் ஆரம்பித்து விட்டாயா? ஒரு மனுஷன் எவ்வளவு தான் தாங்குவான்?''

''வலி தாங்கும் கல் தான் சிலை ஆகும். உங் களுக்கு வாழ்க்கையில் சினிமாதான் முக்கியம் என்று நினைத்துக் கொண்டே எட்டு வருஷம் ஓடிப் போச்சு.

இன்னும் சான்ஸ் கிடைக்கவில்லை என்று தேடிக் கொண்டு இருந்தால் உங்க வாழ்க்கையைப் பற்றி அத்தை கவலைப்பட மாட்டாங்களா?''

''கவலைப்பட வேண்டாம் என்று நான் சொல்ல வில்லை. அதற்காக என்ன பேசுவது என்று வரை முறை இல்லையா?''

''என்ன பேசி விட்டார்?''

''எல்லாம் நீ பேசிய அதே குப்பை வார்த்தை தான்...''

''வாட்?''

''ஆமா வாத்து கோழி எல்லாம் இப்ப சொல்லு. அஞ்சு நிமிஷம் முன்னாடி அம்மா சொன்னதையே ஜீரணிக்க முடியாமல் நான் தவித்துக் கொண்டு இருக்கும் போது நீயும் அதே வார்த்தையைச் சொன் னால் என்ன அர்த்தம்?''

''நீங்க உடனடியா ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டும் என்று அர்த்தம்.''

''இது என்னுடைய பல ஆண்டு கனவு திவி...''

''நான் பேசுவது இனி வரப் போகும் நாற்பது ஆண்டு கால நம் கல்யாண வாழ்க்கையை பற்றிக் கொஞ்சம் யோசிச்சீங்களா? உங்களை விட்டு விட்டு இன்னொருவனை நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால், நான் தான் சந்தோஷமாக இருக்க முடி யுமா? இல்லை நீங்க தான் அதை ஏற்றுக் கொண்டு சந்தோஷமா இருக்க முடியுமா? இல்லை நீங்க தான்

அதை ஏற்றுக் கொண்டு சந்தோஷமா இருந்து விடுவீங்களா?''

''அதை அப்புறம் பார்க்கலாம்...''

''எப்புறமா பார்க்கப் போறீங்க? வாழ்க்கையில் முக்கியமான கட்டத்தில் இருக்கோம். கல்யாணம் என்பதை ஒரு அளவுக்கு மேலே எப்படித் தள்ளிப் போட முடியும்? உங்களுக்கு என்ன? நீங்க ஆண் பிள்ளை. முப்பது வயசு வரை கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்கலாம். உங்களுக்கு எப்ப கல் யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று தோன்றுதோ, அப்ப ஏதாவது ஒரு பொண்ணு ரெடியா கிடைக்கும். ஆனால் பெண்ணின் வாழ்க்கை அப்படியா? முப்பது வயசில எங்க அப்பா எனக்கு ஒரு நல்ல மாப்பிள் ளையை எங்கே போய் தேடுவார்?''

''இப்ப என்ன தான் சொல்ல வருகிறாய்? உன் னுடன் உட்கார்ந்து விவாதம் பண்ண எனக்கு மனசும் இல்லை. நேரமும் இல்லை.''

''இன்னும் உங்களுக்கு ஒரே ஒரு மாசம் அவகாசம் தருகிறேன். அதற்குள் ஏதாவது ஒரு படத்தில் நடிக்க ஒரு ஒப்பந்தம் போட்டு விட வேண்டும்.''

''இல்லை என்றால் வேறே ஒரு மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டப் போகிறாயா? எல்லாம் ப்ளான் பண்ணி என்னை ப்ளாக் மெயில் பண்றீங்களா?'' என்று ஆத்திரத்துடன் கேட்க அவள் மறுப்பாகத் தலை அசைத்தாள்.

''நான் யாருடனும் சேர்ந்து ப்ளான் பண்ண வில்லை இன்னொரு மாப்பிள்ளைக்கு கழுத்தை

நீட்டும் உத்தேசமும் எனக்கு இல்லை. அப்படி இருந்தால், நான் இத்தனை ஆண்டுகள் உங்களுக் காக காத்திருக்கத் தேவை இல்லை. உங்களிடம் இங்கே உட்கார்ந்து விளக்கம் சொல்லிக் கொண்டு இருக்கவும் தேவை இல்லை...'

''வேறே என்ன செய்யப் போகிறாய்?''

''நீங்க நடிகனாக மாறினாலும் இல்லை என்றாலும் நான் உங்களைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள் வேன். அதில் மாற்றம் இல்லை'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல அவன் மனசில் லேசாக சந்தோஷம் பரவியது.

''அப்புறம் எதுக்கு இந்த ஒரு மாத கெடு...?''

''ஆற்றில் கொட்டுவதாக இருந்தாலும் அளந்து கொட்ட வேண்டும். என் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. உங்களின் இலட்சிய பயணத்தில் நான் தடை சொல்ல விரும்பவில்லை. ஆனாலும் காலம் யாருக்காகவும் நிற்பது இல்லை. எனக்கு கல்யாணம் பண்ண வேண்டும் என்று என் அப்பா நினைப்பதில் எந்தத் தவறும் இல்லை. அவர் எனக்கு மாப்பிள்ளையாக உங்களை ஏற்றுக் கொள்ள போடும் ஒரே ஒரு கண்டிஷன், நீங்க ஒரு நிலையான சம்பாத் தியத்தைக் காட்ட வேண்டும் என்பது தான். அது கலை உலகில் என்றாலும் மறுப்பு சொல்லப் போவ தில்லை. ஆனால் என்ன மாதிரியான வருமானம் எப்படி எப்போது வரும் என்றே தெரியாத ஒரு

நிச்சயம் இல்லாத நிலையில் உங்களுக்கு எப்படிக் கல்யாணம் பண்ணி தருவார்?'' என்று நீளமாக பேச அவன் முகம் இறுகியது.

''சரி தர வேண்டாம்...''

''உடனே முறுக்கிக் கொள்ளாதீங்க. சொல்ல வருவதை முழுசாக் கேளுங்க. நீங்க நடிகன் ஆகும் இலட்சியத்தை விட வேண்டாம். ஆனால் ஒரு வேலையைத் தேடிக் கொள்ளுங்க. சம்பாத்தியம் என்று ஒரு தொகையை காட்டிக் கொண்டே, நீங்க இன்னும் தொடர்ந்து முயற்சி செய்யலாம். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை.''

''அப்படி தேடும் வாய்ப்பில் ஒரு தீவிரம் இருக்காது. வாங்கும் சம்பளத்திற்கு ஏற்ற வேலையை இங்கே செய்யவும் முடியாது. ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று இரட்டை குதிரையில் பயணம் செய்ய என்னால் முடியாது. எனக்கு விருப்பம் இல்லை.''

''அப்படி என்றால் எனக்கும் வேறு வழி இல்லை. இனிமேலும் எங்க அப்பாவை எதிர்த்துக் கொண்டு நிற்க என்னால் முடியாது...''

''அவர் சொல்லும் பையனைக் கல்யாணம் பண்ணிக்கோ என்று சொல்கிறேனே...''

''அதற்கு நீங்க என்னை செத்து போ என்று சொல்லலாம். ரெண்டும் ஒன்று தான்...''

''திவ்யா...''

''இத்தனை நாள் பழகியும் நீங்க தெரிந்து கொண்டது இவ்வளவு தானா? என் மனசை புரிந்து கொள்ள முயற்சி கூட செய்ய மாட்டீங்களா?''

''ப்ச்! ஏண்டீ என்னைப் படுத்துற?''

''இதுவரை பொறுத்து இருந்தது போதும், இந்தப் பேப்பரைப் பாருங்க...'' என்று சுருட்டி வைத்து இருந்த செய்தித் தாளைப் பிரித்து நீட்டினாள். அதில் ஒரு பேட்டி இருந்தது. பிரபல இயக்குநர், சூரிய சந்தரின் பேட்டி. அந்தப் பேட்டியைப் பார்த்தவன் முகம் மலர்ந்தது.

13

சூரியசந்தர்!

தமிழ் திரை உலகின் துருவ நட்சத்திரம். பதினைந்து ஆண்டு களாக துறையில் கொடி கட்டிப் பறப்பவர். இருபது படங்களை இயக்கியவர். அதில் மூன்று வெள்ளி விழா கொண்டாடியவை. ஒரு படம் தேசிய விருது வாங்கியது. அப்பேர்ப்பட்ட உச்ச இயக்குநரின் பேட்டி அது. அது சொன்ன செய்தி அதைவிட புதுமையானது. இனிமையானது. அவன் இதயத்தில் புத்துயிர் பாய்ச்சியது.

அவர் இயக்கப் போகும் அடுத்த படத்தில் புதுமுகம் ஒருவரை கதாநாயகனாக அறிமுகப் படுத்தப் போவதாகச் சொன்னது. அதற்கான தேர்வு, அடுத்த மாதம் கோடம்பாக்கத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் மூன்று கட்டங்களாக நடக்கப் போவதாகச் சொல்லி இருந்தார்.

தமிழில் பேசக் கூடிய, நடிப்பில் ஆர்வம் உள்ள யார் வேண்டுமானாலும் தேர்வில் கலந்து கொள்ளலாம் என்று அந்தப் பேட்டியில் சொல்லி இருக்க அவ்ன முகத்தில் வெளிச்சம் பரவியது.

''வாவ், அருமையான சந்தர்ப்பம்...'' என்று சந்தோஷமாகச் சொல்ல அவள் அவன் முகத்தைப் பற்றி தன் புறம் திருப்பினாள்.

''ஆமா, அருமையான சந்தர்ப்பம் தான். இதில் நீங்க வெற்றி அடைய வேண்டும் என்று மனசார விரும்புகிறேன். வேண்டுகிறேன்.''

''நிச்சயம் ஜெயிப்பேன் என்ற நம்பிக்கை இருக்கு.''

''உங்க நம்பிக்கை வெற்றி பெறட்டும். அதற்கு என்னுடைய பிரார்த்தனையும் இருக்கும். ஆனால்...''

''ஆனால்... என்ன?'' என்று கவலையுடன் விசாரித்தான்.

''ஒருவேளை நீங்க இந்த தேர்வில் வெற்றி பெறவில்லை என்றால், நீங்க நடிப்பை மறந்து விட்டு, வேறு வேலைக்குப் போகிறேன் என்று எனக்கு வாக்குறுதி அளிக்க வேண்டும்.''

''நான் நிச்சயம் வெற்றி பெறுவேன் திவ்யா...''

''அந்த நம்பிக்கை இருக்கும்போது வாக்கு கொடுப்பதில் உங்களுக்கு என்ன சிரமம்?''

''அது...''

''அது இது எல்லாம் கிடையாது. உங்க கனவை விட, நம்முடைய வாழ்க்கை முக்கியம். அதில்

சந்தோஷம் இருக்க வேண்டும் என்றால் நீங்க இதற்கு சம்மதம் சொல்லி தான் ஆக வேண்டும். எங்க அப்பாவின் உடல்நிலை. உங்க அம்மாவின் நிம்மதி, நம் இருவரின் எதிர்கால சந்தோஷம், இவை எல்லாவற்றுக்கும் சேர்த்து தான் இந்த வாக்குறுதியை நான் கேட்கிறேன். ப்ளீஸ் பிராமிஸ் பண்ணுங்க'' என்று கைகளை நீட்டியபடி அவன் முகத்தையே பார்த்தான் பிரபாகர்.

''அப்படிப் பார்த்தால் என்ன அர்த்தம்? ப்ராமிஸ் பண்ணுங்க என்று சொன்னேன்.''

''அது... எப்படி... உடனே? இது என்னுடைய பனிரெண்டு ஆண்டு கால கனவு திவ்யா. ஒரு மாமாங்கம் என்று சொல்வார்களே அது மாதிரி காத்திருக்கிறேன். அதை இப்படி திடீர் என்று தூக்கிப் போடு என்று சொன்னால் எப்படி?''

''உங்களுக்கு நினைவிருக்கா? நம் முதல் சந்திப்பி லேயே அப்பா உங்களுக்கு ஆதரவாக பேசவில் லையா? ஆனால் இப்ப அவரே உங்க மனசை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் என்றால் இந்த மாற்றம் சும்மா போகிற போக்கில் வந்து போடவில்லை. உங்களுக்காக அவர் எத்தனை ஆலோசனைகள், எவ்வளவு பண உதவி செய்து இருக்கிறார்? அதை எல்லாம் மறந்துவிட முடியுமா?''

''திவ்யா, உங்க அப்பா செலவு பண்ணிய பணத்தை எல்லாம் நான் திருப்பி தந்து விடு வேன்.''

''ஷட் அப். பிரபாகர். நானோ அப்பாவோ நீங்க பணத்தைத் திருப்பித் தர வேண்டும் என்பதற்காகவா சொல்கிறோம்? கொஞ்சம் யோசித்துப் பேசுங்க.''

''வேறே எதுக்காக சொல்றீங்க?''

''எனக்காக, நம் எதிர்கால வாழ்க்கைக்காக, என் அப்பா மற்றும் உங்க அம்மாவின் மன நிம்மதிக்காக, இந்த நிபந்தனையை நீங்க ஏற்றுக் கொண்டாக வேண்டும். செய்வீர்களமா? மாட்டீர்களா?'' என்று அழுத்தம் திருத்தமாக அவன் கண்களுக்குள் ஊடுருவி நேராக பார்த்துக் கேட்டாள் திவ்யா.

அந்தப் பார்வையும் வார்த்தைகளும் அவனுக்குள் பல ரசாயன மாற்றங்களை உருவாக்கியது. அவன் மனத்துக்குப் பிடித்தவள். அவன் நன்மையை நாடு பவள்! தான் எதிர்கால வாழ்க்கையை தன்னுடன் பகிர்ந்து கொள்ள அப்பாவின் எதிர்ப்பை சம்பாதித்த பிறகும் தொடர்ந்து போராடுபவள்! அவளுக்காகச் செய்தால் என்ன? நீண்ட பெருமூச்சு வெளியேறியது. கண்களை இறுக ஒரு முறை மூடி திறந்தான்.

சில கணங்கள் நீண்ட அழுத்தமான அமைதியைக் கிழித்துக் கொண்டு, ''செய்யலாம் திவ்யா... உனக் காக... செய்யலாம்...'' என்று நிதானமாக தெளிவான குரலில் பிரபாகர் சொன்ன அந்த வினாடி சட்டென்று திவ்யாவின் முகத்தில் மலர்ச்சி பரவியது.

''தாங்க் யூ பிரபா, தாங்க் யூ சோ மச். ஐ லவ் யூ உம்ம்மா. ஐ லவ் யூ பிரபா'' என்று அவசரமாக

சொன்னவள், அவன் கன்னத்தில் அழுத்தமாக முத்தமிட்டாள்.

அவளின் சந்தோஷத்தைப் பார்த்த அவனுக்கும் நெகிழ்ச்சியாகவே இருந்தது. ஆனாலும் தான் இத்தனை ஆண்டு கால கனவை விட நேருமே என்ற வருத்தமும் தோன்றியது. சில நிமிடங்கள் கழித்தே அவனின் அமைதி அவளை எட்டியது. அவனின் உணர்வுகள் புரிந்தது.

''இன்று நீங்க எடுக்கும் இந்த முடிவுக்காக நீங்க வருத்தப்பட மாட்டீங்க. சூர்யா சார் படத்தில் நீங்க நடித்து விட்டால் போதும். நடித்து படம் வருவது இருக்கட்டும். ஒப்பந்தமாகி விட்டால் கூடப் போதும். அப்பாவிடம் நம் கல்யாணத்துக்கு சம்மதம் வாங்கி விடுவேன். அவருமே ஒத்துக் கொள்வார்'' என்று அவள் சொன்னபோது எரிச்சல் வந்தது.

''உங்க அப்பாவின் ஆசை, உன் கல்யாணம் இது மட்டும் தான் உன் நினைவில் இருக்குமா? என் ஆசை, ஆதங்கம், லட்சியம் இதைப் பற்றி எல்லாம் உனக்குக் கவலை இல்லையா?'' என்று பற்களின் இடுக்கில் எரிச்சலை அடக்கிய குரலைக் கேட்டான் பிரபாகர்.

''பிரபா, ப்ளீஸ், இப்ப நான் என்ன தப்பா சொல்லி விட்டேன்? உங்க ஆசை நடிப்பது மட்டும்தானா? என்னைத் திருமணம் செய்து கொள்வது கிடை யாதா?

''பாரு, நான் என்ன சொல்கிறேன்? நீ எப்படி அதை திரித்துப் பேசுகிறாய்? குதர்க்கமா ஒவ்வொரு

வார்த்தைக்கும் எதிர் கேள்வி கேட்கும் உனக்கு பதில் சொல்ல இந்த உலகத்திலேயே ஆளே கிடையாது.''

'என் வாயை அடைக்கும் திறமை உங்களுக்கு நிறையவே உண்டு. ஆனால் அதற்கான மூட் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். சரி அதை விடுங்க. நான் உங்களிடம் விவாதம் நடத்த வர வில்லை. நீங்களே பேசுங்க. நான் கேட்கிறேன். உங்களுக்கு என்ன தான் பிரச்னை?''

''எனக்கு என்ன பிரச்னை என்று உனக்குத் தெரி யாதா?''

''எதுக்கு எடுத்தாலும் புலம்பினால் எப்படி? சாதாரணமா பேசவே உங்களுக்குத் தெரியாதா?''

''நீயே சொன்ன மாதிரி இந்த இயக்குநரின் படத்தில் நான் நடிக்க வேண்டும். அந்த இலக்கை அடைய என்ன வழி என்று யோசிக்க மாட்டாயா? இந்த தேர்வில் வெற்றி அடையாமல் போய் விட்டால் என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்கிறாய், அதைப் பற்றிப் பேசுகிறாய். எனக்கு என் லட்சியத்தை அடைய வேண்டும். அதற்கு என்ன வழி என்று அதைப் பற்றிப் பேசாமல், யோசிக்காமல், எதிர் மறை யாகப் பேசினால் எப்படி?''

''ஓகே, சாரி, நீங்க உங்க இலக்கை அடைய என்ன வழி என்று யோசிக்கலாம். நான் என்ன பண்ண வேண்டும் சொல்லுங்க.''

''அவர் ஒரு ஷார்ட் டெம்பர் மனுஷன். எப்ப என்ன செய்வார்? என்ன பேசுவார் என்றே தெரியாது

என்று பல பத்திரிகைகள் சொல்லி இருக்கு. அதை நினைத்து எனக்கு ஒரே டென்ஷனா இருக்கு.''

''எதுக்கு டென்ஷன் ஆகணும்? எப்ப நீங்க நிதானத்தை இழக்கறீங்களோ, அப்பவே வெற்றி உங்க கையில் இருந்து நழுவ வாய்ப்பு இருக்கு. பதறாத காரியம் சிதறாது.''

''ம்கூம், இதெல்லாம் உபதேசமா சொல்ல ஈசியா இருக்கும். என் நிலையில் இருந்து பார்த்தால் தான் என் வலியும் பிரச்னையும் புரியும்.''

''உங்க பிரச்னை என்னை விட வேறு யாருக்கு தெரியும்? உங்க மீது இருக்கும் அக்கறையில் தான் இந்த உபதேசம்! இன்றைய நிலையில் நிதானம் தான் ரொம்ப முக்கியம். இன்னிக்கு சினிமாவில் இருக்கும் முன்னணி கதாநாயகர்கள் எல்லோருமே ஒரு காலத்தில் இவரிடம் குட்டு வாங்கியவர்கள் தான். அவர் கொஞ்சம் வித்தியாசமான இயக்குநர். சினிமா வில் இருக்கும் பல இயக்குநர்கள் மாதிரி சிபாரிசின் அடிப்படையில் தேர்வு செய்வதில்லை. அதைக் கண்டு கொள்ள மாட்டார். திறமையை மட்டும் தான் பார்ப்பார். அதனால் நீங்க நல்லா பண்ணினால் வெற்றி அடைய பிரகாசமான வாய்ப்பு இருக்கு'' என்று அவன் நிலையில் இருந்து பேச, அவன் கோபம் கொஞ்சம் குறைந்தது.

''அது மட்டும் இல்லை. அவரின் அணுகுமுறை கூட வித்தியாசமாக இருக்கும் என்று நினைக்கிறேன். எல்லாரையும் மாதிரி பாடு, ஆடு, வசனம் பேசு என்று

பரிசோதிக்க மாட்டார். நமக்கு நடிப்பு வருமா வராதா என்று எப்படி கண்டுபிடிப்பார் என்று சொல்ல முடியாது. அதனால் அவரை நேரில் பார்க்கும் நேரம் என்று மட்டும் இல்லாமல் எல்லா நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.''

''அவ்வளவுதான். இந்த விவேகம் தான் வேண் டும் பிரபா. உன் வெற்றிக்காக, நீ கொண்டு வரும் சந் தோஷச் செய்தியைக் கேட்க நான் காத்திருக்கிறேன்'' என்று முடிக்க அவன் கவலையுடன் பெருமூச்சு ஒன்றினை வெளியேற்றினான்.

* * *

திவ்யாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரபாகர், குறிப்பிட்ட தினத்தில் காலை ஏழு மணிக்கு டைரக்டர் சூரிய சந்தரின் வீட்டில் ஆஜரானான்.

அந்த காலை நேரத்திலும், அங்கே கூட்டம் அலை மோதியது. எட்டு மணிக்கு வரச் சொல்லி இருந்ததால் வாசல் கேட் கூட இன்னும் திறக்கவில்லை ஆனாலும் அந்த பிரபல இயக்குநரின் வீட்டின் முன்பே குழுமி இருந்த சின்னக் கூட்டத்தைக் கவலையுடன் கவனித் தான் பிரபாகர்.

இன்று கதாநாயகன் தேர்வு நடப்பதால் என்று மட்டும் இல்லாமல், சாதாரண நாட்களிலும் கூட, ஒவ்வொரு நாளுமே அந்த இயக்குனரைப் பார்க்கக் கூட்டம் வருவதுண்டு என்பதால் தெரு முனையில் இந்தக் கூட்டத்தை முன் வைத்து காப்பி டீ பிஸ்கெட்

வடை விற்பனை செய்யும் தள்ளுவண்டி வியாபாரம் களை கட்டி இருந்தது.

காலையில் வீட்டில் காப்பி கூட குடிக்கவில்லை. அம்மா அதிகாலையில் கிளம்பி, திருவேற்காடு மாரியம்மன் கோவிலுக்குச் சென்று இருந்ததால், காப்பி கலந்து குடிக்கும் அளவுக்கு ஆர்வம் இல்லை. ஆனால் போகும் போதும் வெறுமனே கண்களை மூடி தூங்காமல் படுத்து இருந்த அவன் அருகில் அமர்ந்து தனது ஆசியை வழங்கி விட்டே சென்று இருந்தார்.

''பிரபா, வீணாக மனசை போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். நடப்பது எல்லாம் நன்மைக்கே என்று நினைத்துக் கொள்ள வேண்டும். நமக்கு என்ன வேண்டும் என்று நம்மை விட நம்மை படைத்த ஆண்டவனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் இது தான் என் பிள்ளைக்கு வேண்டும் என்று கேட்காமல் என் பிள்ளைக்கு நல்லது எதுவோ அதை தா என்று கேட்டு விட்டு வருகிறேன்'' என்று சொன்னார். அவரின் ஆசீர்வாதம் அத்துடன் நிற்கவில்லை.

''எல்லாம் நல்லபடியாக நடக்கும். அழகு என்பது தோலின் நிறத்திலோ, கண் மூக்கு காதுகளின் அளவிலோ நிச்சயம் இல்லை. அது உள்ளார்ந்த மனத்தின் வெளிப்பாடு. உன் எண்ணங்களில் இருக்கும் நேர்மையும் நியாயமும் அழகாக உன் கண்களில் வெளிப்பட வேண்டும். அதுதான் வெற்றிக்கு அவசியம் தேவை'' என்று அவன் தலையில் தன்

கையை வைத்து வருடி வாழ்த்திவிட்டுப் போனார். அவன் கண்ணில் நம்பிக்கை வந்தது.

வெறும் வயிற்றுடன் கிளம்பி வந்து இருந்தாலும், தற்போது இருக்கும் மன நிலையில் கடையில் காப்பி குடிக்க பிடிக்கவில்லை.

இன்றைய தேதியில் முதல் தர வரிசையில் இருக்கும் இயக்குநர் அவர். இவருடைய கால்ஷீட் டிற்கா முன்னணியில் இருக்கும் நாயகர்களும் நாயகிகளும் வரிசையில் காத்திருக்கின்றனர். ஆனால் அவர் புதுமுகம் தான் வேண்டும் என்று சொல்லி விட்டார். அதனால் தான் இந்த தேர்வு.

இருபது வயது முதல் நாற்பது வயது வரை உள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்கள் குழுமி இருந்தனர். ஒவ்வாருவர் முகத்திலும் நடிகனாக வேண்டும் என்ற கனவு மிளிர்ந்தது.

சிலரின் முகத்தில் நம்பிக்கை! சிலரின் முகத்தில் அவநம்பிக்கை! சுற்றிலும் இருந்தவர்களை பார்க்கப் பார்க்க அவன் மனத்தில் சின்னக் கலவரம் தோன்றியது. அவன் தேர்ச்சி பெறுவானா?

பிரபல பத்திரிகைகள் இயக்குநர் பற்றி எழுதி இருந்த செய்திகள் அவன் மனக்கண்ணில் மின்னி மறைந்தது. அவர் வித்தியாசமான இயக்குநர்.

மோதிர கையால் குட்டுப்பட வேண்டும் என்ற ஆவலுடன் குழுமி இருந்த அந்த கூட்டத்தில் தானும் கலந்தான். ஆசையும் அவநம்பிக்கையும் போட்டி போட்டது. அவர் வெற்றிப் படங்களைத் தரும்

வரையில் அவரை மொய்க்க கதாநாயகனும் கதாநாய கியும் சுற்றி வரத் தயாராக இருக்கிறார்கள்.

பல கோடி சம்பளம் வாங்கும் நாயகர்களே தயாராக காத்திருக்க, அவர் எடுக்கப் போகும் அடுத்த படத் துக்கு புதியவர்களை அறிமுகப் படுத்தப் போகிறேன் என்று பத்திரிகையில் அறிவித்து விட்டார்.

இது தான் அவனுடைய கடைசி முயற்சி! இது வரை கால விரயம் செய்த போதும் நம்பிக்கை இருந்தது. ஆனால் இன்று அது மங்கிவிட்டது. ஒரு பக்கம் தாய், மறு பக்கம் திவ்யா இருவரும் தங்களின் இக்கட்டான சூழ்நிலையை மிரட்டலாகவே சொல்லி விட்டனர். இதில் அவன் வென்றே ஆக வேண்டும்.

நேற்று போட்டி தேர்வில் கலந்து கொள்ள புதிய ஆடை வாங்க, அம்மா ஏற்கனவே தனது கணக்கில் வரவு வைத்து இருந்த பணத்தில் இருந்து மூவாயிரம் ரூபாயை எடுத்தபோது அவன் மனதில் குற்ற உணர்வு தலை தூக்கியது.

பள்ளியில் கல்லூரியிலும் சிலர் கிளப்பி விட்ட நடிகனாக வேண்டும் என்ற ஆசை இப்போது விருட்ச மாக வளர்ந்து நிற்கிறது. ஒன்பது ஆண்டுகளாக அவன் முயற்சி தோற்ற போதும் கூட அவனால் அவன் ஆசையை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

சினிமாவில் கதாநாயகனாகி விட வேண்டும் என்ற ஆசை மேலும் வளர்ந்து நிற்கிறது. பத்தோடு பதி னொன்றாகக் கூட்டத்தில் தலை காட்டும் வேஷம்

மட்டுமே கிடைத்தது. அதை ஏற்றுக் கொள்ள அவன் தயாராக இல்லை.

சுற்றுப் புறத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட, நனவுக்கு வந்தபோது வாசல் கதவு திறந்து இருந்தது. ஒவ் வொருவராக உள்ளே சென்று கொண்டு இருந் தார்கள். அவனும் உள்ளே சென்றான்.

14

ஏற்கனவே இருந்த உதவி இயக்கு நர்கள், போட்டிக்கு வந்தவர்களின் பெயர், விலாசம், அனுபவம் திறமை உள்ளிட்ட விபரங்களை சேகரித்து முடித்த பிறகு பிரபல இயக்குநர் சூரியசந்தர் வந்தார். முன்னறையில் குழுமி இருந்த வர்களைப் பார்த்துப் புன்னகை செய்து கரம் குவித் தார்.

''வணக்கம். திரை துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் வந்திருக்கும் உங்கள் அனை வருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள். இந்த தேர்வு மூன்று கட்டமாக நடைபெறும்.''

''இது பற்றி ஏற்கனவே உங்களுக்கு தேர்ந்து இருக்கலாம். ஆனாலும் இன்னொரு முறை சொல்வது என் கடமை என்று நினைக்கிறேன். தேர்வு எப்படி நடக்கும் என்பது குறித்து உங்களுக்கு ஏதேனும் அபிப்பிராயம் உள்ளதா?'' என்று கேட்டு அவர் அங்கு இருந்தவர்களை அளவிட்டார். ஆனால் ஒவ் வொருவரும் படபடப்பான மனநிலையில் இருக்க பதில் வரவில்லை. அழுத்தமான அமைதி நிலவியது.

''ஓகே, உங்க எல்லாருக்கு ஏற்கனவே தெரிந்து இருக்கும். ஆனாலும் ஏன் அமைதியா இருக்கீங்க என்று தெரியல. ஒரு வேளை நீங்க எல்லாரும் ரொம்ப டென்ஷனா இருக்கீங்க போல., அதனால் நானே சொல்கிறேன்'' என்று சொல்லி இரண்டு கைகளை யும் உயர்த்தி, தோளைக் குலுக்கினார்.

''முதல் நிலையில் உங்களுடைய புறத்தோற்றம் அளவிடப்படும். சினிமாவில் நடிக்க கேமராவிற்கு தேவையான பதினெட்டு முகவெட்டு இருக்கிறதா என்று பார்ப்பார்கள். அதற்கான ஸ்டில்களும், வீடி யோவும் எடுத்துப் பார்ப்பார்கள். அது முதல் ஒரு மணி நேரத்தில் முடிந்து விடும். அந்த முதல் கட்ட தேர்வில் வெற்றி பெறுபவர்கள் இரண்டாம் கட்ட தேர்வுக்கு செல்வார்கள்.''

''இரண்டாம் நிலையில், உங்களின் தமிழ் உச் சரிப்பு மற்றும் முக பாவனைகள் பரிசோதிக்கப்படும். இது அடுத்த ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும். இந்த இரண்டு நிலை தேர்வினையும் என் உதவி இயக்குநர்கள் நடத்துவார்கள். இந்த இரண்டு நிலையிலும் தேர்ச்சி அடைபவர்கள் இறுதி கட்ட சோதனைக்கு வருவீர்கள். மூன்றாம் நிலை தேர்வு நானே நடத்துவேன். முடிவுகள் இன்றே அறிவிக்கப் படும். வாழ்த்துக்கள்'' என்று சுருக்கமாக உரை நிகழ்த்திவிட்டுச் சென்றார்.

மூன்றாம் நிலை தேர்வு என்ன என்பது குறித்து யாருக்கும் தெரியவில்லை. வியர்வையில் உள் ளங்கை பிசுபிசுத்தது.

''அசப்பில் கமல் மாதிரி இருக்கிற; தமிழ் வசன உச்சரிப்பில், சிவாஜிக்கு அடுத்து நீ தான்; சினிமா துறையில் சாதிக்க வேண்டும் என்ற வெறி உன் கண்களில் தெரியுது'' என்று பல நேரங்களில் பல இடங்களில் உசுப்பேற்றி விட்டு இருந்த நண்பர் கூட்டம் இன்று அருகில் இல்லை.

திவ்யாவின் முகம் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது.

''என்ன டெஸ்ட் வைப்பார் தெரியலையே? ஒரு வேளை இந்த டெஸ்டில் தேர்ச்சி அடையா விட்டால்'' என்ற கவலை தோன்றிய அடுத்த வினாடி தலையை சிலுப்பி அவநம்பிக்கையை விரட்டினான்.

என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் வரும் வாழ்க்கையின் சவால்களை சந்திப்பதில் தானே வெற்றி கிடைக்கும்.

பத்தாவது மாடியில் இருந்து குதிக்க சொல்லலாம்.
முதலை முதுகு மேலே சவாரி போக சொல்லலாம்
மூன்றாம் வாய்ப்பாடு சொல்ல சொல்லலாம்.

எதுவானாலும் தயாராக இருக்க வேண்டும் வெற்றி நிச்சயம்!

ஒரு வேளை இந்த தேர்வில் வெற்றி பெறவில்லை என்றால்...?

மனம் ஒரு கணம் தடுமாறியது. அடுத்த வினாடி, அம்மாவின் 'சமுத்திரத்திற்குள் இறங்கி விடுவேன்' என்ற அம்மாவின் வார்த்தைகளும், 'அப்புறம் நீங்க

என்னை உயிருடன் பார்க்கவே முடியாது'' என்ற திவ்யாவின் மிரட்டலும் கண்ணுக்குள் மின்னி மறைந்தது.

இது தான் அவனுடைய கடைசி முயற்சி, இதில் வெற்றி கிடைக்கவில்லை என்றால் நடிகனாகும் தான் ஆசையை மூட்டை கட்டி தூக்கிப் போட்டு விட வேண்டியது தான் என்ற உறுதி எடுத்து கொண்டான்.

பிடிக்கவில்லை என்றாலும் வாழ்வில் நிதர் சனத்தை எதிர்கொண்டாக வேண்டுமே? கண்களில் நீர் துளிர்த்தது, துடைத்து கொண்டு எழுந்த வேளை யில் உள்ளே இருந்த கதவு திறந்தது. அவனது அரை மணி நேர காத்திருப்பு ஒரு முடிவு வந்தது. மேக்கப் டெஸ்ட்டுக்கு வரலாம் என்ற அழைப்பு வந்தது.

ஒன்பது வருடங்களாக நடிகனாக வேண்டும் என்ற ஆவலில், நடை உடை பாவனைகளை அதற்கேற்ப மாற்றி கொண்டு இருந்த பிரபாகரால், முதல் கட்ட மேக்கப் தேர்வினை மிக சுலபமாக கடக்க முடிந்தது.

இன்னும் சொல்ல போனால் முன் தினம் திவ்யா தனக்காக தேர்வு செய்து இருந்த அடர் நீல ஜீன் சிலும், இளமஞ்சள் டீ ஷர்ட்டிலும் மன்மதனாக ஜொலித்தான் என்றே சொல்ல வேண்டும்.

அம்மா சின்ன திரை நடிகை என்பதால் இரத் தத்தில் ஊறி இருந்த ஆர்வத்தாலும், ஆழ் மனத்தில் இருந்த நடிப்பு மோகத்தில், மனப்பாடம் செய்து வைத்து இருந்த பல வசனங்களில், தமிழ் உச்

சரிப்பில், அவன் முகம் காட்டிய நூறு பாவனைகளில் சுலபமாக அடுத்த கட்ட தேர்வினையும் மிக சுலபமாகவே கடந்தான்.

மூன்றாம் கட்ட தேர்வுக்கு அவனையும் சேர்த்து ஆறு பேர் காத்திருந்தனர், பகல் பனிரெண்டு மணி ஆகி இருந்தது!

இறுதி கட்ட தேர்வினை சூரியகுமாரே நடத்துவார் என்று வீட்டுக்குள் அமர வைத்து இருந்தனர். இயக்குநரின் வருகைக்காக அவர்கள் அறை வாசலை பார்த்து கொண்டு இருக்க அவர்கள் பின்புறம் இருந்த ஒரு கதவினை திறந்து கொண்டு உள்ளே வந்தார் சூரியகுமார்.

''மூன்றாம் கட்ட தேர்வுக்கு வந்திருக்கும் நண்பர் களுக்கு வாழ்த்துக்கள்'' என்ற குரல் கேட்டு அடித்து பிடித்து கொண்டு எழுந்தனர். அவரசமாக வணக்கம் சொன்னார்கள்.

''வணக்கம், வணக்கம். உட்காருங்க'' என்று புன்னகையுடன் உபசரித்தவர் ஆறு பேரையும் தலா முப்பது வினாடிகள் என்ற கணக்கில் எடை போட் டார். அந்த அவஸ்தையான மௌனத்தில் நெளி யாமல் ஒரே நிலையில் அமர்ந்து இருக்க மிகவும் சிரமப்பட்டான் பிரபாகர்.

''குட், உங்க ஒவ்வொருவர் முகத்திலும் ஆர்வ மும், கலை தாகமும் தெரியுது. அதை பார்த்தாலே எனக்கும் ரொம்ப சந்தோஷமா இருக்கு. என்னை பற்றி என்ன நினைக்கறீங்க?'' என்று கேள்வி எழுப்ப சில வினாடிகள் அங்கே கனத்த மௌனம் எழுந்தது.

''என்ன ஒன்றுமே சொல்ல மாட்டேன் என் கிறீங்க? ஏதாவது சொல்லுங்க'' என்று மேலும் ஊக்கம் அளிக்க, பிரபாகர் தொண்டையை செருமி கொண்டான். அவன் வார்த்தைகளைத் தேடி பேச ஆரம்பிக்கும் முன்பு அவரே தொடர்ந்தார்.

''என்னை பற்றி பத்திரிகையிலும், சினிமா துறை யிலும் என்ன பேசி கொள்கிறார்கள் என்று தெரியும். நான் எல்லாரும் போகும் பாதையில் பிரயாணம் செய்வதில்லை. எனக்கென்று ஒரு தனி பாதையை உருவாக்க வேண்டும் என்று நினைப்பவன், கொஞ்சம் வித்தியாசமானவன். ம்ம்ம்... அவங்க பாஷையிலேயே சுருக்கமா சொல்லணும் என்றால், கிறுக்கன்'' என்று சொல்லி விட்டு சிரிக்க, இதற்கு சிரிக்கலாமா என்ற குழப்பத்தில் ஆறு பேரும் இருந் தார்கள்.

''அப்படி எல்லாம் இல்லை சார். வித்யா கர்வத்தை சரியாக பலர் புரிந்து கொள்வதில்லை சார். அதை திமிர் என்று சொல்லி விடுகின்றனர்'' என்று வேக மாக பிரபாகர் சொல்ல அவர் திரும்பி அவனை கூர்மையாக பார்த்தார்.

''என்ன ஐஸ் வைக்க பார்க்கிறாயா? இதில் நான் மயங்கி விடுவேன் என்று நினைத்தாயா?'' என்று கடுமையான குரலில் கேட்க அவன் மட்டும் இல் லாமல் மற்றவர்களுமே நெளிந்தனர். எதற்கு இவர் இவ்வளவு கோபம் அடைகிறார்? என்ன பேசுவது என்றே புரியவில்லையே? சூழ்நிலையின் இறுக்கம்

அவனை உந்த, அவன் திகைத்து எச்சில் விழுங்கி னான்.

''இல்ல... சார்... நான் வந்து...''

''பரவாயில்லை விடு. நீ ஒன்றும் சொல்ல வேண் டாம். எல்லாரும் என்னை சூப்பரா நடிச்சு கவர் பண்ணனும் என்று ப்ளான் பண்ணி வந்து இருப் பீங்க'' என்று நிறுத்தி இடைவெளி விட்டார். இதற்கு பதில் சொல்வதா வேண்டாமா என்ற குழப்பத்தில் அனைவரும் அமைதியாக இருக்க அவரே தொடர்ந் தார்.

''நடிப்பை நான் உங்களுக்கு கற்று கொடுப்பேன். ஓரளவுக்கு காமராவுக்கு ஏற்ற தோற்றமும், தமிழ் உச்சரிப்பும் இருந்தால் போதும். அவற்றை ஏற்கனவே எனது உதவி இயக்குநர்கள் பரிசோதித்து விட்டனர். இனி உங்களை நான் பரிசோதனை செய்ய போகி றேன்'' என்று சொல்லி விட்டு பேச்சை நிறுத்தி, கண்ணாடியை கழட்டி ஒரு முறை துடைத்து மீண்டும் அணிந்து கொண்டார்.

''காலையில் சீக்கிரமே வந்து இருப்பீங்க. இவ்வளவு நேரம் அந்த டெஸ்ட் இந்த டெஸ்ட் என்று உங்களை அலைக்கழித்து இருப்பாங்க. முதலில் எல்லாருக்கும் டிபன் தர சொல்கிறேன். சாப்பிடுங்க, காப்பி டீ எதாவது வேண்டும் என்றாலும் கேட்டு வாங்கிச் சாப்பிடுங்க. நான் பதினைந்து நிமிடத்திற்குப் பிறகு வருகிறேன்'' என்று சொல்லி விட்டு வெளி யேறினார் சூரியகுமார். அவர் வெளியேறியதும்

அதுவரை இழுத்து பிடித்து வைத்து இருந்த டென்ஷனை, பெருமூச்சாக வெளியேற்றினார்கள்.

டிபன் வந்தது, கண்களையும் நாவினையும் கவரும் வகையில் இனிப்புகள் இட்லி, பொங்கல் தோசை என்று டிபன் வகைகள் சட்னி, சாம்பாருடன் பரிமாறப் பட்டது. கண்களுக்கு மட்டும் இன்றி நாசிக்கும் நாவுக்குமே விருந்தாக இருக்க கூடிய அந்த உணவு வகை அவன் கவனத்தை ஈர்க்கவில்லை.

காலையில் இருந்து அவன் ஒன்றுமே சாப்பிட வில்லை என்ற போதும் கூட அவனால் சாப்பிட முடியவில்லை. அடி வயிற்றில் ஏதோ பிசைவது போன்ற உணர்வு தொடர்ந்து கொண்டே இருந்தது. அவனைத் தவிர மற்ற ஐந்து பேரும், அடுத்து என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்புடன் சாப்பிட்டு கொண்டு இருந்தனர்.

வாழ்வா சாவா என்று இருக்கும் வேளையில் அவனுக்கு வயிற்றுக்கு உணவு தேவைப்பட வில்லை. அதனால் காப்பி டீ பிளாஸ்க் இருந்த மேஜையை நோக்கி நகர்ந்தான். காப்பி என்று எழுதி இருந்த ப்ளாஸ்கிற்கு சென்று எடுத்தான் பிரபாகர். கப்பில் சாய்க்க அதில் இருந்து ஒரு சொட்டு கூட விழவில்லை. குழப்பத்துடன் மூடியை கழற்றி பார்த்தான். உள்ளே எதுவும் இல்லை. ப்ளாஸ்க் காலி! இதை எதற்கு இங்கே கொண்டு வைத்து இருக் கிறான்? எரிச்சல் தன்னையும் மீறி அவன் முகத்தில் தெரிந்தது.

சரியாக பதினைந்து நிமிடம் கழித்து உள்ளே வந்தார் சூரியகுமார் உள்ளே வந்த போது அறையில் அசாத்திய அமைதி நிலவியது.

அங்கே இருந்த ஆறு பேருமே ஒருவரிடம் ஒருவர் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஒருவர் மற்றவருக்கு போட்டியாளர் என்ற எண்ணம் அடிப்படையில் அவர்கள் மனத்தில் சுழன்று கொண்டு இருந்ததால் இலகுவான நட்பு பாவனை அவர்களுக்கு இடையே வரவே இல்லை.

''ஹலோ, எல்லாரும் சாப்பிட்டாச்சா? சாப்பாடு நல்லா இருந்ததா?''

''ம்ம்ம், ஆச்சு'' என்று குரல் மெலிதாக கேட்டது.

''என்ன சப்தம் கம்மியாக இருக்கு. ஏதாவது பிரச்சனையா?'' என்று எல்லாரையும் மீண்டும் ஒரு முறை நோட்டம் விட்டார். ஆறு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர், ஏற்கனவே பிரபாகர் பேச ஆரம்பித்து மூக்குடைப்பட்ட சம்பவம் அவர்கள் வாயை அழுந்த மூடி வைத்து இருந்தது. பிரபாகர் மெல்ல தொண்டையை செருமி கொண்டான். பேச ஆரம்பிக்கும் முன்பு அருகே இருந்தவன் அவன் தொடையில் கை வைத்து அழுத்த, அது அவர் கண்ணில் பட்டது.

''என்ன தம்பி, என்னவோ சொல்ல வறீங்க. ஏன் யோசிக்கிறீங்க? சொல்லுங்க தம்பி'' என்று ஆரம் பிக்க அவன் தயக்கத்தை விடுத்து பேச ஆரம்பித் தான்.

''நான் காப்பி கேட்டு இருந்தேன்.''

''ஓ! சரி.''

''அவர் தனிப்பட்ட முறையில் தன்னுடன் பேசுகிறார் என்பது அவனுக்கு எதிர்பாராத நிறைவை தந்தது. சில நிமிடங்கள் முன்பு, காரணமே இன்றி அவர் கடுமையாக பேசியதால் வந்த காயத்துக்கு இந்த பேச்சு மருந்தாக அமைந்தது.

''காப்பி என்று எழுதப்பட்டு இருந்த பிளாஸ்க் காலியாக இருந்தது. ஒன்றுமே இல்லை'' என்று தாங்கலுடன் சொல்ல அவர் முகத்தில் கோபம் தோன்றியது.

''வாட்? அப்படியா? இவர் சொல்வது நிஜமா? வேறே யாராவது காப்பி குடித்தீர்களா? காப்பி காலி யாகி விட்டதா? இல்லை வைக்கவே இல்லையா? வேறே யாருக்காவது இப்படி ஆச்சா?'' என்று கோபத் துடன் கேட்க, இன்னும் இரண்டு பேர் தயக்கத்துடன் கையை தூக்கினார்கள்.

''சமையல்காரரை கூப்பிடு'' என்று கோபத்துடன் கர்ஜித்தார், வந்த உடனே கோபமாக முறைத்தார்.

''என்னய்யா வேலை பார்க்கிறாய் நீ? வந்தவங் களுக்கு ஒழுங்கா காப்பி டீ கொடுக்க கூட துப்பில் லையா? உங்க அப்பன் வீட்டு சொத்தா பாழாக போகிறது? வேகமா இவங்களுக்கு என்ன வேண் டுமோ அதை சீக்கிரம் கொடு'' என்று கத்தினார், காப்பி வந்தது.

''நீங்க ஆசையா காப்பியை தேடிய போது உங்களுக்கு ஏமாற்றம் நிகழ்ந்து விட்டது. அதற்காக உங்களிடம் என் சமையல்காரர் சார்பில் மன்னிப்புக் கேட்டு கொள்கிறேன். வாங்க. வந்து காப்பி எடுத்து கொள்ளுங்க'' என்று உபசரித்தார். குடித்து முடித் ததும், கை கூப்பி புன்னகை செய்தார்.

''தேர்வு முடிந்தது. அதில் நீங்க மூன்று பேரும் அவுட். அதில் பிரபாகர் நீ முதலாவது ஆள்'' என்று அறிவிக்க அவன் அதிர்ந்தான்.

கண்களை இருட்டி கொண்டு வந்தது. மூச்சு முட்டியது. தலை சுற்றியது. அகில உலகமும் அவன் தலையில் இடிந்து விழுந்ததை போல ஒரு உணர்வு தோன்றியது.

15

சில வினாடிகள் முன்பு வரை மலர்ந்த முகத்துடன், தானே தன் கையால் காப்பி கலந்து கொடுத்து, 'குடி' என்று உபசரித்தவர் அடுத்த சில வினாடிகளில் தேர்வு முடிந்து விட்டது என்று சொன்னதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

''சார்...? என்ன சார் சொல்றீங்க? யாரை தேர்ந் தெடுத்தீங்க? எப்படி சார் தேர்வு பண்ணினீங்க?'' என்ற பிரபாகரின் அதிர்ச்சியான கேள்வி அவரை எரிச்சலுக்கு உள்ளாக்கியது.

''யாரை வேண்டுமானாலும் எப்படி வேண்டு மானாலும் தேர்ந்தெடுப்பேன். அதை உன்னிடம்

சொல்ல வேண்டும் என்ற அவசியம் எனக்கு இல்லை.''

''எந்த தேர்வு முறையிலும் ஒரு நியாயம், வெளிப்படை தன்மை இருக்க வேண்டும். நீங்க யாரை, எந்த அடிப்படையில் தேர்வு செய்தீர்கள் என்பது எனக்குத் தெரிந்தாக வேண்டும். அது தெரியாமல் நான் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன்'' என்று அழுத்தம் திருத்தமாக கேட்டான்.

அவனுக்கு இது வாழ்வா சாவா என்ற போராட்டம் ஆயிற்றே! இந்த விஷயத்தை எளிதில் விட முடியவில்லை.

''ஓஹோ! காரணம் தெரியாமல் இந்த இடத்தில் நகர மாட்டாயா? நீ கேட்கும் கேள்விக்கு தாராளமாக பதில் சொல்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் நான் கேட்கும் கேள்விக்கு நீ பதில் சொல்லு. இங்கே நீ எதுக்கு வந்தாய்?''

''சார்.''

''பதில் சொல்லு, இங்கே நீ எதுக்கு வந்தாய்?''

''உங்க படத்தில் நடிக்க புது முக நடிகன் ஒருவரை தேர்ந்தெடுக்க போகிறீர்கள் என்று கேள்விப்பட்டு வந்தேன்.''

''ம்ம்ம், நடிகன் ஆகும் தேர்வுக்கு வந்தாயா? காப்பி டிபன் சாப்பிட வந்தாயா?''

''சார்.?''

''என்ன சார் மோர்? சாருக்கு என்ன வைத்து இருக்கிறாய்?''

''நீங்க தானே சாப்பிட சொல்லி உபசரணை செய்தீர்கள். சாப்பாடு எப்படி இருந்தது என்று விசாரணை செய்தீர்கள். அதனால் தானே.''

''ஆமா சொன்னேன். நான் சாப்பிடு என்று சொன்னது நினைவில் இருக்கு. ஆனால் அதற்கு முன்னால் உங்களை நான் பரிசோதனை செய்யப் போகிறேன் என்று சொல்லவில்லையா? அது உன் நினைவில் இல்லையா?''

''ஆ... மா...''

''உங்களை சாப்பிட சொன்னது ஒரு பரிசோதனை. உங்களுக்கு காப்பி இல்லாத பிளாஸ்க் கொடுத்தது ஒரு செட் அப்.''

''சா...ர்?''

''உங்களுக்கு வைக்கப்பட்ட பரிசோதனையே அது தான். அதுல காப்பி டீ இல்லை என்றாலும் இருப்பதாக நினைத்து கொண்டு நீங்க நடித்து இருக்க வேண்டும். ஜாக்கிரதையா பிளாஸ்கில் இருந்து காப்பியை கப்பில் ஊற்றி இருக்க வேண்டும். அதை ரசித்து குடிக்கிறது போல நடித்து இருக்க வேண்டும். அந்த பாவனையை நீ செய்து இருந்தால் எனக்கு சந்தோஷமாக இருந்து இருக்கும்'' என்று அவர் பேசப் பேச பிரபாகருக்கு கண்களை இருட்டி கொண்டு வந்தது. இவர் என்ன சொல்கிறார்? தன் வாழ்க்கை வெளிச்சத்தை முடித்து விடுவார் போல இருக்கே?

''சார், இந்த சின்ன விஷயத்துக்காக எங்களால் நடிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்து விடுவீர்களா? அதையே செய்து காட்ட சொன்னால் அற்பதமா பண்ணி விட மாட்டோமா?''

''நீ ரொம்ப பேசுகிறாய்.''

''சார். இது எங்க எதிர்கால வாழ்க்கை பிரச்சனை சார். பேசாமல் எப்படி இருக்க முடியும்? அப்ப எங்க அழகு, திறமை இதுக்கெல்லாம் ஒரு அர்த்தமும் கிடையாதா? எனக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் கொடுத்து தான் பாருங்களேன்.''

''இன்னும் ஒரு சந்தர்ப்பமா? ஏற்கனவே முதல் சுற்றில் நீ அவுட். இதில் எதிர்த்து பேசி கேள்வி வேறு கேட்கிறாய்? இன்னும் உனக்கு சந்தர்ப்பமே கிடைக்க வில்லை. இப்பவே இந்த போடு போடுகிறாயே? நாளைக்கே நீ பெரிய ஸ்டார் ஆகி விட்டால் என்ன எல் லாம் கேள்வி கேட்பாயோ? எனக்கு என் கற்பனையை நான் விரும்பிய வகையில் உருவாக்க தன்னை முழுசாக ஒப்படைப்பு செய்யக் கூடிய ஒரு பச்சை களிமண் கதாபாத்திரம் தான் தேவை. உன்னை மாதிரி அது புத்திசாலிகள் இல்லை. நீ கிளம்பு. இதுக்கு மேலே எதுவும் பேசத் தேவை இல்லை.''

''நான் காப்பி ப்ளாஸ்க் காலி என்று சொன்னது தப்பு தான். அதற்காக வேண்டுமானால் நான் மன்னிப்பு கேட்டு கொள்கிறேன். ஆனால்...''

''இங்கே பார், இது என் இடம், நான் எடுக்கப் போவது என் சொந்த தயாரிப்பில் ஆன படம். இதுக்கு

உரிய ஆளை தேர்வு செய்வது என் உரிமை. என்னை கேள்வி கேட்க உனக்கு எந்த உரிமையும் இல்லை. அடுத்த முறை வாய்ப்பு இருந்தால் பார்க்கலாம். இப்ப கிளம்பு'' என்று முடிக்க, தொங்கிய முகத்துடன் வந்தான் பிரபாகரை எதிர்கொண்டாள் திவ்யா.

''பிரபா என்ன ஆச்சு?'' என்று அவன் தோளை பற்றி கேட்க அவன் அவளின் முதுகை பற்றி வேகத் துடன் தள்ளினான்.

''இன்னும் என்ன ஆகணும்? அந்த கிறுக்கன் வைச்ச தேர்வில் நான் பாஸ் ஆகலை. நடிகனாக வேண்டும் என்ற கனவு பலிக்கவில்லை, போதுமா? உன் முகத்தை பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை. என்னைத் தொந்தரவு பண்ணாமல் இந்த இடத்தை விட்டுக் கிளம்புகிறாயா?''

''பிரபா, உங்களுக்கு மூட் சரி இல்லை என்று புரியுது. ஆனால் எதுவா இருந்தாலும் வீட்டில் போய் பேசி கொள்ளலாம், வாங்க'' என்று கை பற்றி இழுத்த படி அருகே சென்ற ஆட்டோவுக்கு கை காட்டி வரவழைத்தாள்.

''நீ இழுத்த இழுப்புக்கு வர நான் ஒன்றும் பொம்மை இல்லை. ஆசா பாசங்களை உள்ள தனி மனிதன். உனக்காக நான் எதையும் விட்டு தர முடியாது. நீ உன் வழியை பார்த்துக் கொண்டு போ. என்னை நிம்மதியாக இருக்க விடு'' என்று வெறுப் புடன் சொன்னவன் அவளின் கையை உதறி விட்டு

வேகமாக நகர திக் பிரமையுடன் அவன் போன திசையை பார்த்த படி நின்று இருந்தாள் திவ்யா.

* * *

இரவு பத்து மணி!

படுக்கையில் புரண்டு கொண்டு இருந்த திவ்யாவுக்கு தூக்கம் வரவில்லை. பிற்பகல் இரண்டு மணி அளவில் தான் கை பிடியில் இருந்து விலக்கி பிரபாகர் சென்றதில் இருந்தே அவளுக்கு மனம் சரி இல்லை. அவன் சென்ற தேர்வு தோல்வியில் முடிந்து விட்டது என்பதை அவனது முக பாவனையே சொல்லி விட்டது. ஆனாலும் அவன் வெறுத்து போகும் அளவுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லையே என்ற மனம் அலை பாய்ந்தது.

இதுவே கடைசி முயற்சி என்று அவனிடம் சொல்லி இருந்தது அவளின் மனதை மேலும் புண்படுத்தியது. அவனின் பல ஆண்டு கால கனவினை அவன் அவ்வளவு சீக்கிரம் விட்டு விடுவானா?

அப்பாவுக்கும் அவனுக்கும் இடையே மனசு அல்லாடியது. போன் பண்ணினாலும் எடுக்க மாட்டேன் என்கிறானே? அவள் படுக்கையில் ஆயிரமாவது முறையாக புரண்ட போது அவளின் மொபைல் அழைத்தது. பாய்ந்து எடுத்தாள். பிரபாகரின் வீட்டு எண்!

''அத்தை, பிரபா வந்தாச்சா?'' என்று அவள் கேட்ட அதே வினாடி. 'திவ்யா, பிரபா அங்கே இருக்கானா?' என்ற கேள்வி பூங்குழலியிடம் இருந்து வெளி வந்தது.

''இல்லை அத்தை. இன்னும் வீட்டுக்கு வரவில்லையா?''

''நீ எப்ப வந்தாய்?''

''நான் மூன்று மணிக்கே வந்து விட்டேனே.''

''என்ன திவ்யா சொல்கிறாய்? அப்ப பிரபா ஏன் இன்னும் வரவில்லை? கோவிலில் இருந்து வந்ததும் மதியம் இரண்டு மணிக்கு போன் பண்ணும் போது ஒரு முறை பேசினான். அடுத்த முறை போன் பண்ணிய போது ஸ்விட்ச் ஆப் ஆகி விட்டது. எங்கே போனானோ தெரியலையே?''

''நான் கோடம்பாக்கத்தில் அவருடைய வீட்டிற்கு நேரில் சென்று இருந்தேன். நேர்முக தேர்வு முடிந்து அவர் வெளியே வந்த போது பார்த்தேன் அத்தை. அப்ப அவர் முகமே சரி இல்லை. நான் வீட்டுக்கு கூப்பிட்ட போது கோபமாக பேசி விட்டு சென்று விட்டார்.

''கோபமாகவா? ஏன்...?''

''அவரின் முக பாவனையில் இருந்து அவர் தேர்வாகவில்லை என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.''

''அப்ப சான்ஸ் கிடைக்கவில்லையா? அய்யோ இவ்வளவு நேரம் நீ அவனுடன் கூட இல்லையா? அதை ஏன் நீ போன் பண்ணி முன்பே சொல்லவில்லை? நானாக போன் பண்ணும் வரை நீ என்ன பண்ணி கொண்டு இருந்தாய்? அவனை பற்றி எந்த அக்கறையும் உனக்கு இல்லையா?'' என்று படபடக்க அவளுக்கும் அந்த பதட்டம் தொற்றி கொண்டது.

''நான் மதியம் மூன்று மணி அளவில் போன் பண்ணினேன். நீங்க எடுக்கவில்லை. அவர் உங்களுடன் இருக்கிறார் என்று நினைத்து நான் திரும்ப போன் பண்ணவில்லை. பயப்படாதீங்க அத்தை, வழக்கமா அவர் பெசண்ட் நகர் பீச்சுக்கு தான் போவார். அங்கே சத்யாவை விட்டு செக் பண்ண சொல்கிறேன்.''

''பீச்சுக்கு கடவுளே!'' என்று குழலி அலற அவள் பதறினாள்.

''என்ன அத்தை, எதுக்கு இப்படி சத்தம் போடு றீங்க? என்ன ஆச்சு?''

''நான் மதியம் போன் பண்ணிய போது, அவன் 'நீங்க நினைத்தது நடந்து விட்டது. உங்களுக்கு சந்தோஷம் தானே? இப்ப போனை வையுங்க. என்னை தனியாக இருக்க விடுங்க' என்று மிக மெதுவான குரலில் சொன்னான். நான் சான்ஸ் கிடைத்து விட்டது. உன்னிடம் தனியாக இருக்க விரும்புகிறான் என்று நினைத்து விட்டேன். அதனால் தான் நான் தொந்தரவு செய்யவில்லை. ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று நீ சொன்னதும் எனக்கு அடி வயிறு பற்றி எரிகிறதே? இப்ப பீச்சில் இருப்பான் என்று வேறு சர்வ சாதாரணமாக சொல்கிறாயே திவ்யா?''

''அத்தை ப்ளீஸ் கொஞ்ச நேரம் அமைதியா இருங்க. அவருக்கு ஒன்றும் ஆகி இருக்காது.''

''அவன் இருக்கும் மனநிலை புரியாமல் நான் வேறே அசால்ட்டாக பேசி விட்டேனே? இந்நேரம் எங்கே இருக்கிறானோ? என்ன செய்கிறானோ தெரியலையே? கடவுளே! எல்லாம் என்னால் தான். அவன் இன்றைய தேர்வினை ரொம்ப முக்கியமாக நினைத்து இருந்தான். அதில் ஏமாற்றம் என்றதும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.''

''உங்களால் இல்லை அத்தை. நான் தான் அவரை உடனே கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் ரொம்ப டார்ச்சர் பண்ணி விட்டேன்.''

''நீ மட்டும் இல்லை. நானும் என் பங்கிற்கு பணம் இல்லை என்று படுத்தி எடுத்து விட்டேன். அதை எல்லாம் மனசில் வைத்து இப்ப அவன் எங்கே போனான் என்ன செய்கிறான் என்று ஒன்றுமே தெரியவில்லை. ரொம்ப பயமா இருக்கு திவ்யா.''

''பயப்பட வேண்டாம் அத்தை. நான் இப்பவே என் ப்ரெண்ட் சத்யா என்று ஒருவர் இருக்கிறார். அவரை விட்டு பீச்சில் தேடிப் பார்க்க சொல்கிறேன்.''

''நீ என்ன அடுத்தவங்களை விட்டு பார்க்க சொல்வது? என் பிள்ளையை நானே பார்த்து கொள்கிறேன். நானே கிளம்பி வருகிறேன்.''

''இல்லை அத்தை, நீங்க இந்நேரத்தில் தனியாக கிளம்பி அலைய வேண்டாம். நான் அவரை உங்க வீட்டில் கொண்டு வந்து சேர்த்து விடுவேன். அப்பா இருக்கும் மன நிலையில் இன்றைய விவகாரம் தெரிந்தால் இன்னும் கோப படுவார். சொல்ல வேண்டாம் என்று பார்க்கிறேன்'' என்று சொல்லி

கொண்டு இருக்கும் போதே எதிர்முனையின் போன் வைக்கப்பட்டு இருந்தது.

அவர் ஆடாவிட்டாலும் அவரின் தசை ஆடியது!

பல ஆண்டுகளுக்கு முன்பு கலை ஆர்வத்தில் தான் வீட்டை விட்டு வெளியே வந்ததும், வெற்றி அடையா முடியாமல் திணறியதும், தான் நம்பி வந்த கானல் நீர் கடல் நீரில் கரைந்து போனதும் மின்னலாக வெட்டி மறைந்தது.

மூன்று கிலோமீட்டர் தூரத்தை பத்து நிமிடத்தில் ஓட்டமும் நடையுமாக கடந்து திவ்யா சொன்ன பெசண்ட் நகர் பீச்சுக்கு வந்து சேர்ந்தார். கண்கள் அலை வந்து மோதும் கடல் கரையை கண பொழுதில் அலசியது. அடுத்த மூன்றாவது நிமிடம் பிரபாகரை கண்டு பிடித்து விட்டார். ஆனால் அவன் படுத்து இருந்த இடமும் விதமும் அவர் வயிற்றில் புளியை கரைத்தது.

16

பிற்பகல் இரண்டு மணி அளவில் சூரியகுமாரின் வீட்டில் இருந்து கோபத்துடன் வெளியேறிய பிரபாகர் கோடம்பாக்கத்தில் இருந்து கால் போன போக்கில் நிற்காமல் நடந்தான்.

கண் மண் தெரியாமல் இலக்கின்றி சுற்றியவனின் கால் கடுமையாக தளர்ந்து வலி தோன்றியது. எங்கே இருக்கிறான் என்று சுற்றும் முற்றும் பார்த்தான்.

பெசண்ட் நகர்.

அவனுடைய அம்மாவுக்கு பிரியமான முருகன் கோவில்! ஆறு படை முருகனின் திருத்தலங்கள் அனைத்துக்கும் தனி தனியாக சென்று வரும் அம்மாவுக்கு ஏனோ இந்த முருகன் கோவிலுக்கு வர பிடிப்பதில்லை. அவர் முருகனின் தீவிர பக்தை. அவனுக்காக எத்தனை விரதங்கள்! எத்தனை வேண்டுதல்கள்? அத்தனையும் வீணாக போய் விட்டதே? அவன் கண்கள் ஒரு வினாடி கலங்கியது.

எங்க அம்மா உன்னை எத்தனை முறை எப்படி எல்லாம் விரதம் இருந்து வழிபட்டு இருக்காங்க? எனக்காக இல்லை என்றாலும் அவங்க சந்தோஷத்துக்காகவாவது எனக்கு இந்த வாய்ப்பை பெற்று தந்து இருக்கலாம் இல்லையா?

அவங்க நம்பிக்கையை அடியுடன் சீர் குலைத்த உன்னை போய் கடவுள் என்று சொல்வதா? சை என்று வெறுப்புடன் புலம்பியபடி கடற்கரை மணலில் சென்று அமர்ந்தான். நேரம் சென்று கொண்டே இருந்தது, வெயில் குறைந்து மாலை நேரமானது. வெளிச்சம் மறைந்து இருள் பரவியது. ஆனாலும் அவன் நிலையில் மாற்றம் இல்லை.

மல்லாந்து மணலில் படுத்தவன் உள்ளம் கொதித்து கொண்டு இருந்தது. உலகில் உள்ள அனைவரையும் வசை பாடினான்.

கலை ஆர்வம் தனக்குள் வர காரணமாக இருந்த தாயின் பரம்பரை அணுக்களை வசை பாடினான்.

திவ்யாவின் மீது தனக்கு வந்த காதலை வசை பாடினான்.

அவளை தனக்குத் திருமணம் செய்து கொடுக்க, தான் சம்பாதிக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்த மாமனை திட்டினான்.

காலையில் இருந்து ஒரு கப் காப்பி தவிர வேறு எதுவுமே சாப்பிடாதது, கிட்டத்தட்ட பத்து கிலோ மீட்டர் தூரமாவது கண் மண் தெரியாமல் நடந்ததனால் வந்த களைப்பு, அன்றைய நிகழ்வுகளினால் வந்த ஏமாற்றம், எல்லாம் சேர்ந்து, பொங்கி வந்த இருளும், கடற்கரை காற்றும் சேர்ந்து தாலாட்ட, தன்னிலை மறந்து கண் அசந்து விட்டான்.

''பிரபா'' என்று அவன் மார்பில் முதலில் மென்மையாகவும், பிறகு அழுத்தமாகவும் பல முறை தட்டிய பின்பே அவன் கண் விழித்தான்.

விழித்த உடனே முதலில் அவன் எங்கே இருக்கிறான் என்ற சூழலே புரியவில்லை. சுற்றிலும் படர்ந்து இருந்த இருள் தூரத்தில் வரிசையாக மங்கிய ஒளி பரப்பிய தூரத்து தெரு விளக்குகளும், மிக அருகே உரத்து ஒலித்த அலைகளின் ஓசையும், கண் அருகே தெரிந்த தாயின் முகமும் அவனை முதல் வினாடி குழப்பத்திற்கு ஆளாக்கியது.

''அம்மா... நீங்க எங்கே இங்கே?'' என்று விசாரித்தபடி வேகமாக எழுந்து அமர்ந்தான்.

''அதை நான் கேட்கணும், மணி பத்து ஆகிறது. இந்நேரம் வரை வீட்டுக்கு வராமல் நீ இங்கே என்ன

செய்து கொண்டு இருக்கிறாய்?'' என்று அழுத்தம் திருத்தமாக கேட்ட வினாடி, அவனுக்கு பிற்பகல் நினைவுகள் மின்னலாக தோன்றியது.

''ப்ச்! நான் என்ன பல் முளைக்காத பாப்பாவா? இல்லை பருவ வயதில் இருக்கும் கல்யாணம் ஆகாத கன்னி பெண்ணா? எனக்கு வீட்டுக்கு வர தெரியாதா? இந்த நேரம் கெட்ட நேரத்தில் உங்களை யார் தனியாக இங்கே வர சொன்னது? என்னை காணோம் என்று அவள் அழுது புலம்பினாளா?'' என்று பல்லை கடிக்க அவன் தோளை தட்டி அமைதி படுத்த முயன்றார்.

''நீ எதை எதையோ கற்பனை பண்ணிக் கொள்ள வேண்டாம். யாரும் அழவும் இல்லை. புலம்பவும் இல்லை. நீ இங்கே இருக்கியா என்று பார்க்க தான் வந்தேன்.''

''பார்த்தாச்சு இல்லையா? முழுசா தான் இருக்கிறேன். கிளம்புங்க'' என்று எரிச்சலுடன் சொல்ல அடுத்த வினாடி அவர் அந்த இடத்தில் இருந்து எழுந்து சென்று விட, அவன் திகைப்புடன் பார்த்தான். கண்ணில் கண்ட காட்சியை அவனால் நம்ப கூட முடியவில்லை.

ஏழு எட்டு மணி நேர தனிமையும், மனம் பட்ட பாடும், தோல்வியில் துவண்ட மனமும், ஆறுதல் தேடி அலை பாய்ந்த நேரத்தில் ஆதரவு கரம் நீட்ட அம்மா வந்து விட்டார் என்ற சந்தோஷம் சில நிமிடங்கள் கூட நீடிக்கவில்லை என்ற ஆதங்கம் தோன்றியது.

பெற்ற தாயால் இப்படி விட்டேற்றியாக இருக்க முடியுமா? போ என்று ஒரு வார்த்தை சொன்ன உடனே இருந்த இடத்தை விட்டு ஒரு வார்த்தை பேசாமல் விலக முடியுமா?

பதில் பேசுவதென்ன? ஏண்டா இப்படி பேசு கிறாய்? என்று ஒரு அடி கொடுத்து இருந்தால் கூட அவரை கேள்வி கேட்க முடியுமா? ஆனால் அவர் ஏன் இப்படி பேசாமல் விலகி சென்று விட்டார்?

பெற்று வளர்த்த அன்னை!

நடிகன் ஆக வேண்டும் என்ற தன் ஆசையை நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்த மாமன்.

வாழ்க்கையின் இன்ப துன்பத்தில் இணை பிரி யாமல் கூட இருப்பேன் என்று வாக்குறுதி அளித்த மாமன் மகள்.

இவர்களில் ஒருவர் கூட தான் துயரத்தில் இருக்கும் போது தோள் சேர்த்து ஆதரவு கரம் நீட்ட மாட்டார் களா? இவர்களே மனம் மாறி பேசும் போது யாரை நொந்து கொள்வது?

மீண்டும் கைகளை தலைக்கு அணையாக வைத்து மல்லாந்து மணலில் படுத்தான். இப்போது தூக்கமும் வரவில்லை. வானத்தில் தெரிந்த நட்சத்திரங்களை இலக்கின்றி வெறித்தான்.

அமாவாசை முடிந்து சில நாட்கள் தான் ஆகி இருக்க வேண்டும். அதனால் நிலவு பிரகாசமாக இல்லை. சின்ன பிறையாக கண் சிமிட்டி கொண்டு இருந்தது.

இதே மாதிரி தான் வாழ்க்கையும் நிலவு மாதிரியே வளர்வதும் தேய்வதுமாக இருக்கிறதே? திரையில், தன் பெயர் மின்ன வேண்டும் என்ற லட்சியம் நிறைவேறாமல் போய் விடுமா? என்ற எண்ணம் எழுந்து அவன் கண்களில் நீர் துளிக்க வைத்தது.

அது அவனின் பல ஆண்டு கனவு! அவனது நேரம் மட்டும் இன்றி, பணமும் எவ்வளவு செலவு செய்து இருக்கிறான்? பார்த்துப் பார்த்து வளர்த்த ஆடல், பாடல், சண்டை பயிற்சி, மொழி பயிற்சி போன்ற திறமைகள் அவனை சுற்றி நின்று கை கொட்டி சிரித்தது.

கண்களை மூடி அவன் சிந்தனையில் ஆழ்ந்து இருந்த போது, அருகே யாரோ வந்து அமரும் அரவம் கேட்டது. கண்களை திறந்தவன் ஒரு கணம் திகைத்து போனான். அங்கே இருந்தது அம்மா, அவர் கையில் ஒரு ப்ளாஸ்டிக் தட்டு, அதில் மூன்று இட்லி, ஒரு கிண்ணத்தில் சாம்பார். அருகே எங்கோ சாலை ஓர உணவகத்தில் வாங்கி வந்து இருக்க வேண்டும். தாய்மை என்றுமே தன் இயல்பை மாதிரி கொள்வ தில்லை.

''அம்மா நீங்க இன்னும் இங்கே தான் இருக் கீங்களா?''

''ஏன்? உன்னை இங்கேயே தனியாக விட்டு விட்டு போய் விடுவேன் என்று நினைத்தாயா? நான் உன்னை பெற்ற அம்மாடா. உன் முகம் பார்த்தால் உன் நிலை உணர முடியும். காலையில் இருந்து நீ

ஒன்றும் சாப்பிடவில்லை என்பது புரிந்தது. முதலில் சாப்பிடு.''

''வேண்டாம்.''

''பிரபா... கொஞ்சம் நிமிர்ந்து என்னை பாரு.''

''ப்ச்!''

''இப்ப என்ன ஆச்சு? கப்பல் கவிழ்ந்து விட்டதா?''

''ஆமா, என் வாழ்க்கை கப்பல் கவிழ்ந்து தான் போய் விட்டது.''

''ஒரு தோல்வியில் உலகம் அஸ்தமித்த விட்டதாக நினைப்பது மூடத்தனம்'' என்று கடுமையான குரலில் சொல்ல அவனுக்கு கோபம் வந்தது.

''நான் முட்டாளாகவே இருந்து விட்டு போகிறேன். அதனால் உங்களுக்கு என்ன நஷ்டம் வந்தது? என் புத்திசாலித்தனத்தை பற்றி உங்களிடம் யாரும் அபிப்பிராயம் கேட்கவில்லை. நீங்க முதலில் வீட்டுக்கு கிளம்புங்க.''

''இப்ப எதுக்கு இப்படி எடுத்தெறிஞ்சு பேசுகிறாய்? நீயும் கிளம்பு, வீட்டுக்கு போகலாம்.''

''இல்லை நீங்க போங்க, நான் அப்புறம் வருகிறேன்.''

''வீட்டுக்கு வராமல் இங்கேயே இருந்து நீ இங்கே என்ன பண்ண போற?''

''ப்ச்! வீட்டுக்கு போன உடனே நீங்க கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும் மனநிலை எனக்கு

இப்ப இல்லை. அதனால் தான் வரமாட்டேன் என்கிறேன், போதுமா?''

''இதோ பார், நான் உன்னை இங்கே தனியாக விட்டு விட்டு செல்ல மாட்டேன். நான் கேள்வியே கேட்கவில்லை. ஆனாலும் மனம் விட்டு சில விஷயங்கள் பேசலாம் வருகிறாயா?''

''இன்று மதியம் நடைபெற்றதை பற்றி பேச எனக்கு இஷ்டம் இல்லை.''

''எனக்கும் இல்லை. நாளை என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. ஆனால் அதற்காக தயார் செய்ய வேண்டும். அது நம்முடைய அடிப்படை கடமை. அதைப் பற்றி பேசலாம் வா.''

''அம்மா ப்ளீஸ். எனக்கே மனசு சரி இல்லை என்று இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறேன். இதில் நீங்க வேறே படுத்தாதீங்க. நீங்க வீட்டுக்கு போங்க.''

''பிரபா, மணி என்ன ஆகுது தெரியுமா? மனசு சரி இல்லை என்று இங்கேயே கடற்கரையிலேயே நிரந்தரமாக குடி இருக்க முடியுமா? வீட்டுக்கு வந்து தானே ஆக வேண்டும்?''

''இல்லை நான் வர மாட்டேன். போதுமா? ஆளை விடுங்க'' என்று சொன்ன நிமிடம் அவரின் பொறுமை பறந்தது.

''அப்புறம் உங்க அப்பா மாதிரி கடலில் விழுந்து உயிரை விடப் போகிறாயா? செய். விதை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும்? உங்க அப்பா

மாதிரியே தான் உனக்கும் புத்தி போகுது. உனக்காக தான் இத்தனை சிரமத்திலும் நான் உயிரை கையில் பிடித்துக் கொண்டு இருக்கிறேன். நீயும் இல்லா விட்டால் இந்த உலகத்தில் எனக்கு என்ன வேலை? நானும் உன் பின்னாடியே வந்து விடுகிறேன்'' என்று வேகமாக பூங்குழலி சொல்ல, அவன் பதறி எழுந் தான்.

''அம்மா... நீங்க இப்ப என்ன சொன்னீங்க...?'' என்று கேட்க அவர் அதிர்ச்சியில் உளறி விட்டதை உணர்ந்து வாய் மூடி மௌனி ஆனார்.

''அப்பா எப்படி இறந்தாங்க? நீங்க விபத்தில் இறந்ததாகத் தானே சொன்னீங்க?''

''அப்படி தான் சொன்னேன்.''

''அது உண்மை இல்லையா?'' என்று குழப்பத் துடன் கேட்க அவர் மறுப்பாக தலை அசைத்தார்.

''பிறகு ஏன் அப்படி சொன்னீர்கள்?''

''உங்க அப்பா தற்கொலை செய்து கொண்டார் என்று சொல்ல எனக்கு மனம் இல்லை.''

''ஆனால் அவர் ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்?''

''வாழ்க்கையில் வரும் பிரச்னைகளை எதிர்கொள்ள முடியாத கோழைத்தனம், வேறென்ன சொல்ல?''

''என்னம்மா சொல்றீங்க?'' என்று தயக்கத்துடன் கேட்டவனுக்கு இன்னும் அந்த அதிர்ச்சியில் இருந்து மீள இயலவில்லை.

''நான் நடிக்க வேண்டும் என்று வீட்டை விட்டு வெளியே வந்ததாக என்னை எடுத்து வளர்த்த ஐயா நினைத்து கொண்டு இருந்தார். ஆனால் உண்மை யில் கலை ஆர்வம் கொண்ட உங்க அப்பாவின் மீது காதல் கொண்டு தான் நான் வெளியேறி வந் தேன்.''

''ஆனால் அப்பா நடித்ததாக நான் கேள்விப்படவே இல்லையே?

''நடித்து இருந்தால் தானே கேள்விப்பட்டு இருப் பாய்?''

''இது பற்றி மாமாவுக்கு கூட தெரிந்த மாதிரி பேச வில்லையே?''

''அவருக்கு மட்டும் இல்லை. ஐயாவுக்கும் கூடத் தெரியாது. திரையில் தோன்ற வேண்டும் என்ற கனவுடன் சென்னைக்கு வந்தோம். இந்த காலத்தில் இருப்பது மாதிரி சின்ன திரை, யூடியூப், இணைய தளத்தில் குறும்படம் என்று பல வாய்ப்புகள் அந்த காலத்தில் இல்லை. திரைப்படம் மட்டும் தான். ஒரு ஆண்டு கடுமையாக போராடினோம்...

''அ...ப்...பு...ற...ம்.?''

''அவரின் முயற்சியில் வெற்றி கிடைக்க வில்லை...''

''ஓ! அதனால்...?'' என்று நிறுத்தியவனுக்கு அடுத்து தாய் சொல்லப் போகும் வார்த்தைகளை செய்தி தெரிந்தாலும் அந்த வார்த்தைகளை சொல்ல முடியவில்லை.

''ஆசை இருந்த அளவுக்கு தோல்வியை தாங்கும் தைரியம் அவருக்கு இல்லாமல் போய் விட்டதே? அது தான் எனக்குப் பெரிய வருத்தம். ஆசையுடன் அவரை நம்பி வந்த என்னைப் பற்றி கூட ஒரு வினாடி கவலைப்படாமல் தன்னையே மாய்த்துக் கொள்ள எப்படி தான் அவருக்கு மனம் வந்ததோ?''

''அப்பா... இங்கே தான்...'' என்று சந்தேகத்துடன் இழுத்து நம்ப முடியாமல் நிறுத்தினான் பிரபாகர்.

''ம்ம், இங்கே தான் அவரின் வாழ்க்கை முடிந்தது'' என்று ஆமோதித்தவருக்கு தொடர்ந்து பேச முடியவில்லை.

''அம்மா... ப்ளீஸ்... என்னம்மா இது? நீங்க அழுது நான் இது வரை பார்த்ததே இல்லையே?'' என்று அவரை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண் டான்.

''அப்பாவின் மறைவுக்கு பிறகு நான் கிராமத் திற்கு சென்று விட்டேன். அதனால் தான் ஆரம் பத்தில் நான் சென்னைக்கு வர ரொம்ப யோசித்தேன். உங்க மாமா பல முறை அழுத்தி சொன்ன பிறகே நான் இங்கே வந்தேன். இங்கே வந்த பிறகும் பெசண்ட் நகர் வர மனம் வருவதில்லை. என் இஷ்ட தெய்வம் முருகனின் கோவில் இங்கே இருந்த போதும், நான் இங்கே ஒரு முறை கூட வரவே இல்லையே? ஏன் என்று யோசித்து இருக்கிறாயா? பழைய நினைவுகள் என்னை அலைக்கழிக்கும் என்பதால் தான் இங்கே வருவதில்லை..''

''ஓ!''

''திவ்யா, நீ இங்கே இருப்பாய் என்று சொன்னதும் ஒரு நிமிஷம் என் மூச்சே நின்று விட்டது. உடனே ஓடோடி வந்தேன். உன்னை முழுசாக பார்த்த பிறகு தான் எனக்கு மூச்சே வந்தது தெரியுமா? இப்போதும் உன்னை இங்கே தனியாக விட்டு விட்டு செல்ல எனக்கு மனம் வராததற்கும் காரணம் அது தான். நீ கிளம்பினால் தான் இங்கே இருந்து கிளம்புவேன். உங்க அப்பா என்னைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தது மாதிரி என்னால் இருக்க முடியாது.''

''சாரிம்மா. நான் உங்களைச் சரியாக புரிந்து கொள்ளாமல்... என்னென்னவோ பேசி விட்டேன்.''

''ப்ச்! அது பரவாயில்லை. உங்க அப்பா தொடர் பான நினைவுகள் ஏற்கனவே தந்த அழுத்தம் தாங்க முடியாமல் தவித்து கொண்டு இருக்கும் போது, அதே நடிப்பு துறையில் நீயும் போக வேண்டும் என்று சொன்ன போது இந்த ஒரு காரணத்திற்காக இந்த துறை வேண்டாம் என்று தலை தலையாக அடித்து கொண்டேன். நீ காது கொடுத்துக் கேட்டால் தானே? இந்த மூன்று கிலோமீட்டர் தூரத்தை அஞ்சே நிமி ஷத்தில் கடந்து விட்டேன் தெரியுமா?''

''அம்மா, சாரிம்மா, அப்பாவின் மரணம் உங்களின் மனத்தில் இத்தனை ஆழமான காயத்தை ஏற்படுத்தி இருக்கக் கூடும் என்பதை சரியாக புரிந்து கொள்ளாமல் நானும் உங்களை அவஸ்தை படுத்தி விட்டேன். உயிரை மாய்த்து கொள்வது கோழைத்தனம். அந்தக்

காரியத்தை நான் என்றுமே செய்ய மாட்டேன் என்று இன்று இந்த இடத்தில் நான் உங்களுக்கு வாக் களிக்கிறேன்.''

''அது போகட்டும், அது இருபது வருடங்களுக்கு முன்னால் நடந்த விஷயம். அதை நான் மீண்டும் நினைத்துக் கூட பார்க்க விரும்பவில்லை. மனிதனாகப் பிறந்த எவரும் பிரச்சனையை கண்டு ஓடக் கூடாது. எதிர்த்து நின்று போராட வேண்டும். அந்த தைரியம் இல்லாமல் வாழ்க்கையை முடித்து கொண்ட உங்க அப்பாவை நான் ஏன் காதலித்தேன் என்று கூட பல சமயங்களில் நினைத்து இருக்கிறேன்'' என்று சொன்னவருக்கு லேசாக தொண்டை கமறி உணர்ச்சி பெருக்கில் குரல் தடை பட்டது. சீர்படுத்தி கொண்டு திடமான குரலில் தொடர்ந்தார் பூங்குழலி.

''இருபது வயதில் அழகிய தோற்றம் மட்டுமே கண்ணில் பட்டது. அப்பாவும் அண்ணனும் எடுத்து சொல்ல நல்ல விஷயங்கள் மனத்தில் ஏறவில்லை. இன்று அதே இடத்தில் உன்னையும் இறந்து விடுவேனோ என்று பயந்து போனேன் தெரியுமா? நீ கொடுத்த இந்த வாக்குறுதி என் மனத்தில் மிகப் பெரிய நிம்மதியை ஏற்படுத்திவிட்டது. பிரபா, உன் வாழ்க்கையில் என்ன நடந்தாலும், உயிரை மாய்த்து கொள்ளும் எண்ணம் மட்டும் உனக்கு வரவே கூடாது. இதை நீ எந்த நாளும் நினைவில் வைத்து கொள்ள வேண்டும்'' என்று ஆதங்கத்துடன் கேட்க அவர் வேகமாக அவர் கையை பற்றி அழுத்தி தாய்

கேட்ட அந்த நிச்சயத்தை மனமுவந்து அளித்தான் பிரபாகர்.

17

''உங்களை மீறி, நான் தற் கொலை செய்து கொள்ள மாட்டேன்'' என்று பெற்று வளர்த்து, தனக்கா கவே வாழ்ந்து வரும் தாய்க்கு வாக் களித்த பிரபாகரின் முகத்தில் கேள்விகள் இன்னும் மிச்சம் இருப்பதை குழலியால் உணர முடிந்தது.

''என்ன பிரபா, என்னிடம் ஏதோ கேட்கணும் போல இருக்கே? என்ன விஷயம்?'' என்று விசாரிக்க அவன் மறுப்பாகத் தலை அசைத்தான்.

''ஒன்றும் இல்லை.''

''இதை நான் நம்ப முடியாது. உன் முகத்தில் உணர்ச்சிகள் இல்லை என்றாலே உன் ஆழ் மனத்தில் என்ன நினைக்கிறாய் என்று என்னால் கண்டு பிடிக்க முடியும். இப்ப உன் முகத்தில் கேள்விகள் கொட்டி கிடக்கு. ஒன்றும் இல்லை என்று சொன்னால் அதை நம்ப நான் என்ன ஏமாளியா? உன் மனத்தில் ஓடும் கேள்விகள் என்ன என்று நான் சொல்லட்டுமா?'' என்று கேட்க அவன் சங்கடத்துடன் தாயை பார்த்தான்.

''தற்கொலை செய்து கொள்வது முட்டாள் தனம் என்று இவ்வளவு பேசும் நானே, அன்று தற்கொலை செய்து கொள்வேன் என்று உன்னிடம் சொன்னது ஏன் என்று கேட்க நினைத்தாய் சரியா?''

''உங்களை நோகடிக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை.''

''தெரியும். ஆனால் உன் கேள்விக்கு விளக்கம் அளிப்பது என் கடமை. அதற்கு காரணம் உன் மேல் இருக்கும் அளவு கடந்த அன்பு தான். இதை சொன்னால் உன்னால் ஒத்துக் கொள்ள முடியுமா தெரியவில்லை. அண்ணன், திவ்யாவை உனக்கு கல்யாணம் பண்ணி கொடுக்க வேண்டும் என்றால் நீ ஏதாவது ஒரு உத்தியோகத்தை தேடிக் கொண்டு சம்பாத்தியத்திற்கு வழி செய்தாக வேண்டும். அதையும் இந்த ஜனவரிக்குள் செய்தாக வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அதை நான் பல நேரங்களில், பல விதமாக சொல்லியும், திவ்யா வும் உனக்கு எடுத்து சொன்ன பிறகும் கூட அதன் முக்கியத்துவம் உனக்குப் புரிந்தது போலத் தெரிய வில்லை. நாட்கள் நெருங்க நெருங்க என்னுடைய மன அழுத்தம் கூடிக் கொண்டே சென்றது. உனக்கு உணர வைக்க வேண்டும் என்ற வேகத்தில் அந்த வார்த்தைகளை சொல்லி விட்டு எத்தனை முறை நான் வருத்தப்பட்டு இருக்கிறேன் தெரியுமா?''

''சில நாட்களுக்கு முன்பு நீங்க இதை சொல்லி இருந்தால் என்னால் அதை நம்பி இருக்க முடியாது. ஆனால் இப்ப, வாழ்க்கையில் அடிபட்ட பிறகு, நீங்க தவித்த தவிப்பை பார்த்த பிறகு, என்னை வளர்க்க நீங்க பட்ட கஷ்டத்தை உணர்ந்த பிறகு நம்பாமல் இருக்க நான் ஒன்றும் கல் நெஞ்சக்காரன் இல்லை

அம்மா, நான் உங்க பிள்ளை'' என்று அவரின் மடியில் படுத்துக் கொள்ள, அவரின் சேலையில் அவன் அதுவரை அடக்கி வைத்து இருந்த ஆற்றாமை கண்ணீர் பெருகி தாயின் மடியில் ஆறாக மாறி அடைக்கலம் ஆனது.

அவன் மனத்தில் இருக்கும் பாரம் இறங்க, அவன் கண்ணீருக்கு சில நிமிடங்கள் விடுதலை கொடுத்த குழலி, சில நிமிடங்கள் கழித்து அவன் பின்னந் தலையை வருடிக் கொடுத்தார்.

''போதும் பிரபா, வயது வந்த ஆண்மகன் பொது இடத்தில் இப்படித்தான் கண்ணீர் பெருக்கி அழு வதா? முதலில் எழுந்திரு. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை யோசிக்க வேண்டாமா?'' என்று சற்றே குரலில் கடுமையை ஏற்றி சொல்ல அவன் எழுந்தான்.

''ஆண்பிள்ளை அழ கூடாது என்று சட்டம் இருக் கிறதா?'' என்று வேகமாக கேட்க அவர் மறுப்பாக தலை அசைத்தார்.

''இல்லை தான். ஆனால் பெண்களை தான் பலவீனமான இனம் என்று நீங்க சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். அதனால் கேட்டேன்.''

''அம்மா, நீங்க இந்த முருகன் கோவிலுக்கு வர மறுப்பதன் பின்னால் இப்படி ஒரு காரணம் இருக்கக் கூடும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நீங்க மாமா குடும்பத்தை ரொம்ப மதித்து இன்று வரை நல்ல உயர்ந்த நிலையில் தானே வைத்து இருக்கீங்க.

உங்களுக்கு விருப்பம் இல்லாத போதும் அவரின் சொல்லை ஏற்று சென்னைக்கு வரத் தயாராக இருந்து இருக்கீங்க. ஆனால்...''

''நான் சென்னைக்கு வர முடிவெடுத்ததற்கு காரணம் மாமா சொன்ன வார்த்தை என்பதை விட உன்னுடைய எதிர்காலம் என்பது தான் சரியான காரணம் பிரபா.'' என்று அவசரமாக இடையிட்ட குழலி அழுத்தம் திருத்தமாகச் சொல்ல பிரபாகர் பிரமித்து போனான்.

தியாகத்தின் மறு உருவம் தாய்மை, கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதால் தாயை படைத்தார் என்பது போன்ற வாசகங்களை எல்லாம் வெறும் வார்த்தைகளாக மட்டுமே பார்த்து சினிமா வில் பேச கூடிய வசனங்கள் என்று நினைத்து இருந்த வனுக்கு இன்றைய அனுபவம் புதிதாக இருந்தது.

''உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. என் மனத்தில் நீங்க இன்னும் உயர்ந்த ஸ்தானத்திற்கு சென்று விட்டீர்கள். ஆனால் நான் கேட்க நினைத்தது அது இல்லை. ஆதரவற்ற நிலைக்கு நீங்க ஆளான போது, நீங்க ஏன் மாமாவை தேடிப் போகவில்லை?''

''அது... அது... இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்வது? என்னுடைய சுய கௌரவம் தான் காரணம். நான் தோற்று விட்டேன். எனக்கு இப்ப ஆதரவு இல்லை என்று கை ஏந்தி நிற்க, எனக்கு மனம் இல்லை.''

''ஆனால்'' என்று ஆரம்பித்தவன் பாதியில் பேச்சை நிறுத்தினான்.

''என்ன ஆனால்? கேட்க வந்த கேள்வியைத் தயங்காமல் கேளு.''

''ஏற்கனவே நொந்து போய் இருக்கும் உங்களை இன்னும் கஷ்டப்படுத்த விரும்பவில்லை.''

''நான் உன்னை பெற்றவன் பிரபா, உன்னை நான் அறிவேன். நீ என்ன நினைக்கிறாய் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியும். நீ கேட்காமல் மென்று முழுங்கிய கேள்வி என்ன என்று நானே சொல்லட்டுமா?''

''.........''

''அப்பா இறந்த பிறகு, சுயமான சம்பாத்தியம் இல்லாத போது, அதுவும் கையில் சின்னக் குழந்தை யாக நானும் இருக்கும் போது கூட அப்பாவின் பெற்றோர்களையோ உங்க பெற்றோர் நிலையில் இருந்தவர்களையோ நீங்க தேடிப் போகவில்லை. ஆனால் மாமாவை முதன் முதலில் நீண்ட நாட்கள் கழித்து பார்த்த போது, எனக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று வாக்குறுதி கேட்டது ஏன் என்று கேட்க நினைத்தாய், சரியா?''

''அது மட்டும் இல்லை, அந்த மாதிரி நேரத்தில், அவ்வளவு சின்ன வயதில் திருமணம் பற்றி பேசியது கூட ஏன் என்று எனக்கு இன்னும் விளங்கவில்லை'' என்று சொன்ன வினாடியில் அவர் முகம் மாறியது.

''பிரபா, உனக்கு திவ்யாவை பிடிக்கவில்லையா?''

''அய்யோ, என்னம்மா இப்படிக் கேட்கறீங்க? நான் அப்படிச் சொல்லவே இல்லை. அவளை எனக்கு பார்த்த முதல் நாளிலேயே பிடித்து இருந்தது. முன் பின் தெரியாத ஒரு சிறுவன், அவளை விட பெரியவன் கண் கலங்கி இருந்ததை பார்க்கச் சகியாத ஒரு அற்புதமான பெண் அவள். அவளைப் பிடிக்காமல் இருக்குமா?''

''உண்மை தான். அவள் அவங்க அப்பா மாதிரி. அடுத்தவருக்கு உதவும் அந்த மனசு. அன்பு வைத்தவர் மீது மாறாமல் தொடரும் அன்பு. தனிமையில் மகளை வளர்த்தது என்று எல்லாமே அப்படியே அவரின் அன்பு கலந்த மனசு திவ்யாவுக்கு உண்டு.''

''ம்ம்ம். அது என்னவோ சரி தான். அவளை எனக்குப் பிடித்து இருக்கா இல்லையா என்ற கேள்வி வரலை. ஆனாலும் பார்த்த முதல் நாளே, சில நிமிடங்களிலேயே அந்த வயதில் திருமணம் பற்றிப் பேசியது கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது.''

''எந்த நிலையில் நான் தனி மரமாக நின்ற மாதிரி ஒரு சூழ்நிலை உனக்கு வந்து விடக் கூடாது என்ற ஆதங்கம் தான் என்னை அப்படி கை ஏந்த வைத்தது. வாழ்க்கையில் ஜெயித்தாலும் தோற்றாலும் உன்னைச் சுற்றி ஆதரவு கரம் நீட்ட ஒரு ஆள் வேண்டும் என்ற எண்ணம் தான் என்னை அன்று ஆட்டுவித்தது.

உனது வாழ்க்கையை வளமாக அமைக்க வேண்டும் என்ற பேராசை தான் அதன் பின்னால் நின்றது. உன்னைத் தவிர, உன் வளமான எதிர்காலம் அதன் பாதுகாப்பு தவிர வேறு எந்தக் காரணமும் என் மனத்தில் அன்று இல்லை'' என்று சொல்ல பிரபாகரின் முகம் கொஞ்சம் கொஞ்சமாக மாறி அன்பு மயமானது.

''அம்மா. என் மீது இவ்வளவு பிரியம் வைத்து இருக்கீங்களா?''

''நான் மட்டும் இல்லை. இந்த உலகத்தில் இருக்கும் பெரும்பாலான அம்மாக்கள் அப்படி தான். கடவுள் எல்லா இடங்களிலும் தான் இருக்க முடியாது என்பதை உணர்ந்து தான், தன்னுடைய இடத்தை நிரப்ப தாயாய் படைத்தார் என்ற பழமொழி கேட்டதில்லையா?''

''கேட்டு இருக்கேன்மா. ஆனால் படிப்பது வேறு. அனுபவத்தில் உணர்வது வேறு இல்லையா? இன்று தான் அதை அனுபவ பூர்வமாக உணர்கிறேன். மாதா, பிதா, குரு தெய்வம் எல்லாமே நீங்க தான். ஐ லவ் யூம்மா. நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன். இனிமேல் என் வாழ்க்கையில் எடுக்கும் எந்த முடிவையும் உங்களிடமே விட்டு விடுகிறேன்.''

''வாழ்க்கையை பற்றி எதுக்கும் முடிவை அப்புறம் எடுக்கலாம். அதற்கு முன்னால் நீ செய்ய வேண்டிய ஒரு முக்கியமான வேலை இருக்கு. அதை செய்வாயா? நான் சொல்வதைக் கேட்பாயா?''

''சொல்லுங்கம்மா, உடனே செய்கிறேன்.''

''பசி வந்தால் பத்தும் பறந்து போய் விடும் என்று தெரியும். முதலில் சாப்பிடு. அப்புறம் பேசலாம்'' என்று சொன்னபடி, அருகே இருந்த தட்டில் கடையில் வாங்கி வந்த இட்லியை பிய்த்து, ஒரு வாய் அவன் வாயில் வைத்து ஊட்டி விட்டார்.

அந்த வினாடியில் அவன் கண்களில் ஒரு துளி கண்ணீர் துளிர்த்தது. வாய் தானாக திறந்து சிரமத்துடன் காய்ந்த தொண்டையை எச்சில் கூட்டி, கண்ணீருடன் சேர்ந்து உணவை விழுங்கினான் பிரபாகர்.

அடுத்த மூன்று நிமிடங்களில் மூன்று இட்லிகளும் காணாமல் போய் இருக்க அவன் முகத்தில் ஒரு சின்னத் தெளிவு வந்து இருந்தது. முகம் இப்போது அன்பு மயமாகி இருந்தது. தாய்மையின் தியாகத்தை உணர்ந்து இருந்தது. அவரின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தாக வேண்டும் என்ற ஞானம் பிறந்து இருந்தது.

''இப்பவாவது நான் சொல்வதை கேட்கலாம் என்று முடிவு பண்ணினாயே? ரொம்ப சந்தோஷம் பிரபா. இந்த நடிப்பு துறை வேண்டாம். அதை இனியாவது விட்டு விடுவாயா?'' என்று தயக்கத்துடன் கேட்க அவன் உறுதியான பாவனையுடன் தலை அசைத்தான்.

''இது தான் உங்களுக்கு சந்தோஷம் கொடுக்கும் என்றால் அதை நான் ஏற்று கொள்கிறேன். இதைத் தவிர வேறு ஏதாவது ஒரு தொழிலை செய்கிறேன். உத்தியோகம் புருஷ லட்சணம் இல்லையா?''

''உடனடியாக நீ இதை ஒத்து கொண்டது சந்தோஷம் கொடுத்தாலும் கூடவே கொஞ்சம் கவலையும் பிறந்து விட்டது பிரபா, தொழிலில், வருமானம் கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் அந்த தொழில் உனக்கு பிடித்ததாகவும் மன திருப்தி அளிப்பதாகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.''

''அது மட்டும் இல்லை. எனக்கு தெரிந்த தொழிலாகவும் இருக்க வேண்டும். பெரிய படிப்பு கிடையாது.''

''நான் உனக்கு ஒரு ஐடியா சொல்லவா?''

''சொல்லுங்க...''

''உனக்கு மட்டும் இல்லாமல் உனக்கு வாழ்க்கை துணையாக வருபவளுக்கு பொருத்தமான தொழிலாக இருந்தால் நல்லது தானே?''

''ஆமா.''

''உனக்கும் நல்லா தெரிந்த வேலையாக இருக்க வேண்டும்.''

''ம்ம்ம்.''

''தானும் உதவுவது போல இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.''

''என்னம்மா சொல்றீங்க? நீங்களும் வேலை செய்வது போலவா?''

''எண்டா நான் செய்யக் கூடாதா?''

''அப்படி சொல்லவில்லை. தாராளமா செய்யலாம். ஆனால் நாம் மூன்று பேருக்கும் பொருத்தமாக இருக்கக் கூடிய வேலை என்ன என்று யோசிக் கிறேன்.''

''நல்லா யோசி. அன்று முதல் இன்று வரை மனித குலம் அழியும் வரையும் தொடர கூடிய ஒரு தொழில்.''

''இதை பாருடா, அது என்ன அப்பேர் பட்ட தொழில்.''

''சில தொழில்களுக்கு சீசன் இருக்கும். அந்த பிரச்னையும் இந்த தொழிலுக்கு கிடையாது.''

''என்னால் ஊகிக்க முடியாத அந்த தொழில் என்ன தொழில்?''

''சாப்பாட்டு ராமனால் ஊகிக்க முடியாத தொழிலா? நம்பவே முடியலை.''

''அம்மா, நிஜமாவா சொல்றீங்க?''

''என்ன தொழில் என்று கண்டு பிடித்து விட் டாயா?''

''ம்ம்ம்... ஆனால்...?''

''என்ன ஆனால்...? உனக்கு கை வந்த கலை சமையல் கலை. மிஞ்சிப் போன இட்லியை கூட பார்க்க அழகான, உண்ண சுவையான சிற்றுண்டியாக மாற்றக் கூடிய திறமைசாலி நீ. திவ்யாவுக்கும் இந்த தொழிலில் படிப்பும் அனுபவமும் இருக்கு. இருபது

வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து சமையல் செய்து வரும் நானும், மாமாவும் கூட உனக்கு உதவியாக இருப்போம். அது மட்டும் இல்லை. நமக்கு இருக்கும் பல அறிமுகங்களை வைத்து இந்த தொழிலை நாம் சிறப்பாகவே செயல்படுத்த முடியும். நீ என்ன சொல் கிறாய்?''

''நல்ல யோசனை தான் அம்மா. நீங்க சொன்னால் சரியாக தான் இருக்கும். நிச்சயம் செய்யலாம்'' என்று உடனே ஒப்புக்கொண்டான்.

அடுத்தடுத்த வேலைகள் தடை இன்றி நடந்தன. தோன்றிய தடைகளும், அவர்களின் உறுதியான முயற்சியினாலும், தெய்வத்தின் அருளாலும், திவ்யாவின் வாக்கு வன்மையாலும் தவிடு பொடியாக உள்ளது.

ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்த சுப்ரமணியன் ஒதுக்கம் சில நாட்களுக்கு மேல் நீடிக்கவில்லை. மகளின் மனம் கவர்ந்தவன் முன்னேற வழி தேடி தவிக்கும் போது இயல்பில் இளகிய மனம் கொண்ட வரால் தள்ளி நிற்க முடியவில்லை.

18

ஆறு மாதங்களுக்கு பின்! பிரபாகரின் அலைபேசி அடித்தது!

''ஹலோ பிரபா பேசுகிறேன்.''

''பிரபா ஸார், ஏ.பி.ஆர் பீலிம்சில் இருந்து ஜனா பேசுகிறேன். நாளைக்கு முட்டுக்காட்டில் ஷூட்டிங், நினைவிருக்கா?''

''நல்லா இருக்கு. டைரக்டர் சூரியகுமார் தானே?'' என்று கேட்க எதிர்முனை சிரிப்புடன் பதில் சொன்னது.

''அதே தான் ஸார், மறக்காமல் காலை ஏழு மணிக்கு எல்லாம் ஸ்பாட்டுக்கு வந்து விடுங்க.''

''எப்படி மறப்பேன்? அதெல்லாம் டயரியில் எழுதி வைத்து இருக்கிறேன். நான் சொன்னது உங்களுக்கு நினைவில் இருக்கா?''

''இருக்கு பிரபா, அது சம்பந்தமாக தான் இப்ப நான் உனக்கு போன் பண்ணினேன்.''

''சார் சம்மதம் சொல்லி விட்டாரா?''

''என்ன சொல்வார் என்று நீ எதிர்பார்க்கிறாய்?''

''ஏய் எனக்கு டென்ஷன் படுத்தாமல், பட்டுன்னு உண்மையை சொல்லு.''

''அதற்கு உரிய மரியாதை செலுத்தி கேட்டால் தானே பதில் கிடைக்கும்.''

''ரொம்ப பந்தா பண்ணாதே. நானே சாரிடம் கேட்டுக் கொள்கிறேன்.''

''அதோ தான் சொல்ல வந்தேன். இது நான் முடிவு பண்ணும் விஷயம் இல்லை. இன்று காலை எட்டு மணிக்கு வர சொல்லி இருக்கிறார். இயக்குநரிடம் நீயே சமயம் பார்த்து அனுமதி வாங்கி விடு. நான் என்ன குறுக்கவா நிற்க போகிறேன்?'' என்று சொல்ல சிரித்து விட்டு போனை வைத்த பிரபாகர் குளிக்கப் போனான்.

காலை எட்டு மணி!

ஆறு மாதங்களுக்கு முன்பு சென்ற அதே வீடு. ஆனால் கூட்டத்தில் ஒருவனாக காத்திருக்காமல், அடையாள அட்டையை காட்டியதும், கௌரவமாக கதவை திறந்து சல்யூட் அடித்து உள்ளே வழி அனுப்பி வைத்தார் காவலாளி.

ஹாலில் நுழைந்த உடனே, ''சார் உங்களுக்காக காத்திருக்கிறார், போங்க'' என்று வரவேற்றார் உதவியாளர். ஆறு மாதங்களுக்கு முன்பும் பின்பும் இருந்த நிலையை அவனால் உணர முடிந்தது. இன்றைய நிலையை சற்று பெருமிதமாகத்தானே உணர்ந்தான். தலை தானாக நிமிர்ந்தது.

ஒற்றை விரலால் அறை கதவை தட்டி, ''சார் உள்ளே வரலாமா?' என்று கர்வத்துடன் விசாரித்தான் பிரபாகர்.

''கம் இன்'' என்று கனத்த குரலை தொடர்ந்து உள்ளே சென்றான். அவனை பார்த்தவரின் பார்வையில் வியப்பு இருந்தது.

''இவனா? இவன் எங்கே இங்கே வந்தான்?'' என்ற கேள்வி அவர் கண்ணில் பளிச்சிட அவன் புன்னகை செய்தான்.

''வணக்கம் சார் உட்காரலாமா?''

''ஓ எஸ். உட்காரலாமே? நீயா... நீயா என்னுடைய ஷூட்டிங்கிற்கு உணவு ஏற்பாடு செய்தது?'' என்று நம்ப முடியாமல் கேட்க அவன் ஆமோதிப்பாக தலை அசைத்துப் புன்னகை செய்தான்.

''ஆமா, கடந்த ஒன்றரை மாதமா நீங்க ரசித்து சாப்பிட்ட எல்லா உணவு வகைகளும் நான் ஏற்பாடு செய்து கொடுத்தது தான். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், நீங்க ரொம்ப ரசித்து அருந்திய சத்து மாவு பானம், மாலை நேரத்தில் உண்ட சில அசைவ சிற்றுண்டிகள் நானே தயார் செய்தது. ரொம்ப நல்லா இருந்தது என்று நீங்க சொன்னீங் களாம். என்னைப் பார்க்கணும் என்று சொன்னீங்க என்றும். நான் கேட்கும் விருப்பத்தையும் நிறைவேறி வைப்பதாகவும் சொன்னீர்கள் என்றும் உங்க உதவி யாளர் சொன்னார்.''

''அது நீயாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நீ... நடிகனாகப் போவதா சொல்லி கொண்டு இருந்தாயே?''

''எதிர்பார்த்த பல விஷயங்கள் நடக்காமல் போனதும் எதிர்பாராத பல விஷயங்கள் இதற்கு முன்னால் என் வாழ்க்கையில் நடந்து இருக்கு சார். அது என் கடந்த காலம், ஆனால் இப்ப நான் எதிர் பார்ப்பது எல்லாமே நடந்து வருகிறது. உங்களின் இந்த அழைப்பை நான் எதிர்பார்த்தேன். இந்த படத்தின் ஷூட்டிங் முடிவதற்கு முன்பே ஒரு நாள். என் விருப்பத்தை நிறைவேற்ற நீங்க முன் வருவீர்கள் என்றும் உங்களைச் சந்திக்க நேரிடும் என்றும் எதிர்பார்த்துக் காத்திருந்தேன். என் எதிர்பார்ப்பு பொய் ஆகவில்லை.''

''ஓ! சரி... ஆனால் உன் விருப்பம் என்ன என்று நீ சொல்லவில்லை.''

''என் விருப்பம் எதுவாக இருந்தாலும் நிறைவேற்றி வைப்பதாக நீங்க சொன்னதாக உங்க உதவியாளர் தான் சொன்னார். ஆனால் நீங்க இன்னும் சொல்ல வில்லையே? நீங்க கேட்பதற்காக காத்திருக்கிறேன்'' என்று அவன் சொன்ன விதத்தில் அவன் தன்னம் பிக்கை மிளிர்ந்தது. சில மாதங்களுக்கு முன்னால் இதே வீட்டில் பதட்டத்துடன் சண்டை போட்டவன் இல்லை இவன்!

''யாரோ ஒருவன் என்ற எண்ணத்திலும் அவன் கொடுத்த உணவின் சுவையில் மயங்கியும் வாக் களித்தார். ஆனால் இப்போ இவன் வந்து நிற்கும் தொனியை பார்த்தால் நாயகனாக அறிமுகம் செய் யுங்க என்று கேட்டால் என்ன செய்வது?

அறிமுகப் படுத்தலாம் என்பது ஒரு புறம். ஆனால் தன் கழுத்தில் கத்தி வைத்து தந்திரமாக மடக்கி வாக்கு கேட்டானோ என்ற எரிச்சல் இருந்ததால், 'உனக்கு என்ன விருப்பம்?' என்று பட்டென்று கேட்க அவரால் முடியவில்லை.

''என்ன சார், என்னை பார்த்தால் தவம் செய்து கடவுளை மடக்கி சாகா வரம் கேட்கும் அசுரன் மாதிரி இருக்கா?'' என்று கிண்டலாகக் கேட்க அவர் நிமிர்ந் தார். இவன் தன்னைக் கிண்டல் செய்வதா?

''அப்படி எல்லாம் இல்லை. மிஞ்சி மிஞ்சிப் போனால் என்ன பெரிதாக கேட்கப் போகிறாய்? என் படத்தில் நடிக்க ஒரு சான்ஸ் கேட்பாய் அது தானே?'' என்று அலட்சியமாக சொல்ல அங்கே அவனது தன்னம்

பிக்கை அங்கே சீண்டப்பட்டது. அடி வாங்கியது. அவன் வாழ்க்கையின் மிக முக்கியமான முடிவு அந்த வினாடியில் எடுக்கப்பட்டது. அவன் சிரித்து விட்டு மறுப்பாக தலை அசைத்தான்.

''இல்லை சார், நான் நடிக்க லாயக்கில்லை என்று உங்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட பிறகு தான் நான் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறேன். நான் நடிக்க சான்ஸ் கேட்க மாட்டேன். கேட்டு உங்களை தர்ம சங்கடமான சூழ்நிலையில் நிற்க வைக்க நான் விரும்பவில்லை. பயப்பட வேண்டாம்'' என்று தன்னம்பிக்கையுடன் சர்வ நிச்சயமாக சொல்ல அவர் விழிகள் வியாப்பில் விரிந்தன.

''வேறே என்ன கேட்கப் போகிறாய்?''

''இன்னும் நீங்க வாக்களிக்கவில்லையே?''

''ஏற்கனவே நான் வாக்களித்த பிறகு அதில் பின்வாங்குவது என்ற பேச்சுக்கு இடமில்லை. உன் விருப்பம் என்ன என்று சொல்லு, அதை நிறை வேற்றி வைக்கிறேன்'' என்று தன் முழு உயரத் துக்கும் நிமிர்ந்து கம்பீரமாக விசாரித்தார்.

தன்னிடம் நடிக்கும் வாய்ப்பை தாண்டி வேறு என்ன இவன் கேட்பான் என்ற ஆர்வத்தை வெளியே காட்டிக் கொள்ளக் கூடாது என்று தனக்கு தானே கட்டுப்பாடு விதித்து கொண்டு இருந்தாலும், அது உச்ச இயக்குநர் ஆன சூரியகுமாரின் கட்டுப்பாட்டை தாண்டி வெளியே தெரிந்தது.

அதே போன்ற மாற்றம் பிரபாகரின் முகத்திலும் தோன்றியது. அந்த நிமிடம் வரை, 'உன் விருப்பம் என்ன என்று அவரை கேட்க வைக்க வேண்டும்', என்ற ஆர்வத்தில் கம்பீரமாக இருந்த பிரபாகரின் முகம் பரபரப்பை பூசி கொண்டது. சின்ன பதட்டமும் தொற்றி கொண்டது. சில வினாடிகள் அவன் கம்பீரம் தொலைந்து போனது. ஆனால் அதை கவனிக்கும் நிலையில் அவர் இல்லை.

''சொல்லுப்பா... என்ன வேண்டும்'' என்று மீண்டும் அழுத்திக் கேட்டதும் அவன் சுதாரித்தான்.

''இதைக் கேட்ட பிறகு உங்களுக்கு இது ஒரு விஷயமா என்று தோன்றலாம். ஆனால் எனக்கு இது பெரிய விஷயம்'' என்று பீடிகை போட அவர் முகத்தில் ஆர்வம் அதிகரித்தது.

''விஷயத்தை சொல்லுப்பா.''

''சாதாரணமா உணவு வழங்குவது புரொடக்ஷன் உதவி என்று தான் சினிமா பட டைட்டிலில் போடுவது வழக்கம். ஆனால் எங்க நிறுவனத்தில் பெயரை தனி யாகப் போட வேண்டும். அதையும் உங்க பெயரில் போடுவதற்கு முன்னால் போட வேண்டும். இது தான் என் விருப்பம்.''

''வாட்? என்ன கோரிக்கை இது...? இதெல்லாம் போடும் வழக்கம் இல்லை. நீ இல்லாவிட்டால் இன் னொரு நிறுவனம் உணவு வழங்கி விட்டு போகிறது'' என்று அலட்சியமாக சொல்ல அவன் முகம் சிவந்தது.

''நீங்க சொல்வது உண்மை தான். என் நிறுவனம் இந்த உலகத்தில் இருக்கும் ஒரே நிறுவனம் என்று நான் நினைக்கவில்லை. என்னை விட்டால் உங் களுக்கு வேறு ஆள் கிடைக்காது என்றும்

சொல்லவில்லை. ஆனால் எங்க நிறுவனத்தின் உணவு சுவையாக இருப்பதாகவும் பாராட்டு தெரிவிக்கும் முகமாக எனக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று உங்க உதவியாளரிடம் சொன்னது நீங்க தான். இப்போது உங்க வார்த்தையை நீங்களே காப்பாற்றத் தவறி விட்டீர்கள். பரவாயில்லை. நான் கிளம்புகிறேன். வணக்கம்'' என்று சொல்லி விட்டு எழுந்தான் பிரபாகர். அவன் விவாதம் செய்யாததும், உடனடியாக எழுந்ததும் அவரின் மனசாட்சியை குத்தியது.

''என்னப்பா எழுந்து விட்டாய்?''

''நான் வந்த வேலை முடியவில்லை. ஆனால் நமது உரையாடல் முடிந்து விட்டது என்று நினைத்தேன். அதனால் எழுந்து கொண்டேன்.''

''இதுவரை இந்த மாதிரி பழக்கம் இல்லை. அதனால் யோசித்தேன்.''

''மரபுகளை உடைப்பது உங்களுக்கு ஒன்றும் புதிது இல்லையே சார்'' என்று சிரிப்புடன் கேட்க அந்த வினாடி அவர் முகத்தில் மலர்ச்சி தோன்றியது.

''நீ செய்த வேலைக்கு உரிய அங்கீகாரம் வேண்டும் என்று கேட்கும் உனது தன்னம்பிக்கையை, சுய கௌரவத்தை நான் மதிக்கிறேன். பாராட்டுகிறேன். உன் கோரிக்கையை நிறைவேற்றுகிறேன். வாழ்த்துக்கள்'' என்று கை குலுக்க பிரபாகரின் முகம் பரவச நிலைக்குப் போனது.

19

ஆறு மாதங்களுக்கு பின்!

பிரபாகரின் அலைபேசி அடித்தது.

''ஹலோ பிரபா பேசுகிறேன்...''

'பிரபா நான் ஜனா பேசுகிறேன்.''

''சொல்லு ஜனா.''

''கிரண் தேஜா நடிக்கும் தெலுங்கு பட ஹூட்டிங் நாளையில் இருந்து இருபது நாளைக்கு மஹாபலி புரத்தில் நடக்கப் போகுது. திடீர் என்று ஏற்பாடு செய்ததால் நட்சத்திர ஹோட்டலில் இடம் கிடைக்கவில்லை. தங்க கம்பெனி கெஸ்ட் ஹவுஸ் ஏற்பாடு பண்ணி விட்டார்கள். ஆனால் சாப்பாடு ஏற்பாடு செய்வதில் கொஞ்சம் சிரமம் இருக்கிறது. நீதான் ஹெல்ப் பண்ணனும். 24 மணி நேரத்தில் ஏற்பாடு பண்ண வேண்டும். ஆந்திரா உணவு வகைகள் தயாரிப்பில் நீ கில்லாடி ஆச்சே? அதான் உன்னைக் கூப்பிட்டேன். நீ வேறே எங்கேயும் போக வேண்டி பிக்ஸ் பண்ணி இருக்கிறேன் என்று சொல்லி என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விடாதே.''

''ஹேய், கவலைப் படாதே. பிரபாவை நம்பியோர் கை விட படார். ஆந்திராவுக்கு சொந்தமான கார சார சமையல் கோங்கரா ஊறுகாயுடன் கொடுத்து அசத்தி விடுவோம். கவலைப் படாதே'' என்று உறுதி அளிக்க எதிர்முனையில் அவன் முகம் நிம்மதி ஆனது.

அடுத்த இரண்டு நிமிடத்தில் அடுத்த போன்.

''பிரபாகர், இன்று பதினோரு மணிக்கு சூப்பர் குட் பிலிம்ஸ் நிறுவனத்தில் இருந்து வரச் சொல்லி

இருக்காங்க. அவங்க அடுத்த மாதம் மூன்று மொழி களில் தயாரிக்கும் படத்திற்கான உணவு ஏற்பாடுகள் செய்யச் சொல்லி இருக்காங்க. உனக்கு எப்படி வசதி?''

''சூப்பர் குட் பிலிம்ஸ் பெரிய பிரபலமான நிறுவனம் ஆச்சே? வேண்டாம் என்று சொல்ல எனக்கு என்ன பைத்தியமாக பிடிச்சு இருக்கு? நான் பத்து மணிக்கே அங்கே இருப்பேன். பை'' என்றவன் போனை வைத்து விட்டு அவசரமாக குளிக்கப் போனான்.

அடுத்த இரண்டு நிமிடத்தில் அடுத்த போன்.

''திவி, அந்த போனை எடு'' என்று அறையில் இருந்து சப்தம் வருவதற்கு முன்பே வேகமாக ஓடி வந்து எடுத்தாள் திவ்யா. அவள் பேசுவதற்கு முன்பே எதிர்முனையில் குரல் வேகமாக ஒலித்தது.

''பிரபாகர், நான் ரமேஷ் பேசறேன். பொள்ளாச்சி பக்கத்தில் வரும் பனிரெண்டாம் தேதியில் இருந்து ஒரு வாரம் ஷூட்டிங் போகணும். அங்கே கிராமத்தில் ஷூட்டிங் என்பதால், அங்கேயே தங்கி நட்சத்திரங் களுக்கு உணவு விநியோகம் செய்ய வேண்டும். ஞாபகம் இருக்கு இல்லையா?''

''நான் அவர் மனைவி பேசுகிறேன். திரிஷா ஹீரோ யினாக நடிக்கும் திரில்லர் படம் தானே? சொல்லிக் கொண்டே இருந்தார். இப்ப அவர் போனில் பேச வில்லை. ஆனால் ஏற்பாடுகள் நடந்து கொண்டே இருக்கிறது. அவரே அங்கே வந்து கவனிப்பார். நீங்க கவலைப் பட வேண்டாம்.''

''மறந்துடாதீங்க மேடம். கடைசி நேரத்தில் எதுவும் மிஸ் ஆகிவிட கூடாது. வெளியூர் வேறே.''

''இது எங்க தொழில் சார். எப்படி மறப்போம்? எதுவும் மிஸ் பண்ணாமல் துல்லியமாக கவனித்து ஒவ்வொரு வேலையை செய்வதால் தான். ஆறு மாசத்தில் இவ்வளவு தூரம் வளர்ந்து நிற்கிறோம்'' என்று கம்பீரமாக சொல்லி விட்டு போனை வைக்க. ''பிரமாதமா பதில் சொல்றியே செல்லகுட்டி'' என்று சந்தோஷமாக சொன்னபடி அவளை பின்னால் இருந்து அணைத்து கொண்டான் பிரபாகர்.

''நான் நல்லா பதில் சொல்வது இருக்கட்டும். பாத்ரூமில் பத்து நிமிஷம் செலவு பண்ணி ஒழுங்கா குளிக்க முடியாத அளவுக்கு பயங்கர பிசியாகிட்டீங்க போல'' என்று சிரிப்புடன் சந்தோஷமாக திவ்யா கேட்க அவனும் அதை ஆமோதித்தான்.

''ஆமா ரொம்ப பிஸி! எல்லாம் உன் கைங்கரியம் தான்'' என்று சந்தோஷமாக சொன்னவன் மனைவி யின் இடையில் கை கொடுத்து தன் பக்கம் இழுத்து, இறுக்கி அணைத்தான்.

''நான் என்ன பண்ணினேன்? எல்லாம் அத்தை தான் செய்தாங்க'' என்று கணவனுக்கு தன்னடக்கத் துடன் பதில் சொன்னவள் அவன் கழுத்தில் முகம் புதைக்க வாகாக தான் தலையை திருப்பி கொண்டாள்.

கழுத்தில் முகம் புதைத்து முத்தமிட்டவன் இதழ் களை கன்னத்துக்கு மாற்றி, ''அடிப் பாவி, எதுக்கு இப்ப அம்மா தலையை உருட்டுகிறாய்?'' என்று அதிர்ச்சியுடன் கேட்க அவள் விழித்தாள்.

''என்ன உளறுகிறீர்கள்? அம்மாவை நான் குறையா சொல்கிறேன்? ஆறு மாச காலத்தில் உங்க

தொழிலில் இப்படி மின்னல் வேகத்தில் வளர்ந்ததற்கு காரணம் அத்தை என்று பெருமையாகத் தானே சொன்னேன்.''

''நீ அதை சொன்னாயா?'' என்று இழுத்தவன் கண்கள் அவள் கன்னத்தில் மேலும் கீழும் ஆவலுடன் ஏறி இறங்கியது.

''ஆமா, நீங்க எதை சொன்னீங்க?''

''நான் என்னை குளிக்க விடாமல் சந்தன சோப்பு மணத்துடன் பிங்க் நிற நைலான் நைட்டியில் வளைவு நெளிவுகளை எடுத்து காட்டியபடி ஓடி வந்து காது ஜிமிக்கிகளை அசைத்த, லிப்ஸ்டிக் போடாமல் சிவந்த இதழ்கள் கொஞ்சிக் கொஞ்சி போனில் பேசி என்னை குளிக்க விடாமல் இழுத்து வந்ததை சொன்னேன்'' என்று ரசனையுடன் சொன்னவன் கண்களும் விரல்களும் அவள் மேனியில் ஏறி இறங்கி கொண்டு இருந்தது. அந்த அசைவுகளும், அதன் பாவனையும் அவள் முகத்தில் வர்ண ஜாலங் களை வாரி இறைக்கத் தவறவில்லை.

''சீ, நான் என்ன சொன்னால் நீங்க என்ன சொல் நீங்க?'' என்று கூடவே அவளை சிணுங்க வைக்கவும் செய்தது.

''அதே தான் நானும் உன்னைக் கேட்கிறேன். என்னை பிசி ஆக்கியது நீ என்று நான் சொல்லிக் கொண்டு இருக்கும் போது அத்தை தான் எல்லாத்துக்கும் காரணம் என்று அவங்க தலையை உருட்டுகிறாயே? இது நியாயமா என்று கேட்கிறேன். அம்மாவா இப்படி

பிங்க் கலரில் இவ்வளவு கழுத்தை இறக்கி, நைட்டி போட சொன்னாங்க? அரை குறையாக ட்ரெஸ் பண்ணி கணவன் குளித்து கொண்டு இருக்கும்போது வந்து அவன் கவனத்தை ஈர்க்க சொன்னாங்க?''

''அய்யோ போதும், உங்க கொஞ்சல் மொழிகள், கொஞ்சம் நிறுத்துறீங்களா? நான் நீங்க தொழிலில் குறுகிய காலத்தில் வளர்ந்த வளர்ச்சியை பற்றிச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அடுத்த அழைப்பு வந்து சேர்ந்தது.

அலைபேசியில் தொழில் ரீதியான அழைப்பு வந்த வினாடியில் பிரபாகரின் விளையாட்டு தனம் காணாமல் போனது. பேசி முடித்து விட்டு அவளை மீண்டும் அணைத்து கொண்டான்.

''தாங்க்ஸ் திவி. நீ இல்லாவிட்டால் நான் என்ன ஆகி இருப்பேனோ. எனக்கே தெரியவில்லை. நீ என் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத அங்கம் என்பதால் தான், நான் நடப்பு நிலையை உணர்ந்து இந்த முடிவை எடுக்க முடிந்தது. அந்த முடிவை எடுத்ததனா லேயே என் வெற்றி கிடைக்கவில்லை. நான் எடுத்த முடிவு ஒரு பயணத்தின் ஆரம்பம். நீ மாமா, அம்மா எல்லாரும் சேர்ந்து தான் என்னை இந்த அளவுக்கு வளர்த்து விட்டீர்கள். என் வெற்றிக்குப் பின்னால் மூன்று பெரும் தூண்கள் இருக்கு என்பதை எந்த இடத்திலும் பெருமையாகச் சொல்வேன்.''

''உங்க வெற்றியில் எங்களையும் இணைத்து சொல்வது உங்க பெருந்தன்மை பிரபா...''

''அப்படி இல்லை, நிறைய குடும்பங்களில் வெற்றி அடையும் போது அதை பங்கிட்டு கொள்ளவும் கொண்டாடவும் பலர் வருவார்கள். ஆனால் தோல்வி அடைந்து அடுத்து என்ன செய்வது என்று திக்குத் தெரியாமல் சோர்ந்து நிற்கும் போது எத்தனை குடும்பங்களில் அங்கத்தினர்கள் துணை நிற்பார்கள் என்று எனக்குத் தெரியாது. நீங்க நின்றீர்கள். அதை என்னால் மறக்கவோ முடியாது. மாமா ஏற்பாடு செய்த வங்கி கடன் உதவி ஆகட்டும். நீ வேலை பார்த்து கொண்டு இருந்ததை விட்டு விட்டு வந்தது ஆகட்டும். ஐடியா கொடுத்த அம்மா ஆகட்டும், நீங்க ஸ்பெஷல் தான்.''

''நாங்க மூவரும் பின்னால் இருந்தாலும், உங்களின் நீண்ட நாள் கனவை கெடுத்து விட்டோம் என்ற எண்ணத்தை மனத்தில் வைத்து கோபம் கொள்ளாமல், உங்க முழு உழைப்பைக் கொடுத்தது தான் தொழிலின் வெற்றிக்கு முதல் காரணம். சரி பேசிக் கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? இன்று பத்து மணிக்கு சூப்பர் குட் பிலிம்ஸில் பேச வேண்டும். மறந்து விட்டதா? நேரமாகிறது. சீக்கிரம் கிளம்புங்க'' என்று அவன் முதுகை பிடித்து குளியல் அறையில் தள்ளி விட வினாடியில் தொழிலில் கவனம் ஆனான் பிரபாகர்.

''அம்மாவிடம் ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு போகலாம்'' என்று அழைத்து கொண்டு வந்த திவ்யா வுடன் அம்மாவின் காலில் விழுந்தான் பிரபாகர்.

''எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா!''

''ஏய், என்னடா இது? நல்லா இருங்க செல்லங்களா, என்ன இது திடீர் என்று இப்படி காலில் விழுந்து விட்டீர்கள்?'' என்று ஆசீர்வாதம் செய்தபடி அவர்களின் தோளை பற்றி எழுப்பி விட்டார் பூங்குழலி.

''நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று சொல்வாங்க. நம்ம வீடு இப்படி இருப்பதற்கு காரணம் நீதானேம்மா...? உன் காலில் விழுந்தால் என்ன தப்பு?'' என்று உடன் வந்தார் சுப்ரமணியன்.

''போதுமே, நீங்களும் சேர்ந்து கொண்டீர்களா? இனிமேல் நான் வாயே திறக்க முடியாது. எல்லாரும் நல்லா இருங்க. அவ்வளவு தான். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒவ்வொரு ஏமாற்றம். ஆனால் அதை எல்லாம் ஒதுக்கி வைத்து இப்ப சேர்ந்து இருப்பதன் மூலம் சந்தோஷமாக இருக்கிறோம் என்றால் அதற்கு காரணம் நாம் துன்பங்களை ஒதுக்கி வைத்து வாழக் கற்று கொண்டது தான். அந்த சந்தோஷம் இனி வரும் காலம் முழுவதும் தொடர வேண்டும் என்பது தான் இறைவனிடம் என் பிரார்த்தனை.''

''உன் பிரார்த்தனை நிறைவேறட்டும். ஆனால் அதற்கு முன்னால் பிரபாவின் ஆசை நிறைவேறி விட்டதா?''

''ஆமா மாமா, சினிமாவில் டைட்டில் போடும் போது அதில் என் பெயர் வரும். அதற்கு காரணம் நீங்க தான். சினிமாவில் கதாநாயகன் மட்டுமே முக்கியம் என்று இல்லை. சினிமா துறையில் எப்படியும் ஜெயிக்கலாம் என்று ஊருக்கு காட்டலாம். உணவு உபசரிப்பு என்று தலைப்பில் என் பெயர் சில

வினாடிகள் வருவதற்கு காரணம் நீங்க தான். அதுவும் நீங்க கெடு வைத்த அதே சூரியகுமார் படமே தான். அந்த படத்தில், அவரின் பெயருக்கு முன்னால் என் பெயர் வரப் போகிறது. சினிமாவில் சாதிக்க கதாநாய கனாக தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிரபா கேட்டரிங் சர்வீஸ், என்ற பெயர் வரும். அதுவே என் வெற்றிக்கு அடையாளம்'' என்று பெருமையாகச் சொல்ல மற்ற மூவரும் அவனை அதே பெருமிதத்துடன் பார்த்தனர்.

பிரபா கேட்டரிங் சர்வீஸ் உணவகம் நடத்த பயிற்சி பெற்று பட்டத்துடன் இருந்த திவ்யா, பேங்க்கில் லோன் ஏற்பாடு செய்து தந்த சுப்ரமணியன், உழைக்க அஞ்சா பூங்குழலி, இந்த மூன்று பேரின் ஆதரவும் உழைப்பும் கை கொடுக்க, நிறுவனத்தில் பணி புரியும் அங்கத்தினர்களின் ஆதரவை ஒருங்கிணைப்ப துடன் தன் உழைப்பையும் சேர்த்து கொடுத்த பிரபாகரின் முயற்சி இன்று சிறப்பாக கொடி கட்டி பறக்கிறது.

எந்த டிபன் காப்பியால், அவன் நடிகன் ஆகும் வாய்ப்பை இழந்தானோ, அதே காப்பி டிபனை அந்த இயக்குநருக்கே கொடுத்து அவர் படத்திலேயே அவனுடைய பெயர் வெள்ளி திரையில் மின்ன வாய்ப்பு பெற்று விட்டான் பிரபாகர்.

வாழ நினைத்தால் வாழலாம்.

வழியா இல்லை பூமியில்...?

★

அமுதவல்லி கல்யாணசுந்தரம்

வாழ நினைத்தால் வாழலாம்